
www.facebook.com/ebooksintamil

விற்பனையில் சாதனை

2 ஆம் பதிப்பு




# ஜாதகம் பயன்படுத்துவது எப்படி?



ஜோதிடம் குறித்துச் சாதாரண மனிதனைக் குழப்பும் பல்வேறு விஷயங்களை விளக்கும் நடுநிலையான, நேர்மையான, தெளிவான நூல். மேலும் குறிப்புகள் பின் அட்டையில்...

BLACKHOLE

என். கணேசன்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# ஜாதகம்

# பயன்படுத்துவது

# எப்படி ?




**என்.கணேசன்**

BLACKHOLE

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

ஜாதகம் பயன்படுத்துவது எப்படி?
Jathagam Payanpatuthuvathu Yeppadi?

Author: N.Ganeshan ©

First Edition: Sep 2013
Second Edition: Aug 2014

96 Pages, Price Rs. 90/-

Printed at: Chennai Micro Print (P) Ltd. Chennai.

ISBN 978-93-81098-20-2

Published by:
Blackhole Media Publication Limited,
No.7/1, 3-rd Avenue, Ashok Nagar,
Chennai-600 083. India.

Cell : 9600123146

Landline: 044 43054779

Email: **blackholemedia@gmail.com,**
admin@blackholemedia.in

Web: **www.blackholemedia.in**

வயலில் இட்ட விதை
பன்மடங்காகப் பெருகுவதைப்
போல ஒருவர் செய்த
நல்வினை, தீவினை பிறவி
தோறும் தொடர்ந்து
வருகிறது.
—வாரியார் சுவாமிகள்



**Publisher:**
***F.M.Bilal***
**Editor:**
***S.Y. Narayanan***

All rights reserved. no part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, digital, photocopy, recording, or any other- except for brief quotations in printed reviews, without the prior permission of the publisher

தபாலில் பெற,
**தொடர்பு கொள்க:**
பதிப்பாளர்,
பிளாக்ஹோல் மீடியா
பப்ளிகேஷன் லிமிடெட்,
எண்.7/1, 3-வது அவென்யு,
அசோக் நகர்,
சென்னை-600 083.
**செல்பேசி:**
**9600123146**
**மின்னஞ்சல்:**
**blackholemedia@gmail.com**
admin@blackholemedia.in,
**இணையதளம்:**
www.blackholemedia.in

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



01. ஜோதிடத்தின் மூலமும் ஆராய்ந்தவர்களும் 09
02. ஜாதகம் நம் பூர்வ ஜென்மக் கணக்கு! 12
03. கிரகங்கள், நட்சத்திரங்கள், தசா புக்திகள் 15
04. லக்னம், 12 வீடுகள்! 21
05. கிரகங்களின் காரகத்துவம், பார்வைகள், உச்ச- நீச்ச- நட்பு வீடுகள் 25
06. சில ஜோதிட சொற்றொடர்களுக்கு விளக்கம் ! 30
07. ஜாதக பலன்களை அறியும் முறை 36
08. யோகங்கள் 40
09. சில அதிர்ஷ்ட ஜாதக உதாரணங்கள் 46
10. ஒரு துரதிர்ஷ்ட ஜாதக உதாரணம் 55
11. அதிர்ஷ்டமா, துரதிர்ஷ்டமா? -ஒரு வித்தியாச ஜாதகம் 59
12. ஜாதகம் ஏன், எப்போது பார்க்க வேண்டும்? 64
13. ஜாதகம் எப்போது பார்க்கக் கூடாது? 66
14. மதியா? விதியா? 68
15. முழுமையான நல்ல, கெட்ட காலங்கள் உண்டா? 70
16. கோசாரம் முக்கியமா? தசா புக்தி முக்கியமா? 72

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

17. நல்ல காலங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? 74

18. கெட்ட காலங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? 76

19. கற்கள், எண்கள், பூஜைகள் அதிர்ஷ்டம் தருமா? 78

20. கெட்ட காலங்களில் பரிகாரங்கள் என்னென்ன? 81

21. ஒருவர் விதியை இன்னொருவர் விதி மாற்றுமா? 84

22. ஜோதிடர்கள் கூறும் பலன்கள் வேறுபடுவதேன்? 86

23. ஏமாற்று ஜோதிடர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்! 89

24. அரைகுறை ஜோதிட அறிவு அபாயமே! 91

25. விதி வழிப் பயணத்தில் மறக்கக் கூடாத உண்மைகள்! 94

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# முன்னுரை!

இக்காலத்தில் எல்லா துறைகளிலும் மனிதர்களிடம் நேர்மையான அணுகுமுறை, முழுமையான அறிவு, மனிதாபிமானமுள்ள அக்கறை ஆகியவை குறைந்து வருகின்றன என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. இதில் ஜோதிடமும் விதிவிலக்கல்ல. இதிலும் ஏமாற்றுபவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஜோதிட பலன்கள் சொல்வதோடு நின்று விடாமல் பரிகாரம் செய்கிறேன், கஷ்டத்தை வேரோடு பிடுங்கி எறிகிறேன், உச்சாணிக் கொம்பில் உன்னை உட்கார வைக்கிறேன் என்றெல்லாம் ஆசை காட்டி, வந்தவர்களிடம் பெரிய தொகையைக் கபளீகரம் செய்யும் பாதகர்கள் இருக்கிறார்கள். ஏற்கெனவே கஷ்டத்தில் இருப்பவர்களை ஏமாற்றிப் பணம் பிடுங்கி மேலும் அதிகக் கஷ்டத்தில் தள்ளி விடும் நீசத்தனத்தைச் செய்கிறார்கள்.

சில நேரங்களில் இப்படிப்பட்ட ஜோதிடர்கள் செய்யும் அக்கிரமச் செயல்களால் ஜோதிடத்தின் மீதே மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது. ஆனால் எப்படி சில மருத்துவர்களின் தவறை வைத்து மருத்துவ விஞ்ஞானமே பொய் என்று சொல்லி விட முடியாதோ அதே போல சில ஏமாற்று ஜோதிடர்களை வைத்து ஜோதிடமே பொய் என்ற முடிவுக்கும் வருவது சரியல்ல.

ஜோதிட சாஸ்திரம் கடல் போன்றது. அதை முழுதும் நீந்திக் கடந்தவர் இல்லை. முற்றிலும் அறிந்தவரும் இல்லை. ஆனாலும் அந்தக் கடலில் ஓரளவு நீந்திப் பயணித்தவர்களும், ஓரளவு மூழ்கி முத்தெடுத்தவர்களும் அநேகர். அந்த அநேகரில் முதல் நிலையில் இல்லாவிட்டாலும் கடைநிலையிலாவது நிற்க முடிந்த தகுதி, முப்பதாண்டு காலத்திற்கு மேல் ஜோதிடத் துறையில் அனுபவம் உள்ள எனக்கு உண்டு.

கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே எனக்கு ஜோதிடத்தில் ஆர்வம் ஆரம்பித்திருந்தது. துவக்கத்தில் நியூமராலஜி, கைரேகை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

சாஸ்திரம் இரண்டிலும் ஆரம்பித்த ஆர்வம், பின் அவற்றைக் கடந்து சென்று ஜாதகம் பார்ப்பதில் ஏற்பட்டு, அதில் தங்கி ஆழப்பட்டது. அந்தக் கால கட்டத்திலேயே ஏராளமான ஜோதிட நூல்களைப் படித்திருக்கிறேன். எனக்கு நன்றாகத் தெரிந்தவர்களிடம் இருந்தெல்லாம் ஜாதகங்கள் வாங்கி அவற்றை அக்காலத்தில் நிறையவே அலசி இருக்கிறேன்.

அந்தக் கிரக நிலைகளின்படி நான் படித்த புத்தகங்கள் சொல்லும் பலன்கள் என்ன என்பதையும், எனக்கு நன்றாகத் தெரிந்த அவர்கள் நிஜ வாழ்க்கை, நேரம் எல்லாம் எப்படி இருக்கின்றன என்பதையும் ஒப்பிட்டுப் பார்ப்பேன். பெரும்பாலான விஷயங்களில் அடிப்படைப் புத்தகங்கள் சொல்வதும், அந்த ஜாதகர்களின் உண்மை நிலையும் நிறையவே வேறுபட்டிருக்கும். ஏனப்படி? என்று மேலும் ஆழமாகச் சென்று காரணம் புரியும் வரை ஓயாமல் படிக்கும் தாகம் எனக்கு அக்காலத்திலேயே இருந்திருக்கிறது.

கல்லூரி நாட்களில் இப்படி ஆரம்பித்த என் ஜோதிட ஆராய்ச்சியும் அனுபவமும் நீண்ட காலம் தொடர்ந்தது. பிறகு கதைகள் எழுதும் ஆர்வம் ஆழ்மனசக்தி ஆர்வம், ஆன்மீக ஆர்வம், என்று நான் மற்ற துறைகளில் பயணப்பட்டு, முன்பு போல ஜோதிடத்திற்கு அதிக நேரம் ஒதுக்க முடியாத போதும், ஜாதகங்கள் சம்பந்தமான கேள்விகளுடன் காத்திருந்தாவது என்னை அணுகுபவர்கள் பலர் இன்றும் இருக்கிறார்கள். எழுத்தாளராக அல்லாது ஒரு ஜோதிடராக மட்டுமே என்னை அறிபவர்களும் நிறைய பேர் இருக்கிறார்கள்.

இத்தனை வருட ஜோதிட அனுபவம் இருக்கும் எழுத்தாளரான நீங்கள் ஏன் ஒரு ஜோதிடம் சம்பந்தப்பட்ட நூல் எழுதக்கூடாது என்று என்னை அறிந்தவர்கள் அடிக்கடி கேட்பார்கள். ஆனால் ஜோதிடம் பற்றிய புத்தகங்கள் ஏராளமாக வந்து விட்டன. ஜோதிடத்தின் அடிப்படை அம்சங்கள் தொடங்கி ஜோதிடத்தின் மிக நுட்பமான விளக்கங்கள் வரை பல நூல்கள் மூலமாகச் சொல்லப்பட்டு விட்டன. ஜோதிட ஜாம்பவான்கள் முதல் ஜோதிடத்தில் ஆர்வம் உள்ளவர்கள் வரை நிறைய எழுதிக் குவித்து விட்டனர். அந்த வகை நூல்களில் மேலும் ஓர் எண்ணிக்கையைக்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

கூட்ட எனக்கு ஆர்வம் இருக்கவில்லை. ஆனாலும் ஜோதிடத்தில் ஒரு நூல் எழுத வேண்டும் என்ற கோரிக்கையை என்னால் ஒதுக்க முடியவில்லை.

அதனால் வழக்கமான ஜோதிட நூலாக இல்லாமல் ஜோதிடத்தைப் பற்றி சாதாரண மனிதனைக் குழப்பும் விஷயங்களைத் தெளிவுபடுத்தும் நடுநிலையான, நேர்மையான, தெளிவான நூல் ஒன்றை வித்தியாசமாக எழுத எண்ணினேன்.

ஜோதிட நுட்பங்கள் அறியாத, புரியாத, சாதாரண மனிதர்களுக்கு ஏன் ஜாதகம் பார்க்க வேண்டும், எப்போது ஜாதகம் பார்க்க வேண்டும், எப்போதெல்லாம் பார்க்க வேண்டியதில்லை, ஜாதகத்தைப் பயன்படுத்துவது எப்படி, நேர்மையற்ற ஜோதிடர்களிடம் ஏமாறாமல் இருப்பது எப்படி, போலிகளைக் கண்டுபிடிப்பதெப்படி, பெயரை மாற்றினால் விதி மாறுமா, அதிர்ஷ்டக் கற்களை அணிந்து கொண்டால் கஷ்டங்கள் விலகி விடுமா, கிரகங்களின் நன்மை தீமைகளைப் பூஜை புனஸ்காரங்களால் மாற்றி விட முடியுமா, கோச்சாரம் முக்கியமா, ஜாதகம் முக்கியமா, எல்லாமே ஜாதக விதிப்படி தான் என்றால் மனிதனின் அறிவுக்கும், முயற்சிகளுக்கும் மதிப்பே இல்லையா, ஜோதிட சாஸ்திரத்தில் எதை எந்த அளவு நம்பலாம், என்றெல்லாம் நேர்மையாகச் சொல்லக் கூடிய புத்தகம் எதுவும் நானறிந்த வரை, இது வரை வந்ததில்லை என்றே சொல்ல வேண்டும்.

‘‘எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு’’

என்கிறார் திருவள்ளுவர். ஜோதிடம் குறித்து ஒன்றுக்கொன்று முரணான கருத்துகளைக் கேட்கவும், படிக்கவும் நேர்கிற போது உண்மை அறிய முடியாமல் குழம்பும் சாதாரண மனிதர்களுக்கு, உண்மை நிலையைத் தெளிவாக விளக்கி உதவுவது தான் இந்த நூலின் நோக்கம்.

ஆனால் வாசகர்களுக்கு மேலே சொன்ன கேள்விகளுக்குப் பதில் தந்து வழிகாட்ட ஓரளவாவது ஜாதகம் பற்றிய அடிப்படை ஞானம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

தேவை என்பதால் முதலில் எட்டு அத்தியாயங்கள் வரை ஜாதக அடிப்படை விஷயங்களைச் சுருக்கமாக விளக்கி இருக்கிறேன். ஜாதகம் பற்றி இதுவரை எதுவுமே அறியாதவர்களுக்கு ஜாதக முக்கிய அடிப்படை விஷயங்கள் தலைசுற்ற வைக்கும் அளவு குழப்பலாம். ஆனால் ஜோதிடர்கள் உங்களைக் குழப்பாமல் இருக்க ஓரளவாவது தெரிந்து வைத்துக் கொள்வது அவசியம் என்பதை மனதில் கொள்ளுங்கள். ஒன்பது, பத்து, பதினோராம் அத்தியாயங்களில் சில பிரபலங்களின் ஜாதகங்கள் மூலமாகப் பலன்களை விளக்கி இருக்கிறேன். பன்னிரண்டாம் அத்தியாயம் முதல் சாதாரண மனிதர்களுக்கு ஜாதகத்தைப் பயன்படுத்தும் விதத்தை விளக்க ஆரம்பித்திருக்கிறேன்.

முக்கியமாக நல்லதாகவோ, கெட்டதாகவோ எப்படி ஜாதகம் அமைந்து விட்ட போதிலும் அதைப் பயன்படுத்தி நன்மைகளை பெருக்கிக் கொள்ளவும், தீமைகளைக் குறைத்துக் கொள்ளவும் அறிவுபூர்வமான வழிகளை இந்த நூலில் நீங்கள் காணலாம்.

வாருங்கள், ஜோதிடத்தின் மெய்ப் பொருள் காண்போம். ஜாதகத்தை முறையாகப் பயன்படுத்தும் விதத்தையும் அறிவோம்....

**-என்.கணேசன்**

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil




# ஜோதிடத்தின் மூலமும் ஆராய்ந்தவர்களும்!

ஜோதிடம் பற்றிய ஒரு தெளிவான பார்வை பெற அதன் மூலம் என்ன என்பதை அறிந்து கொள்வது உதவும் என்பதால் அதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

ஜோதிடம் வேதத்தின் ஆறு அங்கங்களில்(சிட்சை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிடம், கல்பம்) ஒன்றாகச் சொல்லப்படுகிறது. ஆறு அங்கங்களில் ஜோதிடம் கண் போன்றது என்கிற அளவுக்கு முக்கியமாகச் சொல்லப்பட்டது. ஆனால் வேத காலத்தில் சொல்லப்பட்ட ஜோதிடம் முக்கியமாக வான சாஸ்திரத்தைப் பற்றி விவரித்ததே தவிர, தனி மனித வாழ்வை நிர்ணயிக்கும் ஜாதக சாஸ்திரத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. ஜோதிடத்தில் ஜாதக சாஸ்திரம் பிற்காலத்தில் தான் முனிவர்களாலும், அறிஞர்களாலும் ஆராயப்பட்டு எழுதப்பட்டது என்பதே உண்மை.

நம் முனிவர்களும், அறிஞர்களும் அது குறித்து எழுதும் முன்பே கிரேக்கர்கள் அதில் ஆர்வம் காட்ட ஆரம்பித்து விட்டிருந்தார்கள். ஒரு மனிதன் பிறக்கும் நேரத்தில் கோள்கள் இருக்கும் நிலைகள் தனிமனித வாழ்க்கையின் சில அம்சங்களைத் தீர்மானிக்கின்றன என்பதைக் கிரேக்க அறிஞர்கள் கண்டிருந்தார்கள். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தான் ஜாதக சாஸ்திரம் முக்கியத்துவம் பெற்றுப் பிரபலம் அடைய ஆரம்பித்தது.


https://lankathamilnews.blogspot.com

*அக்காலத்தில் கிரேக்க அறிஞர்கள் மூலம் இந்தியாவுக்கு ஜாதக சாஸ்திரம் வந்தது என்றும் அதை யவன ஜாதகம் என்ற பெயரில் இங்கு சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்கள் என்றும், அதுவே இந்தியாவின் முதல் ஜாதக சாஸ்திர நூல் என்றும் சில வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.*

*எந்தத் துறையிலும் ஆழம் வரை சென்று ஆராயும் தனித்தன்மை பெற்றிருந்த அக்கால இந்திய அறிஞர்களும், முனிவர்களும் பிற்காலங்களில் ஜாதக சாஸ்திரத்தில் மிகுந்த ஆர்வம் காட்டி ஆராய்ச்சிகள் செய்ய ஆரம்பித்தனர். அவர்கள் ஆரம்பத்தில் எழுதிய நூல்களில் பல நமக்குக் கிடைக்காமலேயே அழிந்து போய் விட்டன என்ற போதும் சில நூல்கள் பாதுகாக்கப்பட்டு நமக்கு கிடைத்திருக்கின்றன. அவற்றை வைத்தே இன்றைய ஜாதக சாஸ்திரம் நம்மால் கணிக்கப்படுகின்றது.*

*அவற்றில் முக்கியமானவை இவை-*

*1) பராசர மகரிஷியின் ''ப்ரிஹத் பராசர ஹோரரை சாஸ்திரம்'' - (ஜாதக சாஸ்திர நூல்களிலேயே மிகப்பழமையானது இது என்று கருதப்படுகிறது).*

*2) வராஹமிஹிரரின் ''ப்ரிஹத் சம்ஹிதா'' மற்றும் ''ப்ரிஹத் ஜாதகா'' (இவை இரண்டும் ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை).*

*3) இராமனுஜரின் ''பாவார்த்த ரத்னாகர்''*

*4) பிருகு மகரிஷியின் ''பிருகு சூத்ரம்''*

*5) கல்யாண வர்மரின் ''சாராவளி'' (பத்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இரண்டு தொகுதிகள்).*

*6) வெங்கடேசரின் ''சர்வார்த்த சிந்தாமணி'' (13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது)*

*7) காளிதாசரின் ''உத்தர கலாம்ரிதம்''*

*8) மந்த்ரேஸ்வரரின் '' பால தீபிகா'' (16 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது)*

*9) கணேசர் எழுதிய ''ஜாதக அலங்காரம்'' (17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது)*

www.facebook.com/ebooksintamil


பழம்பெருமை வாய்ந்த உலக நாடுகள் பலவற்றிலும் ஜோதிடம் பரவலாக நம்பப்பட்டு வந்துள்ளது. முக்கியமாக கிரேக்கத்தைப் போலவே எகிப்து, சீனம், அரபுநாடுகள் ஆகியவற்றில் ஜோதிட ஆர்வமும், பின்பற்றலும் அதிகமாகவே இருந்திருக்கின்றன. தாந்தே (Dante), பித்தகோரஸ் (Pythogoras), பேகன் (Bacon), டெமொக்ரேடிஸ் (Democrates), கெப்ளர் (Kepler) முதலான உலக அறிஞர்கள் பலரும் ஜோதிடத்தில் ஆர்வம் காட்டினார்கள். நியூட்டன் (Newton) கூட வானவியல் மற்றும் கணிதத்தோடு ஜோதிடத்திலும் தனி ஈடுபாடு காட்டி இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்தியாவில் பின்பற்றும் ஜாதக சாஸ்திரத்தைப் போல் அல்லாமல் மற்ற உலகநாடுகள் பின்பற்றிய ஜோதிட முறைகளில் இருந்து பல விதங்களில் வேறுபட்டிருந்தன.

மேலே குறிப்பிட்டுள்ள இந்திய ஜோதிட நூல்களை எழுதியவர்கள் அனைவருமே முனிவர்கள் மற்றும் அறிஞர்கள். அந்த நூல்கள் ஒவ்வொன்றும் வேறுபட்ட காலகட்டங்களில், நூற்றாண்டுகளில் எழுதப்பட்டவை. அடிப்படையே இல்லாத ஒன்றாக ஜாதக சாஸ்திரம் இருந்திருக்குமேயானால், நிஜ அனுபவத்தில் பலன்களைச் சொல்வதில் உண்மைத் தன்மை இல்லாதிருக்குமேயானால் ஜாதக சாஸ்திரம் இத்தனை நீண்ட காலம் தாக்குப் பிடித்திருந்திருக்க முடியாது அல்லவா?


https://lankathamilnews.blogspot.com

# ஜாதகம் நம் பூர்வ ஜென்மக் கணக்கு!



பல அறிஞர்களால் பல நூறு வருடங்களாக ஆராயப்பட்டும் எழுதப்பட்டும் வந்திருக்கிற ஜாதக சாஸ்திரம் பொய் என்று ஒதுக்கித் தள்ள முடியாது என்ற முடிவுக்கு வரும் பட்சத்தில் சில கேள்விகள் அறிவுபூர்வமாக எழுவது இயற்கை. அந்த அறிவுபூர்வமான கேள்விகளுக்கு விடைகளை இந்த நூல் நெடுக நாம் பார்க்கலாம்.

முதலில் ஜாதகம் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். ஜாதகம் என்பது நம் பூர்வ ஜென்மக் கணக்கு என்று சொல்லலாம். ஒவ்வொரு ஜாதகத்தின் தொடக்கத்திலும் இவ்வரிகள் எழுதப்பட்டிருக்கும்.

'ஜனனி ஜன்ம சௌக்யானம், வர்த்தனி குல சம்பதம்
பதவீம் பூர்வ புண்யானாம், லிக்யதே ஜன்ம பத்ரிகா'

இதன் பொருள் என்னவென்றால் இந்த ஜன்மத்தில் ஒரு மனிதன் அடையக்கூடிய நன்மை, தீமைகள் அவன் பூர்வ ஜன்மத்தில் செய்த பாவ புண்ணியங்களின் அடிப்படையில் கணிக்கப்பட்டு ஜாதகக் கட்டத்தில் கிரகங்களின் அமைப்பில் சங்கேதமாகக் குறிக்கப்பட்டுள்ளது என்பது தான். முந்தைய பிறவிகளில் நாம் சேர்த்து வைத்திருக்கும் பாவபுண்ணியக் கணக்கு தான் ஜாதகம். கர்ம பூமியான இந்த உலகில் இரண்டு கணக்கையும் தீர்த்து விட்டுப் போக நாம் பிறந்திருக்கிறோம்.

ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு விளைவு இருக்கின்றது. சில விளைவுகள் உடனடியாக நிகழ்ந்து விடுகின்றன. சில விளைவுகள் நீண்ட காலம் கழித்து நிகழ்கின்றன. சில விளைவுகளைச் சந்திக்க அடுத்த பிறவி வரை காக்க வேண்டி வருகிறது. நல்ல விளைவுகள் அதிகம் சம்பாதித்தவர்கள் நல்ல யோக நேரத்தில் யோக ஜாதகத்துடன் பிறக்கிறார்கள். அதே போல கெட்ட விளைவுகள் அதிகம் சம்பாதித்தவர்கள் மோசமான நேரத்தில், பிரச்சினைகள் நிறைந்த ஜாதகத்துடன் பிறக்கிறார்கள்.

அதே போல சில தேடல்களும் திறமைகளும் ஒரே பிறவியில் முழுமை அடைந்து விடுவதில்லை. அவை முழுமை அடையவும் இன்னொரு பிறவி தேவைப்படுகிறது. அந்தத் தேடல்களோடும் திறமைகளோடும் நாம் பிறக்கிறோம்.

மிகச்சிறு வயதிலேயே சில துறைகளில் அல்லது சில விஷயங்களில் அபாரமான திறமை கொண்டவர்களாக இருக்கும் குழந்தைகளைப் பார்க்கிறோம். பல ஆண்டுகளாகப் பயிற்சி பெற்றும் அந்த அளவுக்குத் திறமை அல்லது ஆளுமை பெற முடியாமல் பெரியவர்களே திணறும் போது அந்த சிறுவர் அல்லது சிறுமியர் மேதைமை நம்மைப் பிரமிக்க வைப்பதுண்டு. அது அபூர்வமாய் தற்செயலாய் பெற்றதல்ல. முற்பிறவியின் உழைப்பின் பலன், அந்தத் திறமையின் தொடர்ச்சி வெளிப்பாடு என்பது தான் உண்மை. அந்தத் திறமைகளும் அதற்கான அனுகூல சூழ்நிலைகளும் அந்த ஜாதகரின் ஜாதகத்தில் பிரதிபலிக்கும்.

நன்மைகள் மட்டுமே செய்து வாழ்பவர்களும் தீமைகள் மட்டுமே செய்து வாழ்பவர்களும் மிக அபூர்வம். பல நன்மைகள் செய்து வாழ்ந்தவர்கள் சில தீமைகள் செய்து விடுவதும், பல தீமைகள் செய்து வாழ்ந்தவர்கள் சில நன்மைகள் செய்து விடுவதும் இயல்பே. அதற்கேற்றாற் போல எத்தனை யோக ஜாதகமானாலும் சம்பாதித்திருந்த தீமைகளுக்கான மோசமான பலனைத் தக்க சமயங்களில் அனுபவிக்க வேண்டி வரும்படியும், எத்தனை மோசமான ஜாதகமானாலும் செய்திருந்த நன்மைகளின் நல்ல பலனைத் தக்க சமயங்களில் அனுபவிக்க முடியும்படியும் அவர்கள் ஜாதகம் அமைந்திருக்கும். அதாவது அப்படி அனுபவிக்கும் படியான காலத்தில் அவர்கள் பிறந்திருப்பார்கள்.

சரி, இனி ஜாதகத்தின் அடிப்படை அம்சங்களைப் பார்ப்போம். ஜாதக அடிப்படை விஷயங்களை மட்டுமே எழுத முற்பட்டாலும் அதிலேயே பல நூறு பக்கங்கள் எழுதும் அளவு விஷயங்கள் உள்ளன. அவற்றை விவரிப்பது இந்த நூலின் நோக்கம் இல்லை என்றாலும் மிக முக்கிய அடிப்படை விஷயங்களைச் சொல்லி ஜாதகம் கணிக்கும் விதம், பலன் சொல்லும் விதம் இவற்றில் எவை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்பதை எல்லாம் சுருக்கமாகத் தெரிந்து கொள்வது நல்லது. அப்படித் தெரிந்து கொள்வது ஜோதிடர்கள் பலன்களை எந்த அடிப்படையில் சொல்கிறார்கள் என்பதைத் தோராயமாகவாவது அறிந்து கொள்ள உதவும். போலி ஜோதிடர்களிடம் ஏமாறாமல் இருக்கவும் உதவும். எனவே மிக முக்கிய அடிப்படைகளை மிகச் சுருக்கமாக சில அத்தியாயங்களில் பார்ப்போம்.



# கிரகங்கள், நட்சத்திரங்கள், தசா புக்திகள் !

ராசி மண்டலத்தை மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகளாகவும், அஸ்வினி முதல் ரேவதி வரையிலான 27 நட்சத்திரங்களாகவும் நம் முன்னோர்கள் பிரித்துள்ளனர். ஒவ்வொரு நட்சத்திரமும் நான்கு பாதங்களைக் கொண்டது. 27 நட்சத்திரங்களும் பின் வரும் விதத்தில் 12 ராசிகளில் அடங்குகின்றன.

| ராசிகள் | நட்சத்திரங்கள் |
|---|---|
| மேஷம் | அசுவினி, பரணி, கார்த்திகை 1-ஆம் பாதம் முடிய... |
| ரிஷபம் | கார்த்திகை 2-ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2-ஆம் பாதம் முடிய... |

*மிதுனம்* -மிருகசீரிஷம் 3-ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3-ஆம் பாதம் முடிய...

*கடகம்* -புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம் முடிய...

*சிம்மம்* -மகம், பூரம் உத்திரம் 1-ஆம் பாதம் முடிய...

*கன்னி* - உத்திரம் 2-ஆம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ஆம் பாதம் முடிய

*துலாம்* - சித்திரை 3-ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ஆம் பாதம் முடிய...

*விருச்சிகம்* -விசாகம் 4-ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய...

*தனுசு* -மூலம், பூராடம், உத்திரம் 1-ஆம் பாதம் முடிய...

*மகரம்* -உத்திராடம் 2-ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ஆம் பாதம் முடிய...

*கும்பம்* -அவிட்டம் 3-ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ஆம் பாதம் முடிய..

*மீனம்* - பூரட்டாதி 4-ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய...

ஜாதகக் கட்டங்களிலேயே சொல்வதென்றால் இப்படிப் பிரிக்கப் பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **மீனம்**<br>பூரட்டாதி 4<br>உத்திரட்டாதி,<br>ரேவதி | **மேஷம்**<br>அசுவினி,<br>பரணி,<br>கார்த்தி<br>கை 1- | **ரிஷபம்**<br>கார்த்திகை 2, 3,4 ரோகிணி, மிருகசிரிஷம் 1,2 | **மிதுனம்**<br>மிருகசிரிஷம் 3,4<br>திருவாதிரை,<br>புனர்பூசம் 1,2,3 |
| **கும்பம்**<br>அவிட்டம்3,4<br>சதயம்,<br>பூரட்டாதி<br>1,2,3 | ***ராசிகள் நட்சத்திரங்கள்*** | | **கடகம்**<br>புனர்பூசம் 4<br>பூசம்,<br>ஆயில்யம் |
| **மகரம்**<br>உத்திராடம் 2<br>திருவோணம்,<br>அவிட்டம் 1,2 | | | **சிம்மம்**<br>மகம்,<br>பூரம்<br>உத்திரம் 1 |
| **தனுசு**<br>மூலம்,<br>பூராடம்,<br>உத்திரம் 1 | **விருச்சிகம்-**<br>விசாகம் 4<br>அனுஷம்,<br>கேட்டை | **துலாம்**<br>சித்திரை 3,4<br>சுவாதி,<br>விசாகம்<br>1,2,3 | **கன்னி**<br>உத்திரம் 2,3,4<br>அஸ்தம்,<br>சித்திரை 1,2 |

*12 ராசிகளை ஏழு கிரகங்கள் ஆட்சி புரிகின்றன.*

| *ராசிகள்* | *- ஆட்சி கிரகம்* |
|---|---|
| *மேஷம், விருச்சிகம்* | *- செவ்வாய்* |
| *ரிஷபம், துலாம்* | *- சுக்கிரன்* |
| *மிதுனம், கன்னி* | *- புதன்* |
| *கடகம்* | *- சந்திரன்* |
| *சிம்மம்* | *- சூரியன்* |
| *தனுசு, மீனம்* | *- குரு* |
| *மகரம், கும்பம்* | *- சனி* |

*(ராகு, கேது என்ற சாயா கிரகங்கள் எந்த ராசியையும் ஆட்சி புரிவதில்லை)*

| | | | |
|---|---|---|---|
| குரு | செவ்வாய் | சுக்கிரன் | புதன் |
| சனி | ராசி அதிபதிகள் | | சந்திரன் |
| சனி | | | சூரியன் |
| குரு | செவ்வாய் | சுக்கிரன் | புதன் |

*27 நட்சத்திரங்களை ராகு கேது உட்பட 9 கிரகங்களும் ஆட்சி புரிகின்றன.*

| கிரகம் | நட்சத்திரங்கள் |
|---|---|
| கேது | - அஸ்வினி, மகம், மூலம் |
| சுக்கிரன் | - பரணி, பூரம், பூராடம், |
| சூரியன் | - கார்த்திகை , உத்திரம், உத்திராடம். |
| சந்திரன் | - ரோகிணி, ஹஸ்தம், திருவோணம், |
| செவ்வாய் | - மிருக சீரிஷம் , சித்திரை, அவிட்டம் |
| ராகு | - திருவாதிரை, சுவாதி , சதயம் |
| குரு | - புனர்பூசம், விசாகம் , பூரட்டாதி |
| சனி | - பூசம் , அனுஷம் , உத்திரட்டாதி |
| புதன் | - ஆயில்யம் , கேட்டை, ரேவதி |

*ஒவ்வொரு கிரகமும் ஒவ்வொரு நட்சத்திரத்தில் அந்த நட்சத்திரம் உள்ள ராசியில் தங்கும். ஆனால் சந்திரன் எந்த நட்சத்திரத்தில் இருக்கிறதோ அதுவே ஜென்ம நட்சத்திரமாகவும், அந்த ராசியே ஜென்மராசியாகவும் சொல்லப்படும்.*

*ஒருவர் எந்த நட்சத்திரத்தில் பிறந்தாரோ அந்த நட்சத்திரத்தின் கிரகமே அவரது ஆரம்ப தசையாக இருக்கும். ஒருவர் பிறந்தது*

அஸ்வினி நட்சத்திரம் என்றால் ஆரம்ப தசை கேதுவாக இருக்கும். அது முடிந்து சுக்கிரன், சூரியன், சந்திரன் என்ற வரிசையில் தசைகள் அந்த ஜாதகர் வாழ்க்கையில் வரும். பிறந்தது பரணி நட்சத்திரத்திலானால் ஆரம்ப தசை சுக்கிரனாக இருக்கும். அது முடிந்து சூரியன், சந்திரன், செவ்வாய் என்ற வரிசையில் தசைகள் ஜாதகர் வாழ்வில் தொடரும்.

இனி ஒவ்வொரு தசையும் எத்தனை வருடங்கள் என்று பார்ப்போம்.

| கிரகம் | தசை காலம் |
|---|---|
| கேது | - 7 வருடங்கள் |
| சுக்கிரன் | - 20 வருடங்கள் |
| சூரியன் | - 6 வருடங்கள் |
| சந்திரன் | - 10 வருடங்கள் |
| செவ்வாய் | - 7 வருடங்கள் |
| ராகு | - 18 வருடங்கள் |
| குரு | - 16 வருடங்கள் |
| சனி | - 19 வருடங்கள் |
| புதன் | - 17 வருடங்கள் |

ஒவ்வொரு தசையிலும் ஒன்பது கிரகங்களின் புக்திகள் அந்தத் தசை கால விகிதத்திலேயே வரும். அந்தத் தசையில் ஒவ்வொரு புக்தியிலும் ஒன்பது கிரகங்களின் அந்தரங்கள் அதே கால விகிதத்தில் வரும்.

அஸ்வினி நட்சத்திரம் ஆரம்பிக்கும் அந்த முதல் நொடியிலேயே ஒருவர் பிறந்திருந்தால் அவருக்கு கேது தசை முழுவதுமாக ஏழு ஆண்டுகள் இருக்கும். அஸ்வினி நட்சத்திரம் ஆரம்பித்து சில நிமிடங்கள் கழித்துப் பிறந்தால், அஸ்வினி நட்சத்திரம் இருக்கும் மொத்த நேரத்தில் எத்தனை நேரம் கழிந்ததோ அந்த விகிதத்தில் கழிந்து மீதமுள்ள கால அளவில் தான் கேது தசை ஜாதகத்தில் பாக்கி இருக்கும். அதனால் ஜாதகத்தில் அதைக் கணக்கிட்டு மீதம் இவ்வளவு வருடம், இவ்வளவு மாதம், இவ்வளவு நாள் என்று குறிப்பிட்டு இருப்பார்கள்.

அதனால் ஒவ்வொருவர் ஜாதகத்திலும் பிறப்பு நேரத்தில் சம்பந்தப்பட்ட தசை பெரும்பாலும் பகுதியாகத் தான் இருக்கும். தொடரும் தசைகள் மட்டுமே முழுமையாக இருக்கும்.

ஓர் கிரக தசையில், இன்னொரு கிரக புக்தி எவ்வளவு என்பதைக் கணக்கிட ஒரு எளிய வழி உள்ளது. தசா நாதனின் வருடங்களையும், புக்தி நாதனின் வருடங்களையும் கணக்கிடுங்கள். கடைசி எண் போக முன்பு உள்ளது மாதங்கள். கடைசி எண்ணை மூன்றால் பெருக்குங்கள். வருவது நாட்கள். உதாரணத்திற்கு இரண்டு பார்ப்போம்.

சூரிய தசையில் சந்திர புக்தி எவ்வளவு என்று கேட்டால் சூரிய தசை வருடம் 6 ஐ சந்திர தசை வருடம் 10 ஆல் பெருக்குங்கள். 60 வருகிறதல்லவா? ஆறு மாதம் 0 நாட்கள் தான் சூரிய தசையில் சந்திர புக்தி.

குரு தசையில் புதன் புக்தி எவ்வளவு என்று பார்க்க குரு தசை 16ஐ புதன் தசை 17 ஆல் பெருக்குங்கள். 272 வரும். மாதம் 27. கடைசி எண் 2 ஐ 3 ஆல் பெருக்குங்கள் 6 வரும். அது நாட்கள். ஆக குரு தசையில் புதன் புக்தி 27 மாதம் 6 நாட்கள். (2 வருடம் 3 மாதம் 6 நாட்கள்). சுலபமாக இருக்கிறதல்லவா?

ஒரு மனிதன் அனைத்து தசைகளையும் முழுமையாக வாழ 120 வருடங்கள் ஆகும். அது நடைமுறையில் சாத்தியம் இல்லை என்பதால் சில கடைசி தசைகளை தன் வாழ்க்கையில் ஒருவர் சந்திக்க முடியாமல் போகும். அப்படி சந்திக்க முடியாத தசைகள் மோசமான தசைகளாய் இருப்பது ஒருவரின் அதிர்ஷ்டம் என்றும் அந்த வராத தசைகள் யோகமான தசைகளாய் இருந்தால் அது துரதிர்ஷ்டம் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனாலும் ஒவ்வொரு தசையிலும் சம்பந்தப்பட்ட கிரகங்களின் புக்திகள் மூலமாக அந்த நல்ல, கெட்ட பலன்களை ஓரளவும், சம்பந்தப்பட்ட அந்தரங்கள் மூலமாக குறைந்த அளவும் ஒருவர் சந்திக்காமல் இருப்பதில்லை.



# லக்னம், 12 வீடுகள்!

ஒருவர் ஜாதகத்தில் மிக முக்கியமான ஆரம்பப் பகுதி லக்னம் எனப்படுகிறது. அந்த லக்னம் எப்படி கணிக்கப்படுகிறது என்பதையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

சூரியன் ஒவ்வொரு தமிழ் மாதமும் ராசி மாறுவார். சித்திரையில் மேஷம், வைகாசியில் ரிஷபம் என்ற வரிசையில் பங்குனியில் மீனத்தில் இருப்பார். ஒவ்வொரு மாதமும் சூரியோதயத்தின் போது பிறக்கும் குழந்தைக்கு அந்தந்த ராசியே லக்னமாக அமையும். சித்திரையில் சூரியோதயத்தில் பிறக்கும் குழந்தைக்கு லக்னம் மேஷமாகவும், வைகாசியில் சூரியோதயத்தில் பிறந்த குழந்தைக்கு லக்னம் ரிஷபமாகவும் இருக்கும். அந்த மாதத்தில் அந்த நாளில் குறிப்பிட்ட நாழிகைகள் (ஒரு நாழிகை=24 நிமிடங்கள்) வரை அந்த லக்னம் இருக்கும். அந்த நாழிகை கழிந்த பின் அடுத்த லக்னம் வரும். இப்படி, சித்திரையில் ஒரு நாள் அதிகாலையில் பிறக்கும் குழந்தையின் லக்னம் மேஷமாகவும் மறுநாள் சூரியோதயத்திற்கு முந்தைய நேரத்தில் பிறக்கும் குழந்தை மீனமாகவும் இருக்கும்.

லக்னம் தான் ஒருவருக்கு முதல் பாவம் அல்லது முதல் வீடு. அதற்கு அடுத்த கட்டம் அல்லது ராசி அவருக்கு இரண்டாம் பாவம் அல்லது இரண்டாம் வீடு. இப்படி கடிகாரச் சுற்று முறைகளில் அமைந்த பன்னிரண்டு பாவங்கள் அல்லது வீடுகளில் மனிதனுடைய வாழ்க்கையின் அனைத்து விஷயங்களும் பிரித்து தரப்பட்டு இருக்கின்றன.

முதல் பாவம் அல்லது லக்னம்:

உடல் வலிமை மற்றும் தோற்றம், பொலிவு, அடிப்படைக் குணங்கள் ஆகியவை முதல் பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப் படுகின்றன.

இரண்டாம் பாவம்:

குடும்பச் சூழ்நிலை, கண்கள், செல்வம், பேச்சுத் திறமை, ஆகியவை அந்த பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன.

மூன்றாம் பாவம்:

இளைய சகோதர, சகோதரிகள், சங்கீத ஞானம், எழுத்துத் திறன், அரசின் ஆதரவு, துணிவு, வீர தீரச் செயல்கள், உறவினர், காது, தொண்டை ஆகியவை அந்த பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன.

நான்காம் பாவம்:

கல்வி, நில புலன்கள், செல்வம், வாகனங்கள், முன்னோர் சொத்து, தாயார், சுக சௌகரியங்கள், மன நிம்மதி, கழுத்து, தோள் ஆகியவை அந்த பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன.

ஐந்தாம் பாவம்:

குழந்தைகள், பாட்டனார், பூர்வ புண்யம், மதி நுட்பம், உணர்வுகள் ஆகியவை அந்த பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும்

கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப் படுகின்றன.

ஆறாவது பாவம்:

தாய் மாமன், உடல் மற்றும் மனோ வியாதிகள், விரோதிகள், கடன், விபத்துகள் ஆகியவை அந்த பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன.

ஏழாவது பாவம்:

கணவன் அல்லது மனைவி, திருமண வாழ்க்கை, சாதுர்யம், ராஜதந்திரம், வியாபாரக் கூட்டாளி, திறமைகள் ஆகியவை அந்த பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன.

எட்டாவது பாவம்:

ஆயுள், மரணம், பெண்களுக்குத் தாலி பலம், கஷ்டப்படாமல் அல்லது எதிர்பாராமல் வரும் செல்வம், அபகீர்த்தி ஆகியவை அந்த பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப் படுகின்றன.

ஒன்பதாம் பாவம்:

தந்தை, அதிர்ஷ்டம், தான தர்ம குணம், தூர தேசப் பயணம், கருணை, தெய்வ பக்தி, ஆன்மீகச் சிந்தனைகள், பேரன் பேத்திகள், புகழ், ஆகியவை அந்த பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப் படுகின்றன.

பத்தாம் பாவம்:

தொழில், உத்தியோகம், அரசாங்கப் பதவி, விருதுகள், வெளி நாட்டுப் பயணங்கள், கௌரவம், செயல்திறன் ஆகியவை அந்த பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன.


பதினொன்றாம் பாவம்:

லாபம், மூத்த சகோதர சகோதரிகள், நண்பர்கள், சொத்து சேர்ப்பு ஆகியவை அந்த பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப் படுகின்றன.

பன்னிரண்டாம் பாவம்:

விரயம், மோட்சம், சயனசுகம், ஞானம், செலவினங்கள், பாதம் ஆகியவை அந்த பாவ ராசியின் குணாதிசயங்கள் அந்த பாவத்தில் தங்கியிருக்கும் கிரகங்கள், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்கள், அந்த வீட்டதிபதியின் வலிமை முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப் படுகின்றன.

# கிரகங்களின் காரகத்துவம், பார்வைகள், உச்ச– நீச்ச– நட்பு வீடுகள் !



ஒவ்வொரு கிரகமும் தனிப்பட்ட சிலவற்றைத் தீர்மானிக்கும் சக்தி படைத்ததாகக் கருதப்படுகிறது. அவை காரகத்துவம் என்று சொல்லப்படுகிறது.

சூரியன் - ஆத்மா, தந்தை, புகழ், ஆரோக்கியம், சக்தி ஆகியவற்றிற்கு உரியவன்.

சந்திரன் - மனம், புத்தி, தாய், கற்பனை ஆகியவற்றிற்கு உரியவன்.

செவ்வாய் - சகோதரன், வியாதி, சத்துரு, பலம் ஆகியவற்றிற்கு உரியவன்.

புதன் - கல்வி, விவேகம், தாய் மாமன், சிநேகிதர், பேச்சு ஆகியவற்றிற்கு உரியவன்.

குரு - குழந்தை, நல்லறிவு, பணம், சரீர புஷ்டி ஆகியவற்றிற்கு உரியவன்.

சுக்கிரன் - மனைவி, திருமணம், வாகனம், காமசுகம், கலைகள், அலங்காரம் ஆகியவற்றிற்கு உரியவன்.

சனி - ஆயுள், ஆழமான சிந்தனை, விபத்து, வேலைக்காரர் ஆகியவற்றிற்கு உரியவன்.

ராகு - போகம், தகப்பன் வழி தாத்தா, அன்னியம் ஆகியவற்றிற்கு உரியவன்.

கேது - மோட்சம், தாய் வழி தாத்தா, ஞானம் ஆகியவற்றிற்கு உரியவன். இதனால் கிரகங்களைக் குறிப்பிடும் போது அவை தீர்மானிக்கும் விஷயங்களைக் கொண்டு அந்தந்த காரகன் என்று சொல்வதுண்டு. உதாரணத்திற்கு சூரியனை ஆத்மகாரகன், பித்ரு காரகன் என்றும் சந்திரனை மனோ காரகன், மாத்ரு

www.facebook.com/ebooksintamil


காரகன் என்றும் சொல்வதுண்டு. இப்படியே ஒவ்வொரு கிரகத்தையும் மேலே குறிப்பிட்ட அம்சங்களைக் குறிப்பிட்டுக் காரகனாகச் சொல்வதுண்டு.

கிரகங்களின் பார்வைகளும் மிக முக்கியமானவை. கிரகங்களின் பார்வை தாங்கள் பார்க்கும் வீட்டையும் அந்த வீட்டில் உள்ள கிரகங்களையும் நல்ல விதத்திலோ கெட்ட விதத்திலோ பாதிக்கக் கூடியவை.

குரு 5, 7, 9 ஆம் வீடுகளைப் பார்க்கும்.

சனி 3, 7, 10 வீடுகளைப் பார்க்கும்.

செவ்வாய் 4, 7, 8 வீடுகளைப் பார்க்கும்.

மற்ற எல்லா கிரகங்களும் 7 ஆம் வீட்டை மட்டும் பார்க்கக் கூடியவை. உதாரணத்திற்கு ஒரு ஜாதகத்தைப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| | சூரியன் புதன் | சுக்கிரன் | |
| லக்னம் கேது | ராசி | | சந்திரன் |
| செவ்வாய் | | | ராகு |
| | குரு | சனி | |

சூரியன் தனக்கு 7 ஆம் வீட்டில் உள்ள சனியைப் பார்க்கிறது. புதன் தனக்கு 7 ஆம் வீட்டில் உள்ள சனியைப் பார்க்கிறது. சுக்கிரன் தனக்கு 7 ஆம் வீட்டில் உள்ள குருவைப் பார்க்கிறது. சந்திரன் தனக்கு 7 ஆம் வீட்டில் உள்ள செவ்வாயைப் பார்க்கிறது. சனி 3 ஆம் காலி வீடு தனுசு, 7 ஆம் வீட்டில் உள்ள சூரியன் புதன், 10 ஆம் வீட்டில் உள்ள சந்திரன் ஆகியவற்றைப் பார்க்கிறது.

குரு 5 ஆம் காலி வீடு மீனம், 7ஆம் வீட்டில் உள்ள சுக்கிரன், 9 ஆம் வீட்டில் உள்ள சந்திரன் ஆகியவற்றைப் பார்க்கிறது. செவ்வாய் 4 ஆம் வீட்டில் உள்ள சூரியன் புதன், 7 ஆம் வீட்டில் உள்ள சந்திரன், 8 ஆம் வீட்டில் உள்ள ராகு ஆகிய கிரகங்களைப்


https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

பார்க்கிறது. கிரகங்கள் ஆட்சி செய்யும் ராசிகளை முன்பே பார்த்தோம். இனி அவை உச்சம், நீச்சம் அடையும் ராசிகளைப் பார்ப்போம். உச்சம் அடையும் வீடுகள் என்றால் அந்த ராசியில் அந்தக் கிரகம் மிக அதிக பலம் அடைகிறது என்று பொருள். அதே போல் நீச்சம் அடைந்தால் அந்த ராசியில் அந்தக் கிரகம் முழுமையாக சக்தி இழந்து விடுகிறது என்று பொருள். முதலில் ஒவ்வொரு கிரகமும் உச்சம் அடையும் ராசியும் அது அங்கு எந்த டிகிரியில் முழு உச்சம் அடைகிறது என்று பார்ப்போம்.

*கிரகம் 'உச்சம்' அடையும் இராசி*

*சூரியன் - மேஷம், 10 டிகிரி*

*சந்திரன் - ரிஷபம், 3 டிகிரி*

*குரு - கடகம், 5 டிகிரி*

*புதன் - கன்னி, 15 டிகிரி*

*சனி - துலாம், 20 டிகிரி*

*செவ்வாய் - மகரம், 18 டிகிரி*

*சுக்கிரன் - மீனம், 27 டிகிரி*

இனி ஒவ்வொரு கிரகமும் நீச்சம் அடையும் வீடு எது என்று பார்ப்போம். அந்த ராசி, அந்தக் கிரகம் உச்சம் அடையும் ராசிக்கு நேர் எதிர் ராசியாக இருக்கும்.

*கிரகம் 'நீசம்' அடையும் இராசி*

*சூரியன் - துலாம், 10 டிகிரி*

*சந்திரன் - விருச்சிகம், 3 டிகிரி*

*செவ்வாய் - கடகம், 18 டிகிரி*

*புதன் - மீனம், 15 டிகிரி*

*குரு - மகரம், 5 டிகிரி*

*சுக்கிரன் - கன்னி, 27 டிகிரி*

*சனி - மேஷம், 20 டிகிரி*

மேலோட்டமாகப் பார்க்கும் போது மேஷத்தில் சூரியன் இருந்தால் உச்சம் என்றே சொன்னாலும் முழுமையாக ஆழமாகப் பார்க்கையில் டிகிரி பார்த்தால் தான் வலிமையின் தன்மை தெளிவாகத் தெரியும். மேஷத்தில் சூரியன் 10 டிகிரியில் இருப்பதையும், 27 டிகிரியில் இருப்பதையும் ஒரே அளவில்



https://lankathamilnews.blogspot.com

எடுத்துக் கொள்வது சரியாக இருக்காதல்லவா? மேஷத்தில் சூரியனுக்கு உச்சத்தின் பூரண வலிமை 10 டிகிரியில் இருக்கிறது என்றால் போகப் போக நுண்ணிய அளவில் குறைந்து கொண்டே செல்லும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ராகு, கேதுவிற்கு உச்ச நீச்ச வீடுகள் இல்லை என்று சிலரும், விருச்சிகம் உச்ச வீடு, ரிஷபம் நீச்ச வீடு என்று சிலரும், ரிஷபத்தில் ராகு உச்சம், கேது நீச்சம், விருச்சிகத்தில் கேது உச்சம், ராகு நீச்சம் என்று சிலரும் கூறுகிறார்கள். இதில் ஒருமித்த கருத்து இல்லை. ராகு கேது கிரகங்களின் உச்சமும் நீச்சமும் பலன்கள் சொல்வதில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்துவதில்லை என்பதால் அதற்கு பெரிய முக்கியத்துவமும் தர வேண்டியதில்லை.

| | | | |
|---|---|---|---|
| **சுக்கிரன் உச்சம்**<br>**புதன் நீச்சம்** | **சூரியன் உச்சம்**<br>**சனி நீச்சம்** | **சந்திரன் உச்சம்** | |
| | **கிரகங்களின் உச்ச நீச்ச ராசிகள்** | | **குரு உச்சம்**<br>**செவ்வாய் நீச்சம்** |
| **செவ்வாய் உச்சம்**<br>**குரு நீச்சம்** | | | |
| | | **சனி உச்சம்**<br>**சூரியன் நீச்சம்** | **புதன் உச்சம்**<br>**சுக்கிரன் நீச்சம்** |

அதே போல் ஒவ்வொரு கிரகத்திற்கும் நட்புக் கிரகங்கள், பகைக் கிரகங்கள், நட்பும் இல்லாமல், பகையும் இல்லாமல் சமமான கிரகங்கள் உண்டு. அவற்றையும் பார்ப்போம்.

<u>சூரியன்:</u>

நட்பு கிரகங்கள் - சந்திரன் செவ்வாய் குரு

பகை கிரகங்கள் - சுக்கிரன் சனி இராகு கேது

சம கிரகங்கள் - புதன்

*சந்திரன்:*

*நட்புக் கிரகங்கள் - சூரியன் புதன்*

*பகைக் கிரகங்கள் - இராகு கேது*

*சம கிரகங்கள் - செவ்வாய் சுக்கிரன் குரு சனி*

*செவ்வாய்:*

*நட்புக் கிரகங்கள் - சூரியன் சந்திரன் குரு*

*பகைக் கிரகஙகள் - புதன் இராகு கேது*

*சம கிரகங்கள் - சுக்கிரன் சனி*

*புதன்:*

*நட்புக் கிரகங்கள் - சூரியன் சந்திரன்*

*பகைக் கிரகங்கள் - சந்திரன் மட்டுமே*

*சம கிரகங்கள் - செவ்வாய் குரு சனி ராகு கேது*

*குரு:*

*நட்புக் கிரகங்கள் - சூரியன் சந்திரன் செவ்வாய்*

*பகைக் கிரகங்கள் - புதன் சுக்கிரன்*

*சம கிரகங்கள் - சனி ராகு கேது*

*சுக்கிரன்:*

*நட்புக் கிரகங்கள் - புதன் சனி ராகு கேது*

*பகைக் கிரகங்கள் - சூரியன் சந்திரன்*

*சம கிரகங்கள் - செவ்வாய் குரு*

*சனி:*

*நட்புக் கிரகங்கள் - புதன் சுக்கிரன் ராகு கேது*

*பகைக் கிரகங்கள் - சூரியன் சந்திரன் செவ்வாய்*

*சம கிரகங்கள் - குரு*

*ராகு கேது:*

*நட்புக் கிரகங்கள் - சுக்கிரன் சனி*

*பகைக் கிரகங்கள் - சூரியன் சந்திரன் செவ்வாய்*

*சம கிரகங்கள் - புதன் குரு*

*(இந்தப் பட்டியலைக் கூர்ந்து கவனித்துப் படித்தவர்களுக்கு ஒரு விசேஷத் தன்மை புலப்பட்டிருக்கும். ஒரு கிரகத்திற்கு நட்பான கிரகம் அந்த நட்பான கிரகத்திற்கும் நட்பாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. அது சமமான கிரகமாகக் கூட இருக்கலாம்.)*

ஒரு கிரகத்திற்கு நண்பர்கள் ஆட்சி செய்யும் ராசிகள் நட்பு வீடுகள் ஆகும். அதுபோலப் பகைவர்கள் ஆட்சி செய்யும் ராசிகள் பகை வீடுகள் ஆகும்.

www.facebook.com/ebooksintamil


# சில ஜோதிட சொற்றொடர்களுக்கு விளக்கம் !

அதிகம் உபயோகப்படுத்தப்படும் சில ஜோதிட சொற்றொடர்கள் எதைக் குறிக்கின்றன என்பதையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்.

கேந்திரம்:

1, 4, 7, 10 ஆகிய வீடுகள் கேந்திரங்கள் எனப்படும். ஒரு ஜாதகத்தில் இவை மிக முக்கியமான வீடுகளாகும். பெரும்பாலான யோகங்கள் கேந்திரங்களைக் கணக்கிட்டே அமைகின்றன.

திரிகோணம்:

1, 5 மற்றும் 9 இடங்கள் திரிகோண ஸ்தானங்கள் எனப்படும். இவையும் ஒரு ஜாதகத்தில் மிக முக்கியமான வீடுகளாகும்.

உதாரணத்திற்கு ஒருவர் கும்ப லக்னம் என்று வைத்துக் கொள்வோம். அந்த ஜாதகருக்கு கும்பம், ரிஷபம், சிம்மம், விருச்சிகம் ஆகியவை கேந்திரங்கள் ஆகும். கும்பம், மிதுனம், துலாம் ஆகியவை திரிகோணங்கள் ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | கேந்திரம் 4 | திரிகோணம் 5 |
| ல கேந்திரம் திரிகோணம் | கேந்திர திரிகோண வீடுகள் | | 6 |
| 12 | | | கேந்திரம் 7 |
| 11 | கேந்திரம் 10 | திரிகோணம் 9 | 8 |

மூலத்திரிகோணம்:

மூலத்திரிகோண வீடுகள் ஒரு கிரகத்திற்கு ஆட்சி வீட்டை விட ஒரு படி மேலான அதே நேரத்தில் பாதுகாப்பான வலிமையைத் தருகின்றன.


https://lankathamilnews.blogspot.com

சூரியனுக்கு மூலத்திரிகோண வீடு சிம்மம்.
சந்திரனுக்கு மூலத்திரிகோணவீடு ரிஷபம்.
செவ்வாய்க்கு மூலத்திரிகோண வீடு மேஷம்.
புதனுக்கு மூலத்திரிகோண வீடு கன்னி.
குருவுக்கு மூலத்திரிகோண வீடு தனுசு
சுக்கிரனுக்கு மூலத்திரிகோண வீடு துலாம்.
சனிக்கு மூலத்திரிகோண வீடு கும்பம்.

பணபரம்:

2, 5, 8, 11 ஆகிய வீடுகள் பணபர ஸ்தானங்களாகக் கருதப்படுகின்றன. பணபரம் என்ற சொல் ஜோதிடத்தில் ஒருவருடைய ஜாதகப்படி ஒருவருக்கு பணம் வரும் வழிகளை ஆராய்வதற்குப் பயன்படுகிறது.

மறைவு ஸ்தானங்கள்:

3, 6, 8, 12 ஆகிய வீடுகள் மறைவு ஸ்தானங்கள். நல்ல கிரகங்கள் இங்கு தங்குவது பொதுவாக அவை வலிமை இழப்பதையே காட்டுகிறது.

நவாம்சம்:

ஒரு ராசியை ஒன்பது சமபாகங்களாகப் பிரித்து, ராசியில் உள்ள கிரகம் அதன் எந்தப் பகுதியில் உள்ளது என்பதைக் காட்டுவதுதான் நவாம்சம். ஜாதகத்திற்குப் பலன் சொல்கையில் நவாம்சத்தினையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் மட்டுமே ஒரு கிரகத்தின் வலிமையைச் சரியாக நிர்ணயிக்க முடியும். அதனால் தான் ராசிக் கட்டத்தின் அருகிலேயே நவாம்சக் கட்டத்தையும் எழுதும் வழக்கமாக அக்கால ஜோதிடர்களிடம் வழக்கம் இருந்தது. ராசியில் உச்சமாக இருந்தாலும் நவாம்சத்தில் நீச்சம் ஆனால் அந்தக் கிரகம் வலிமை இழந்ததாகவே கணிக்கப்படும். அதே போல் ராசியில் நீச்சமானாலும் நவாம்சத்தில் உச்சமானால் அக்கிரகம் வலிமையாக இருப்பதாகவே எடுத்துக் கொள்ளப்படும்.

அஷ்டவர்க்கம்:

இது ராகு, கேது தவிர மற்ற ஏழு கிரகங்களும், லக்னமும் சேர்ந்து எட்டு வர்க்கங்கள் பற்றிய ஒரு கணக்கு. ஒவ்வொரு வீட்டிலும் இவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட பரல்கள் அல்லது

மதிப்பெண் பெறும். 12 வீடுகளிலும் சேர்ந்து மொத்தம் 337 பரல்கள் இருக்கும். இவை ஒவ்வொரு வீட்டிலும் எந்த எண்ணிக்கையில் இருக்கின்றன என்பதை வைத்து அந்த வீட்டின் வலிமை அஷ்டவர்க்க முறையில் கணக்கிடப்படுகின்றது. நல்ல வீடுகளில் நிறைய பரல்களும், தீய வீடுகளில் குறைவான பரல்களும் இருப்பது அதிர்ஷ்டமாகவும், இதற்கு நேர்மாறாக தீய வீடுகளில் அதிக பரல்களும், நல்ல வீடுகளில் குறைவான பரல்களும் இருப்பது துரதிர்ஷ்டம் என்றும் கருதப்படுகின்றன.

கோசாரம் - கிரகப்பெயர்ச்சிகள்:

ஒன்பது கிரகங்களும் 12 வீடுகளிலும் சஞ்சரித்த வண்ணம் இருக்கின்றன. ஒருவருடைய ராசி (சந்திரன் இருக்கும் வீடு) யில் இருந்து ஒவ்வொரு கிரகமும் எந்தெந்த வீடுகளுக்குச் செல்கின்றன என்பதைப் பொறுத்து அவை அங்கு தங்கி இருக்கும் காலங்களுக்குத் தனிப்பலன் சொல்லப்படுகிறது. முக்கியமாக குருப்பெயர்ச்சியும் சனிப்பெயர்ச்சியும் ஒரு ஜாதகர் வாழ்வில் தாக்கம் ஏற்படுத்தக் கூடியவையாகக் கருதப்படுகின்றன.

அஸ்தங்கம்:

ராகு கேது தவிர எந்த கிரகமாவது சூரியனுடன் ஒரு குறிப்பிட்ட டிகிரிவரை சேர்ந்து ஒரே வீட்டில் நின்றால் அந்த கிரகம் தன் சக்தியை இழந்து விடும். எந்தெந்த கிரகம் சூரியனில் இருந்து எந்த டிகிரி வரை அஸ்தங்கம் அடைகிறது என்று பார்ப்போம்.

செவ்வாய் 17 டிகிரி,
புதன் 13 டிகிரி,
குரு 11 டிகிரி,
சுக்கிரன் 8 டிகிரி,
சனி 15 டிகிரி,
சந்திரன் 12 டிகிரி,

ராகு கேது கிரகங்களுக்கு அஸ்தங்கம் கிடையாது. ராகு கேது கூட இருந்தால் சூரியன் தான் கிரகணம் போல பலம் இழக்கிறது.

வர்க்கோத்தமம்:

ராசிச் சக்கரத்தில் ஒரு ராசியில் இருக்கும் கிரகம் நவாம்ச சக்கரத்திலும் அதே ராசியில் இருக்குமானால் அது வர்க்கோத்தமம்



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


என்று அழைக்கப்படுகிறது. அப்படி வர்க்கோத்தமம் அடைந்த கிரகங்கள் மிக வலிமையாக இருப்பதாகக் கருதப்படுகின்றன.

சுப அசுப கிரகங்கள்:

சுப, அசுப கிரகங்களை இரு வகையில் வகைப்படுத்தலாம். அவை:

(1) இயற்கையான சுப, அசுப கிரகங்கள்.

இயற்கையான சுபகிரகங்கள்:

குரு, சுக்கிரன், தீய கிரகங்களுடன் சேராத புதன், வளர்பிறைச் சந்திரன்.

இயற்கையான அசுபகிரகங்கள்:

சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது, தீய கிரகங்களுடன் சேர்ந்த புதன், தேய்பிறைச் சந்திரன்.

(2) லக்ன அடிப்படையிலான சுப, அசுப கிரகங்கள்

ஒவ்வொருவரின் ஜென்ம லக்னத்திற்கு ஏற்ப கிரகங்களின் சுப, அசுபத் தன்மை மாறுபடுகிறது. உதாரணத்திற்கு இயற்கையில் சுபக் கிரகமான குரு, மகர லக்னத்திற்கு 3 மற்றும் 12 என்ற இரண்டு கெட்ட வீடுகளுக்கு ஆதிபத்தியம் பெற்று விடுவதால் பாவியாகி அசுப கிரகமாகிறது. அதே போல் இயற்கையில் அசுப கிரகமான செவ்வாய், கடக லக்னத்திற்கு 5, 10 வீடுகளின் அதிபதியாகி விடுவதால் யோகம் செய்வதாக மாறி, சுபத் தன்மை பெற்று விடுகிறது.

சர, ஸ்திர, உபய ராசிகள்:

பன்னிரண்டு ராசிகளும் சர, ஸ்திர, உபய ராசிகள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகியவை சர ராசிகளாகும். ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகியவை ஸ்திர ராசிகளாகும். மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகியவை உபய ராசிகளாகும்.

பரிவர்த்தனை:

இரண்டு கிரகங்கள் ஒருவர் வீட்டில் மற்றவர் இருந்தால் அது பரிவர்த்தனை என்று சொல்லப்படும். உதாரணத்திற்கு சூரியன் வீட்டில் செவ்வாய், செவ்வாய் வீட்டில் சூரியன் இருந்தால் இரண்டும் பரிவர்த்தனை செய்து கொண்ட கிரகங்கள். இந்த


https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


| | | | |
|---|---|---|---|
| உபய ராசி | சர ராசி | ஸ்திர ராசி | உபய ராசி |
| ஸ்திர ராசி | சர ஸ்திர உபய ராசிகள் | | சர ராசி |
| சர ராசி | | | ஸ்திர ராசி |
| உபய ராசி | ஸ்திர ராசி | சர ராசி | உபய ராசி |

அமைப்பில் இரண்டு கிரகங்களுமே வலிமை பெறுகின்றன. அந்தக் கிரகங்கள் நட்பு கிரகங்களாகவோ, இரண்டுமே நல்ல வீட்டுக் கிரகங்களாகவோ அல்லது இரண்டுமே கெட்ட வீட்டுக் கிரகங்களாகவோ இருந்து விட்டால் இந்தப் பரிவர்த்தனை ஒரு ஜாதகருக்கு நன்மைகளைத் தரும்.

<u>யோகக் காரகன்:</u> இரண்டு வீடுகளுக்கு அதிபதியாக இருக்கும் கிரகங்களுக்கு அந்த இரண்டில் ஒன்று கேந்திரமும், இன்னொன்று திரிகோணமும் ஆனால் அந்த கிரகங்கள் சம்பந்தப்பட்ட லக்னங்களுக்குச் சிறந்த யோகக் காரகர்கள் ஆகின்றன. அந்த வகையில் ரிஷப லக்னத்திற்கு 9, 10 வீடுகளுக்கு அதிபதியாகவும், துலா லக்னத்திற்கு 4, 5 வீடுகளுக்கு அதிபதியாகவும் சனி யோகக் காரகன் ஆகிறது. கடக லக்னத்திற்கு 5, 10 வீடு களுக்கு அதிபதியாகவும், சிம்ம லக்னத்திற்கு 4, 9 வீடுகளுக்கு அதிபதியாகவும் செவ்வாய் யோக காரகனாகவும் ஆகின்றது. மகர லக்னத்திற்கு 5, 10 வீடுகளுக்கு அதிபதியாகவும், கும்ப லக்னத் திற்கு 4, 9 வீடுகளுக்கு அதிபதியாகவும் சுக்கிரன் யோகக் காரகன் ஆகிறது.

<u>கேந்திராதிபத்திய தோஷம்:</u>

குருவுக்கும், புதனுக்கும் முன்பு சொன்ன யோக அமைப்பு இல்லை. அந்தக் கிரகங்களுக்கு ஒரு வீடு கேந்திரமானால் மற்ற வீடுகளும் கேந்திரமே ஆகி விடும். அது யோகமாகக் கருதப்படாமல் தோஷமாகவே கருதப்படுகிறது. அதனால் அந்த


https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


இரண்டு கிரகங்களுக்குக் கேந்திராதிபத்ய தோஷம் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

வக்கிரம்:

ராகு- கேதுவை தவிர கிரகங்கள் பொதுவாக, கடிகாரச் சுற்றில் சுற்றுகின்றன. இப்படிச் சுற்றும் கிரகம் நின்று எதிர்த்திசையில் சுற்ற ஆரம்பித்தால் அந்தக் கிரகம் வக்கிர கதியில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஜாதகத்தில் கிரகத்திற்கு அருகே (வ) என்று எழுதி இருந்தால் அந்தக் கிரகம் வக்கிரமாகி இருக்கிறது. பலன்கள் சொல்லும் போது இந்த வக்கிர கிரகம் இயல்பான குணத்தோடு இல்லை, இயல்பு திரிந்து இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சூரியன் சந்திரன், ராகு, கேது தவிர மற்ற கிரகங்கள் வக்கிரம் அடைவதுண்டு.

செவ்வாய் தோஷம்:

செவ்வாய் லக்னத்தில் இருந்தோ, சந்திரனில் இருந்தோ 2, 12, 4, 7, 8 இடங்களில் இருந்தால் அந்த ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இதற்கு நிறைய விதிவிலக்குகள் சொல்லப்படுகின்றன. கடக லக்னத்திற்கும், சிம்ம லக்னத்திற்கும் செவ்வாய் யோகக் காரகனானதால் செவ்வாய் எங்கிருந்தாலும் தோஷமில்லை, செவ்வாய் குருவுடனோ, சந்திரனுடனோ சேர்ந்திருந்தால் தோஷமில்லை என்பது போன்ற விதிவிலக்குகள் மேலும் இருக்கின்றன. பொதுவாக, செவ்வாய் தோஷம் உள்ள பெண்ணிற்கோ, பையனுக்கோ செவ்வாய் தோஷம் உள்ள பையனையோ, பெண்ணையோ தான் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று சொல்வார்கள். திருமணக் காலத்தில் மட்டுமே பார்க்கும் தோஷம் இது.

ஜாதகத்தின் மிக முக்கிய அடிப்படை அம்சங்களை இதுவரை சுருக்கமாகப் பார்த்தோம். இனியும் அறிந்து கொள்ள வேண்டிய விளக்க வேண்டிய ஜோதிடக் குறிப்புகள் நிறைய இருந்தாலும் இந்த நூலின் நோக்கத்திற்கு இத்தனை அறிந்து கொள்வது போதுமானது என்பதால், இத்துடன் நிறுத்திக் கொண்டு, இனி இந்த அடிப்படை அம்சங்களை வைத்து ஜாதக பலன்கள் எப்படிச் சொல்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம்.


https://lankathamilnews.blogspot.com

# ஜாதக பலன்களை அறியும் முறை

ஜாதக பலன்களைச் சரியாக அறிய முதலில் ஜாதகம் சரியாகக் கணிக்கப்பட்டு இருக்க வேண்டும். பிறந்த நாள், பிறந்த நேரம், பிறந்த ஊர் ஆகியவை சரியாகத் தரப்பட்டு இருந்தால் தான் சரியாகக் கணிக்க முடியும். பிறந்த ஊர் தகவல் எதற்கு என்று சிலருக்கு சந்தேகம் எழலாம். பிறந்த ஊரை வைத்துத் தான் அதன் அட்சரேகை தீர்க்கரேகைகளைத் துல்லியமாகக் கணக்கிட முடியும். அதை வைத்துத் தான் அந்த இடத்தின் சூரியோதய நேரம் கணக்கிட முடியும். அந்த நேரத்தை வைத்துத் தான் சரியான லக்னம் கணக்கிட முடியும். லக்னத்தை வைத்தே மற்ற வீடுகளும் கணக்கிடப்படுகிறது என்பதால் பிறந்த நாள், நேரம், ஊர் சரியாகத் தரப்படுவது முக்கியமாகிறது.

சரியான ஜாதகம் கணித்த பின் பலன்களை அறிய ஒரு ஜோதிடர் எதை எல்லாம் பார்க்க வேண்டி இருக்கிறது என்று பார்ப்போம்.

1) எந்தெந்த வீடுகளில் என்னென்ன கிரகங்கள் இருக்கின்றன? அந்த கிரகங்கள் எந்தெந்த வீட்டு அதிபதிகள்?

2) அந்தக் கிரகங்களுக்கு அந்த வீடுகள் ஆட்சியா, உச்சமா, நட்பா, பகையா?

3) ஒன்றிற்கும் மேற்பட்ட கிரகங்கள் ஒரு வீட்டில் சேர்ந்திருந்தால் அவற்றின் கூட்டணித் தன்மை என்ன விளைவுகளைத் தரும்?

4) எந்தெந்த வீடுகளை எந்தெந்த கிரகங்கள் பார்க்கின்றன? பார்க்கின்ற, பார்க்கப்படுகின்ற கிரகங்களிற்கு இடையே உள்ள உறவுகள் எப்படி?

5) கிரகங்களின் வலிமை எந்த அளவு உள்ளது?

6) அந்த ஜாதகத்தில் இருக்கும் யோகங்கள் என்னென்ன?

7) அந்த ஜாதகத்தில் உள்ள தோஷங்கள் என்னென்ன?

8) எந்த கிரகங்களின் தசா புக்திகள் நடக்கின்றன?

9) கோசாரப்படி கிரகங்களின் நிலை என்ன?

இப்படி எல்லா அம்சங்களையும் சரியாகக் கணக்கிட்டால் மட்டுமே ஒருவரால் சரியாகப் பலன்கள் சொல்ல முடியும்.


https://lankathamilnews.blogspot.com

ஏதோ ஒன்றிரண்டு அம்சங்களை மட்டும் பார்த்து விட்டுப் பலன் சொல்வது அரைகுறையாகவும், தவறாகவும் தான் இருக்கும். மேஷம், ரிஷபம் முதலான ராசிகளில், ஒன்றாம் பாவம், இரண்டாம் பாவம் முதலான வீடுகளில் எந்தெந்த கிரகங்கள் இருந்தால் என்னென்ன பலன் என்பதை ஜோதிட அடிப்படை நூல்களின் மூலம் ஆர்வம் உள்ளவர்கள் கற்றுக் கொள்ளலாம். இங்கு பொதுவான சில அம்சங்களை மட்டும் பார்ப்போம்.

பொதுவாக லக்னம் கேந்திரங்கள், திரிகோணங்களின் அதிபதிகள் ஆட்சி, உச்சம், அல்லது நட்பு வீடுகளில் இருப்பது அதிர்ஷ்டத்தைக் குறிக்கும். ஒரு கேந்திர கிரகமும், ஒரு திரிகோண கிரகமும் சேர்ந்திருப்பது நல்ல யோகத்தைத் தரும். நல்ல கிரகங்கள் நல்ல வீடுகளில் தங்கி மற்ற நல்ல கிரகங்களின் சேர்க்கையும், பார்வையும் பெற்றிருந்தால் அது அதிர்ஷ்டத்தைக் குறிக்கும். அதே போல கெட்ட வீடுகள் வலிமை இழந்து போவது அதிர்ஷ்டத்தைக் காட்டும். கெட்ட கிரகங்கள் பகை வீடுகளில் தங்கி அதனுடன் மற்ற கெட்ட கிரகங்கள் சேர்க்கையும் பார்வையும் பெற்றிருந்தால் அரச போகத்தை அனுபவிக்கலாம். இதற்கு நேர்மாறாக கெட்ட வீடுகளும், கிரகங்களும் வலிமை அடைந்து, நல்ல கிரகங்களும் வீடுகளும் பலவீனமானால் அது துரதிர்ஷ்டத்தைக் குறிக்கும்.

லக்னத்தில் இருந்து வீடுகளைப் பார்ப்பது போலவே சந்திரனில் இருந்தும் பார்க்கிறார்கள். சிலர் சந்திரன் இருக்கும் ராசியை சந்திர லக்னம் என்றும் சொல்வதுண்டு. லக்னத்தை விட சந்திரன் வலிமையாக இருந்தால் சந்திரனில் இருந்து கிரகங்கள் இருக்கும் நிலைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒவ்வொரு பாவம் அல்லது வீடு எதை எல்லாம் குறிக்கிறது என்பதை நான்காம் அத்தியாயத்தில் பார்த்தோம். அந்த வீடு நன்றாக அமைந்தால் அது சம்பந்தப்பட்ட எல்லாமே நன்றாக இருந்து விடும் என்பது அர்த்தமில்லை. உதாரணத்திற்கு ஒருவருடைய நான்காம் வீட்டை எடுத்துக் கொள்வோம். நான்காம் வீட்டு கிரகம் ஆட்சி பெற்று, சுப பார்வையும் பெற்று வலிமையாக இருந்து விட்டால் நான்காம் வீடு சம்பந்தப்பட்ட கல்வி, நில புலன்கள், செல்வம், வாகனங்கள், முன்னோர் சொத்து, தாயார், சுக சௌகரியங்கள், மன நிம்மதி

www.facebook.com/ebooksintamil



முதலான அனைத்துமே சிறப்பாக இருக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை. தாயார் பற்றி உறுதியாகத் தெரிந்து கொள்ள மாதுர்காரகனான சந்திரன் வலிமையையும் பார்க்க வேண்டும். கல்வி பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள புதன் வலிமையையும் பார்க்க வேண்டும். நிலன் புலன்களைப் பற்றித் தெரிந்து கொள்ள பூமி அதிபதியான செவ்வாயின் வலிமையைப் பார்க்க வேண்டும். மன நிம்மதியைப் பற்றித் தெரிந்து கொள்ள பூர்வ புண்ணிய ஸ்தானமான ஐந்தாம் வீட்டதிபதியின் வலிமையையும், பாக்கிய ஸ்தானமான ஒன்பதாம் வீட்டு அதிபதியின் வலிமையையும் பார்க்க வேண்டும். இப்படி சம்பந்தப்பட்ட மற்ற கிரகங்களின் வலிமையையும், மற்ற வீடுகளின் வலிமையையும் கூடப் பார்த்தால் மட்டுமே தெளிவான பலன்களைச் சொல்ல முடியும்.

ஒருவருடைய பண இருப்பு எப்படி இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள ஜாதகருடைய தனஸ்தானமான இரண்டாம் வீடு, அதன் அதிபதி, அதில் இருக்கும் கிரகம் மற்றும் லாபஸ்தானமான பதினோராம் வீடு அதன் அதிபதி, அதில் இருக்கும் கிரகம் ஆகியவற்றை மட்டும் பார்ப்பது முழுமையாகாது. விரய ஸ்தானமான பன்னிரண்டாம் வீடு, அதன் அதிபதி, அதில் இருக்கும் கிரகம் ஆகியவற்றையும் கூடப் பார்க்க வேண்டும். 2 மற்றும் 11 ஆம் வீடுகள் நன்றாக இருந்தாலும் கூட அதைவிட 12 ஆம் வீடு மோசமான விதத்தில் அதிகமாக வலிமை பெற்றிருந்தால் பணம் நன்றாகச் சம்பாதித்தாலும் கூட ஜாதகர் அத்தனையையும் செலவழித்து விடுவார் என்று பொருள்.

ஒருவருடைய ஆயுள் பற்றித் தெரிந்து கொள்ள லக்னம், எட்டாம் வீடு, ஆயுள்காரகனான சனி ஆகியோர் வலிமையைப் பார்க்க வேண்டும். மூன்றும் நல்ல விதமாக அமைந்துவிட்டால் பூரண ஆயுள் என்று பொருள். மரணம் அல்லது மாரகம் ஏற்படுத்தும் கிரகங்களாக 2 ஆம் வீட்டையும், 7 ஆம் வீட்டையும் சொல்கிறார்கள். 2 ஆம் வீடு பணம், குடும்பம் முதலான முக்கிய அம்சங்களை நிர்ணயித்தாலும், 7 ஆம் வீடு கேந்திரமாக இருந்தும், திருமண வாழ்க்கை, கணவன், மனைவி முதலான முக்கியமான அம்சங்களை நிர்ணயித்தாலும் இது போன்ற



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மாரகத்தை ஏற்படுத்தும் தன்மையைப் பெற்றுள்ளது என்பது, சில வீடுகள் நல்லதுடன் சில கெட்டதையும் தரும் சக்தியைக் கொண்டவையாக இருக்கின்றன என்பதற்கு நல்ல உதாரணம். இப்படி ஒவ்வொன்றையும் அந்தந்த காரகத்துவ கிரகத்தையும், அது சம்பந்தப்பட்ட வீட்டையும் வைத்துப் பலன் சொல்கிறார்கள். குழந்தைகளைப் பற்றிச் சொல்ல குருவையும், ஐந்தாம் வீட்டுக் கிரகத்தையும் பார்க்க வேண்டும். மனைவி அல்லது கணவன் பற்றிச் சொல்ல சுக்கிரனையும், ஏழாம் வீட்டையும் வைத்துச் சொல்ல வேண்டும். தந்தையைப் பற்றி சொல்ல சூரியனையும், ஒன்பதாம் வீட்டையும் வைத்துப் பார்த்தல் வேண்டும். எல்லாமும் எல்லா காலத்திலும் சிறப்பாகவே இருக்கும் என்று சொல்ல முடியாது. பொதுவாக ஒரு விஷயத்தில் அதிர்ஷ்டசாலியாக இருக்கும் ஒருவர் ஒரு குறுகிய காலத்திற்கு அந்த விஷயத்தில் தடங்கல்களையும், சிரமத்தையும் உணரலாம். அதற்குக் காரணம் அப்போதைய தசா புக்தி கிரகங்கள் கஷ்டங்களைத் தர வேண்டிய கிரகங்களாக இருக்கலாம். சம்பந்தப்பட்ட வீடும், கிரகமும் வலிமையுடன் இருந்தால் மோசமான தசாபுக்திகள் நிரந்தரமான கெடுதலைச் செய்யாமல் தற்காலிகத் தலைவலி மட்டும் தரும்.

பெரும்பாலும் ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு கிரகமும் நல்லதும் கெட்டதுமான அம்சங்களைக் கலந்தே பெற்று இருக்கும். அப்படி இருக்கையில் இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அந்த இரண்டில் எதன் வலிமை மேலோங்குகிறது என்று பார்த்தே எந்த ஒரு முடிவுக்கும் வர வேண்டும். அதற்கு தான் ஒரு தேர்ந்த ஜோதிடரின் அறிவும், அனுபவமும் தேவைப்படுகிறது. (ஜாதகம் கணிக்க கம்ப்யூட்டர் உதவும். அது தவறில்லாமல் கச்சிதமாகவே அதைச் செய்யும். ஆனால் கம்ப்யூட்டர் ஜாதகத்தோடு பலன்களையும் பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். அந்தப் பலன்களில் நல்லது கெட்டது தனித்தனியாக அப்படியே இருக்குமே ஒழிய இரண்டையும் சேர்த்து முடிவாக என்ன என்பதை அதில் பார்க்க முடியாது. ஏனென்றால் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேரில் ஜோதிடப் புத்தகங்கங்கள் அப்படியே உள்ளேற்றப் பட்டிருக்கின்றன. அதை அப்படியே அது அச்சிட்டுத் தருவதால் ஓரிடத்தில் மிக உயர்வாகவும், இன்னொரு இடத்தில் மிகவும் தாழ்வாகவும் பலன்கள் சொல்லப் பட்டிருப்பதை ஒருவர் கம்ப்யூட்டர் ஜாதகப் பலன்களில் பார்க்கலாம்.)



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# யோகங்கள்

ஜாதக பலன்கள் சொல்வதற்கு முன் யோகங்கள் பற்றி ஒருவர் முழுமையாக அறிந்திருக்க வேண்டும். நல்லதும் கெட்டதுமாக நூற்றுக் கணக்கான யோகங்கள் இருக்கின்றன. அவற்றை அறியாமல் பலன்கள் கூறுவது தவறாகவே முடியும். சில முக்கிய யோகங்களை மட்டும் இங்கே பார்ப்போம்.

பஞ்ச மஹாபுருஷ யோகங்கள்:

1.பத்ர யோகம் : புதன் ஆட்சி அல்லது உச்சத்தில் லக்னத்திற்கோ அல்லது சந்திரனுக்கோ கேந்திரத்தில் நிற்பது பத்ர யோகம் எனப்படுகிறது. அறிவுக்கூர்மை, வாதத்திறமை, பல கலைகளில் கற்றுத் தேர்ச்சி போன்றவை இந்த யோகத்தினால் கிடைக்கும்.

2. ருசக யோகம் : செவ்வாய் ஆட்சி அல்லது உச்சத்தில் நின்று லக்னத்திற்கோ அல்லது சந்திரனுக்கோ கேந்திரங்களில் இருப்பது ருசக யோகம் எனப்படும். தீர்க்காயுள், பணவருவாய், சத்ருக்களை வெல்லும் திறமை, புகழ், திடமான உடல் போன்றவை இந்த யோகத்தினால் கிடைக்கும்.

3. சசயோகம்: சனி ஆட்சி உச்சங்களில் லக்னத்தில் இருந்தோ, கேந்திரத்தில் இருந்தோ நிற்பது சச யோகம் என்றழைக்கப்படுகிறது. தலைமைப் பண்பு, பல வேலையாட்களை வைத்திருப்பது, ஆழ்ந்த சிந்தனை என்ற நல்ல பண்புகளோடு அடுத்தவர் சொத்து களை அபகரிப்பது போன்ற தீய குணங்களும் தரும் யோகமாகக் கருதப்படுகிறது.

4. ஹம்ஸ யோகம்: குரு ஆட்சி உச்சம் பெற்று லக்னத்திற்கோ, சந்திரனுக்கோ கேந்திரத்தில் நிற்பது ஹம்ஸ யோகம் எனப்படும். அழகான உடலமைப்பு, நற்குணங்கள், தர்மசிந்தனை ஆகியவை ஹம்ஸ யோகத்தினால் கிடைக்கக் கூடியவை.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



5. மாலவ்ய யோகம்: சுக்கிரன் ஆட்சி உச்சம் பெற்று லக்னத்திற்கோ சந்திரனுக்கோ கேந்திரத்தில் நிற்பது மாலவ்ய யோகம். நல்ல தோற்றமுள்ள தேகம், வாகனம், மனைவி மக்களுடன் மகிழ்ச்சியான வாழ்க்கை, கலைகளில் தேர்ச்சி ஆகியவை மாலவ்ய யோகத்தால் பெறப்படுவது.

மற்ற முக்கிய யோகங்கள்:

6. கஜகேசரியோகம்: குரு சந்திரனில் இருந்து கேந்திரத்தில் இருந்தால் கஜகேசரி யோகம் ஏற்படுகிறது. தர்மசிந்தனை, பெரும்புகழ், இனிமையாகப் பழகுதல், தலைமைப் பொறுப்பு ஆகியவை கஜகேசரி யோகத்தால் ஏற்படும்.

7. அஷ்டலக்ஷ்மி யோகம்: ராகு ஆறாமிடத்தில் நின்று குரு லக்ன கேந்திரம் அடைந்து நிற்பது அஷ்டலக்ஷ்மி யோகம் எனப்படும். யோகங்களில் மிகச் சிறப்பான யோகமாக இந்த அஷ்டலக்ஷ்மி யோகத்தைச் சொல்கிறார்கள். இந்த யோகம் உள்ள ஜாதகன் அஷ்டலக்ஷ்மிகளின் அருள் கடாட்சம் ஏற்பட்டு சகல சவுபாக்கியங்களும் பெற்று ராஜபோகத்துடன் வாழ்வாங்கு வாழ முடியும்.

8. புதாத்திய யோகம்: ஒருவருடைய ஜாதகத்தில் புதனும் சூரியனும் சேர்ந்து இருப்பது புதாத்திய யோகம் எனப்படும். இந்த கிரக சேர்க்கை உள்ளவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவர். (சூரியனுடன் நெருங்குவதால் ஏற்படும் அஸ்தங்கம் புதனுக்கு இந்த யோகத்தால் இல்லாமல் போகிறது)

9. சுப கத்திரி யோகம்: லக்னத்திற்கு இருபுறமும் அதாவது பன்னிரெண்டாம் வீடு அல்லது இரண்டாவது வீட்டில் சுப கிரகமான குரு, வளர்பிறை சந்திரன், சுபரோடு சேர்ந்த புதன், போன்ற கிரகங்கள் இருந்தால் அது சுப கத்திரி யோகம் எனப்படும். இந்த யோகமானது வாழ்க்கையைச் சிரமம் இல்லாமல் நடத்திச் செல்ல உதவும். (லக்னம் மட்டுமல்லாமல் எந்த வீடோ கிரகமோ தன் இரு பக்க வீடுகளிலும் சுபகிரகங்களைப் பெற்றிருந்தாலும் அந்த வீடு அல்லது கிரகத்திற்கு நன்மை செய்வதாகவே இருக்கும்)



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



*10. தர்மகர்மாதிபதி யோகம்: தர்ம ஸ்தானமான ஒன்பதாம் வீட்டு அதிபதியும், கர்ம ஸ்தானமான பத்தாம் வீட்டதிபதியும் சேர்ந்து நல்ல வீடுகளில் தங்கி இருந்தால் அது தர்மகர்மாதிபதி யோகம். இது மிக உயர்ந்த யோகமாகக் கருதப்படுகிறது. இந்த யோகம் உள்ள ஜாதகர் தொழில் ரீதியாக மிக உயர்ந்த நிலையை அடைவார். லாபகரமான தொழில் அல்லது அதிகாரம் மிக்க பதவி அமையும்.*

*11. அகண்ட சாம்ராஜ்ய யோகம்: 2, 9 அல்லது 11 க்குடையவன் ஆட்சி உச்சம் பெற்று பலமாகி நின்று, குரு ஐந்துக்கோ அல்லது பத்துக்கோ அதிபதியாகி கேந்திரங்களில் இருந்தால் இந்த யோகமாகும். இந்த யோகத்தின் மூலமாக தீர்க்க ஆயுள், நல்ல பணவசதி, பெயர், புகழ், உயர்ந்த அந்தஸ்து ஆகியவை உண்டாகும்.*

*12. அதியோகம்: சந்திரனுக்கு 6,7,8 ஆம் வீடுகளில் சுபக்கிரங்களான குரு, புதன், சுக்கிரன் அமர்ந்திருந்தால் அது அதியோகம் என்று அழைக்கப்படுகிறது. இது சக்தி வாய்ந்த யோகமாகக் கருதப்படுகிறது. இந்த யோகம் உள்ளவர் சகல சௌகரியங்களும் உள்ள மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வார், நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ்வார், எதிரிகளை வெல்வார் என்று கூறப்படுகிறது.*

*(பொதுவாக 6, 8 ல் சுபர்கள் அமர்வது சரியல்ல. ஆனால் இந்த அதியோக விஷயத்தில் அந்த விதி புறக்கணிக்கப்படுகிறது. இந்த அதியோகம் பற்றி அறிந்திரா விட்டால் சந்திரனில் இருந்து 6, 8 வீடுகளில் உள்ள சுபகிரகங்களுக்குக் கெட்ட பலன் தான் சொல்வார்கள். எனவே தான் யோகங்கள் பற்றி முழுமையாக அறியாமல் பலன் சொல்வது தவறுகளுக்கு வழி வகுக்கலாம் என்று முன்பு குறிப்பிட்டோம்). இந்த மூன்றில் இரண்டு அல்லது ஒரு சுபகிரகம் வலிமையாக இருந்தாலும் அதியோகத்தின் அந்த அளவுப் பலனை அனுபவிக்கலாம் என்று ஜோதிட அறிஞர்கள் கூறுகிறார்கள்.*



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



13. <u>லக்ஷ்மியோகம்</u>: இந்த யோகம் அமைய லக்கினாதிபதி வலிமையாக இருக்க வேண்டும். அத்துடன் 9 ஆம் அதிபதி சொந்த அல்லது உச்ச வீட்டில் இருக்க வேண்டும். அது கேந்திர வீடாக அல்லது திரிகோண வீடாகவும் கூட இருக்க வேண்டும். அப்படி அமைந்தால் லக்ஷ்மி யோகம் அமையும். இந்த யோகத்தினால்ஜாதகன்செல்வத்தோடும், உயர்ந்த குணங்களோடும், நன்கு கற்றவனாகவும், மதிப்பும் மரியாதையும் மிக்கவனாகவும், வாழ்க்கையின் எல்லா வசதிகளை உடையவனாகவும், அழகான தோற்றம் உடையவனாகவும் இருப்பான்.

14. <u>விபரீத ராஜயோகம்</u>: தீய ஸ்தானங்கள் என்று சொல்லக்கூடிய 6, 8, 12 அதிபதிகள் ஒன்று கூடியோ அல்லது தனித்தனியாகவோ 6, 8, 12 வீடுகளில் மாறி இருப்பது விபரீத ராஜ யோகம் ஆகும். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜ யோகம்' என்று கூறுவதற்கேற்ப கெட்ட வீடுகள் கெட்டுப் போவதால் இந்த விபரீத ராஜ யோகம் ஏற்படுகிறது. இந்த யோகத்தில் பிறந்தவர்கள் எத்தனை கீழ்நிலையில் இருந்தாலும் திடீரென ராஜயோகத்தை அடைந்து செல்வந்தர்கள் ஆவார்கள்.

15. <u>நீச்சபங்க ராஜயோகம்</u>: ஒரு ஜாதகத்தில் ஒரு கிரகம் நீச்சமாகி அந்த நீச்சமான ராசியில் உச்சமாக ஆகக் கூடிய கிரகம் லக்னத்தில் இருந்தோ சந்திரனில் இருந்தோ கேந்திரத்தில் இருந்தால் நீச்சபங்க ராஜ யோகம் உண்டாகிறது. சிலர் அந்த நீச்சமான இடத்தின் ராசிநாதன் ஆட்சியோ, உச்சமோ பெற்றிருந்தாலும் நீச்சபங்க ராஜயோகம் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். இந்த யோக ஜாதகர்களும் எத்தனை கீழ்நிலையில் பிறந்திருந்தாலும் திடீர் செல்வம், பெயர், புகழ் பெற்று மிக உயர்ந்த நிலைகளுக்குச் செல்வார்கள்.

16. <u>புத்தி மாதுர்ய யோகம்</u>: ஐந்தாம் வீட்டு அதிபதி சுபனாக இருந்து அவன் இன்னொரு சுபனால் பார்க்கப்பட்டாலோ, அல்லது சுப வீட்டில் இருந்தாலோ புத்தி மாதுர்ய யோகம் உண்டாகிறது. இந்த யோகம் அமைந்தவர்கள் குணத்திலும், அறிவிலும் மிக உயர்ந்த நிலையில் இருப்பார்கள். யோகம் என்றால் நல்ல விளைவுகள் என்று தான் பலரும் நினைக்கிறார்கள் என்றாலும்



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தீய விளைவுகளைத் தரும் யோகங்களும் நிறைய உண்டு. அப்படிப்பட்ட சில யோகங்களையும் பார்ப்போம்.

17. குரு சண்டாள யோகம்: ஒருவருடைய ஜாதகத்தில் உள்ள குருவோடு சனி, ராகு, கேது போன்ற கிரகங்கள் சேர்ந்திருந்தால் அது குருசண்டாள யோகம் எனப்படும். இந்த யோகம் உள்ள ஜாதகர் உயர்குடியில் பிறந்திருந்தாலும் கூட இனப்பற்று, மதப்பற்று, கடவுள் பக்தி இல்லாதவராகவே நடந்து கொள்வார்.

18. கால சர்ப்ப யோகம்: லக்னமும் எல்லா கிரகங்களும் ராகு கேது இவர்களின் மத்தியில் இருந்து விட்டால் கால சர்ப்ப யோகம் ஏற்படும். இந்த காலசர்ப்ப யோகத்தில் பிறந்தவர்கள் அனேக கஷ்டங்களை அனுபவித்து தன்னுடைய சுய உழைப்பினால் முன்னேற வேண்டி இருக்கும். (ராகு கேது கிரகங்களின் மத்தியில் உள்ள கிரகங்கள் வலிமையாக இருந்தால் ஜாதகர் வாழ்வின் பிற்பகுதியில் இந்த யோகத்தின் பிடியில் இருந்து மீண்டு நல்ல முன்னேற்றம் அடைவார்.)

19. சகடயோகம்: குருவிற்கு 6, 8, 12 ஆம் வீடுகளில் சந்திரன் அமர்ந்திருந்தால், அது சகட யோகத்தைக் கொடுக்கும். சகட என்னும் வடமொழிச் சொல்லிற்கு சக்கரம் என்று பொருள். இந்த யோகம் அமைந்த ஜாதகரின் வாழ்க்கை சக்கரம்போல சுழன்று கொண்டே இருக்கும். ஜாதகர் ஓர் இடத்தில் இருக்க மாட்டார். தன்னுடைய வேலை காரணமாகவோ, சுபாவம் காரணமாகவோ ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு அலைந்து கொண்டே இருப்பார். பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் அதிகம் ஏற்பட்டபடி இருக்கும்.

20.கேமத்ரூம யோகம்: ஒரு ஜாதகத்தில் சந்திரனுக்கு இரு புற வீடுகளும் காலியாக இருந்தால் கேமத்ரூம யோகம் ஏற்படுகிறது. இந்த யோகம் உள்ளவர்கள் தவறான குணங்கள் கொண்டவர்களாகவும், ஏழைகளாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும், மனமகிழ்ச்சி இல்லாதவர்களாகவும் இருப்பார்கள். (சில அறிஞர்கள் சந்திரனில் இருந்து கேந்திரங்களில் கிரகங்கள் இருக்குமானால் இந்த யோகம் தவிர்க்கப்படுகிறது என்று சொல்கிறார்கள்.) யோகங்கள் இனியும் நிறைய உள்ளன.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



முழுமையாக அவற்றை அறிந்து கொள்ள விரும்புபவர்கள் அது பற்றி விரிவாக எழுதப்பட்ட நூல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். எந்த யோகத்தையும் அப்படியே ஒருவர் பொருள் கொண்டால் அது சரியானதாய் இருக்காது. சம்பந்தப்பட்ட கிரகங்களின் தன்மை, அந்த வீடுகளின் தன்மை, அவற்றின் வலிமை ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அந்த யோகத்தின் வலிமையைக் கணக்கிட வேண்டும். அப்போது தான் சரியான முடிவுகளை எட்ட முடியும். உதாரணத்திற்கு இரண்டு யோகங்களை எடுத்துக் கொள்ளலாம்.

கஜகேசரி யோகம் மிக உயர்ந்த யோகமாக ஜோதிட நூல்களில் சொல்லப்பட்டாலும் அது மிக எளிமையான, அதிகமாய் பார்க்கக் கூடிய யோகம் தான். சந்திரனுக்கு 4, 7, 10 வீடுகளில் குரு இருப்பது அபூர்வம் அல்ல. சந்திரன், குரு இருவரும் பலம் பெற்று அந்த வீடுகள் நல்லதாக இருந்தால் மட்டுமே அந்த யோகத்தின் பலன்களை ஒருவர் அடைய முடியும். இல்லா விட்டால் அந்த யோக பலன்கள் மிகப் பலவீனமாக இருக்கும்.

இன்னொரு யோகமான சண்டாள யோகத்தில் குருவுடன் சனி, ராகு, கேது சேர்வது மோசமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் வலிமையாக நல்ல முறையில் குருவுடன் சேர்ந்திருக்கும் சனியும், ஞானக்காரகனான கேதுவும் எத்தனையோ ஆன்மீகப் பேரறிஞர்களை உருவாக்கி இருக்கின்றன. எனவே யோகங்கள் ஜாதகத்தில் இருந்தாலும் எந்த அளவு எப்படிப் பலன் என்று சொல்வதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பெரும்பாலான யோகங்களின் முழுமையான பலன் சம்பந்தப்பட்ட கிரகங்களின் தசா புக்திகளில் தான் கிடைக்கும். சிலருக்குச் சம்பந்தப்பட்ட தசை வாழ்க்கையில் வராமலேயே கூடப் போகலாம். (அனைத்து தசைகளும் ஒருவருக்கு முழுமையாக வர 120 வருடங்கள் தேவைப்படும்). நல்ல அதிர்ஷ்டசாலிக்கு யோகங்கள் ஜாதகத்தில் இருந்து அந்த யோகத்தை உருவாக்கும் கிரகங்கள் தசை வாழ்வில் வர வேண்டும். அப்படி வரா விட்டால் மற்ற கிரகங்களில் வரும் குறுகிய புக்தி காலங்களில் அந்த நல்ல பலன்களை அனுபவிக்கலாம்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# சில அதிர்ஷ்ட ஜாதக உதாரணங்கள்



இனி ஜாதகப் பலன்கள் பார்ப்பதற்கு சில நிஜ யோக ஜாதகங்களை எடுத்துக் கொள்வோம். அந்த ஜாதகர்கள் அனைவரும் அறிந்த பிரபலமாக இருந்தால் வாசகர்களுக்கும் பலன்கள் சரியாக இருக்கின்றனவா என்பது தெரியும் என்பதால் தற்போதைய இங்கிலாந்து அரசி இரண்டாம் எலிசபெத் ஜாதகத்தை முதலில் எடுத்துக் கொள்வோம்.

*இங்கிலாந்து அரசி இரண்டாம் எலிஸபெத்:*

இரண்டாம் எலிஸபெத்தின் ஜாதகம் மிக விசேஷமான யோக ஜாதகம். அதனால் தான் சாதாரணமாக அவருக்கு அரசியாக வாய்ப்பு இல்லாமல் இருந்த போதும் அரச பதவி கிடைத்தது. அவருடைய தாத்தா இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜின் மறைவிற்குப் பின் ஜார்ஜின் முதல் மகன் எட்டாம் எட்வர்டு அரசரானார். அரசராகி ஒரு வருடத்திற்குள்ளாகவே எட்டாம் எட்வர்ட் தன் காதலுக்காக அரச பதவியைத் துறந்தார். அதன் பின் எட்டாம் எட்வர்டின் தம்பியும், எலிஸபெத்தின் தந்தையும் ஆன ஆறாம் ஜார்ஜ் மன்னரானார். கிட்டத்தட்ட 16 ஆண்டு காலம் அரசராக இருந்த ஆறாம் ஜார்ஜ் மறைவிற்குப் பின் 1953 ஆம் ஆண்டு அரசியாக முடிசூடினார்.

அவரது பெரியப்பா எட்டாம் எட்வர்டு அரசப் பதவியைத் துறக்காமல் இருந்திருந்தால் அவரே அரசராக நீடித்திருப்பார். அவருக்குப் பின் அவர் பிள்ளை அரசராக இருந்திருப்பார். அந்த வம்சாவளியாகவே அரசப்பதவி தொடர்ந்திருக்கும். எலிஸபெத்தின் தந்தை ஆறாம் ஜார்ஜ் எலிஸபெத்தைப் போலவே நீண்ட ஆயுள் உள்ளவராக இருந்திருந்தாலும் எலிஸ்பெத்தின்



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



*அரசப்பதவி இவ்வளவு நீண்ட காலத்தினுடையதாக இருந்திருக்க வாய்ப்பில்லை அல்லவா?*

*அதிர்ஷ்ட தேவதையின் பார்வை எலிஸபெத் பக்கம் திரும்ப அவர் ஜாதகம் தான் காரணம் என்பதை இனி பார்ப்போம்.*

*அவர் பிறந்த தேதி 21.04.1926 நேரம் காலை 02.40 மணி*
*அவர் ஜாதகத்தின் சிறப்பு அம்சங்களைப் பார்ப்போம்.*

| | | | |
|---|---|---|---|
| **புதன்** | **சூரியன்** | | **ராகு** |
| **சுக்கிரன்** | **ராசி** | | **சந்திரன்** |
| **லக்னம்** குரு, செவ் | | | |
| **கேது** | **சனி** | | |

| | | | |
|---|---|---|---|
| | **சுக்கிரன்** | **லக்னம்** | **சூரியன்** ராகு |
| | **நவாம்சம்** | | **சனி** |
| | | | |
| **சந்திரன்** கேது | | **புதன்** | குரு செவ்வாய் |



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அவருடைய ஜென்ம லக்னம் மகரம். லக்னத்திலேயே செவ்வாய் உச்சமாய் இருப்பதால் ருசக யோகம் இருக்கிறது.

லக்னத்தில் குரு நீச்சமாகி அந்த லக்ன கேந்திரத்திலேயே செவ்வாய் உச்சமானதால் நீசபங்க ராஜ யோகம் இருக்கிறது.

எட்டாம் வீடு எதிர்பாராமல் வரும் அதிர்ஷ்டத்தையும் குறிக்கிறது என்று சொல்லி இருந்தோம். அந்த எட்டாம் வீட்டு அதிபதி சூரியனும் நான்காம் வீட்டில் உச்சமாகி இருக்கிறது. அதனாலும், சூரியன் ராஜகிரகம் ஆனதாலும், உச்சமான சூரியன் தொழில் ஸ்தானமான பத்தாம் வீட்டை ஏழாம் பார்வையாகப் பார்ப்பதாலும் அவருக்கு அரசப் பதவி கிடைத்தது.

கிடைத்த பதவி அறுபது ஆண்டுகளைக் கடந்தும் அவரிடம் தங்கி இருப்பதற்குக் காரணம் மேலும் பல யோகங்களும் இவர் ஜாதகத்தில் இருப்பது தான்.

ஆறாம் வீட்டில் ராகு இருப்பதும் லக்ன கேந்திரத்தில் குரு இருப்பதும் அஷ்டலக்ஷ்மி யோகத்தை எலிஸபெத்திற்குத் தந்திருக்கிறது.

குரு, சந்திரன் இருவரும் ஒருவருக்கொருவர் கேந்திரத்தில் இருப்பதால் இவருக்குக் கஜகேசரி யோகம் இருக்கிறது. சந்திரன் ஆட்சி பெற்றும், குரு நீச்சபங்கமாகி வலிமை பெற்றும் இருப்பதால் கஜகேசரி யோகம் வலிமையாகவே இருப்பதைக் கவனிக்கவும்.

ஆறு, ஒன்பதாம் வீட்டுக்குடைய புதன் மூன்றில் நீச்சமாகி இருப்பது பாதி நல்லது. ஆறுக்குடையவன் நீச்சமாவதும், ஆறில் ராகு இருப்பதும் எதிரிகளை அழிக்க வல்லது. எதிரிகள் இருக்க மாட்டார்கள்.

நான்காம் வீட்டு அதிபதி செவ்வாய் உச்சமாகி மாதுர்காரகனான சந்திரனும் ஆட்சியாகி, குரு சேர்க்கையும் பார்வையும் பெற்றிருப்பதால் எலிஸபெத்தின் தாயார் 101 வருடம் வரை வாழ்ந்து 2002-ல் தான் இறந்தார்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



லக்னாதிபதியும், தனஸ்தானமான இரண்டாம் வீட்டதிபதியும் ஆன சனி லாபஸ்தானமான பதினோராம் வீட்டில் இருப்பதும், பூர்வபுண்ணிய வீட்டதிபதியும், தொழில் ஸ்தானாதிபதியும் ஆன சுக்கிரன் தனஸ்தானமாகிய இரண்டாம் வீட்டில் இருப்பதும் கோடிக்கணக்கான சொத்தும், வருமானமும் அவருக்குத் தந்திருக்கின்றன.

மேலும் சூரியன், சந்திரன் இரண்டு கிரகங்களையும் ராஜ கிரகங்கள் என்று சொல்வார்கள். இரண்டும் வலிமை பெற்று ஒன்றிற்கு ஒன்று கேந்திரத்தில் இருப்பது சிறப்பான யோகமாகக் கருதப்படுகிறது.

அவர் ஜாதகத்தில் குறைகள் மிகக் குறைவு. புதன் திரிகோண ஸ்தானமான ஒன்பதுக்கும் அதிபதி ஆனதால் அந்த விதத்தில் நீச்சம் ஒரு குறையே. ஆனால் அந்தக் குறையை விட அதிகமான மற்ற நிறைகள் இருப்பதால் அந்தக் குறை அவரைச் சிறிதும் பாதிக்கவில்லை. சனி, செவ்வாய் ஒருவர் வீட்டில் மற்றவர் என்று பரிவர்த்தனை ஆனதும், சனி மூன்றாம் பார்வையாக செவ்வாயைப் பார்ப்பதும் பாதிப்பு தான். ஏன் என்றால் சனியும் செவ்வாயும் பகைக் கிரகங்கள். சம்பந்தப்பட்ட கிரகங்கள் குடும்ப ஸ்தான அதிபதியும், சுகஸ்தான அதிபதியும் ஆனதால் குடும்பத்தில் நிம்மதி இல்லாத சூழ்நிலை மட்டும் இருக்கும்.

## ஐன்ஸ்டீன்

அரசியல் துறையில் ஓர் அருமையான உதாரண ஜாதகத்தைப் பார்த்தோம். இனி அறிவியல் துறையில் ஓர் உதாரண ஜாதகத்தைப் பார்ப்போம். சென்ற நூற்றாண்டின் இணையற்ற அறிவாளியாகக் கருதப்படும் ஐன்ஸ்டீன் ஜாதகத்தை எடுத்துக் கொள்வோம்.

ஐன்ஸ்டீன் பிறந்த தேதி 14-03-1879. பிறந்த நேரம் காலை 11.30

சுக்கிரன் லக்னத்தில் இருந்து பத்தாம் வீட்டில் உச்சம் அடைந்து இருப்பதால் மாலவ்ய யோகம் இவருக்கு உள்ளது.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் சனி சுக்கிரன் | | | லக்னம் |
| குரு | ராசி | | கேது |
| செவ்வாய் ராகு | | | |
| | சந்திரன் | | |

| | | | |
|---|---|---|---|
| | லக்னம் ராகு | | |
| சுக்கிரன் சந்திரன் செவ்வாய் | நவாம்சம் | | சூரியன் |
| | | | |
| குரு | சனி | கேது புதன் | |

புதன் நீச்சமாகி அந்த வீட்டில் உச்சமாகக் கூடிய சுக்கிரன் அங்கே கூடவே உச்சமாகி இருப்பதும், லக்னத்தில் இருந்து கேந்திரத்தில் இருப்பதும் நீச்ச பங்க ராஜ யோகம் தருகிறது.

ஐந்தாம் வீட்டதிபதி சுபக்கிரகமான சுக்கிரன், இன்னொரு சுபனான புதனுடன் சேர்ந்து, மற்றொரு சுபனான குரு வீட்டில் இருக்கிறது. எனவே புத்திமாதுர்ய யோகம் இவர் ஜாதகத்தில் இருக்கிறது.

சூரியன், புதன் சேர்ந்து இருப்பதால் புத ஆதித்ய யோகம் இருக்கிறது. இந்த நான்கு யோகங்களுமே அறிவு சம்பந்தமான கிரகங்களால் உண்டாகி இருப்பதால் தான் அவர் சென்ற



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



*நூற்றாண்டின் இந்த உலகிலேயே சிறந்த அறிவாளியாக இருந்திருக்கிறார்.*

*தர்ம ஸ்தானமான ஒன்பதாம் வீட்டதிபதி சனியும், கர்ம ஸ்தானமான குருவும் பரிவர்த்தனை ஆகி இருப்பது இரண்டு வீட்டு பலன்களையும் வலிமை ஆக்குகிறது. பத்தாம் வீட்டில் ஒரு பாவியாவது அமர வேண்டும் என்று ஜோதிட அறிஞர்கள் செ ால்வதுண்டு. தொழில் ஸ்தானம் காலியாக இருக்கலாகாது என்பது தான் அவர்கள் உத்தேசம். தொழில் ஸ்தானமான பத்தாம் வீட்டில் யோகங்களைத் தரும் கிரகங்கள் சேர்த்து நான்கு கிரகங்கள் இருப்பது சிறப்பு. அதனால் உலகப் போக்கையே மாற்றக் கூடிய அறிவு சார்ந்த கண்டுபிடிப்புகளை அவரால் கண்டு பிடிக்க முடிந்தது.*

*(இந்த இடத்தில் எலிஸபெத் அரசியின் ஜாதகத்தையும் இவர் ஜாதகத்துடன் ஒப்பிடுவது ஜாதக சூட்சுமங்களை அறிய உதவும். எலிஸபெத்தின் ஜாதகத்தில் பத்தாம் வீடு காலியாக உள்ளது. பத்தாம் வீட்டதிபதி சுக்கிரனும் நட்பு வீட்டில் இருந்தாலும் மற்ற கிரகங்கள் அளவுக்கு வலிமை பெறவில்லை. ஆனால் உச்சம் பெற்ற சூரியன் பத்தாம் வீட்டைப் பார்க்கிறான். எனவே பெயரளவுக்கு அதிகாரம் உள்ளதே ஒழிய அவரை ஒரு செயல் வீரராகச் சொல்ல முடியாது.)*

*ஆறாம் வீட்டதிபதி செவ்வாய் எட்டாம் வீட்டில் உச்சம் பெற்றிருப்பது விபரீத ராஜ யோகம் தருகிறது. இந்த ஜாதகத்தில் குறை சொல்ல வேண்டுமானால் சூரியன், சனி என்ற இரண்டு பகைக் கிரகங்கள் சேர்ந்து இருப்பதைச் சொல்லலாம். ஆனால் அதே வீட்டில் பல யோகங்கள் உருவாகி இருப்பதால் இந்தக் குறை பலவீனமாகி விடுகிறது. குடும்ப ஸ்தானம் ஆன இரண்டாம் வீட்டில் கேது இருப்பதும், இரண்டாம் வீட்டதிபதி சந்திரன் ஆறில் நீச்சம் அடைந்ததும் குடும்ப விஷயங்களில் மன நிம்மதி இன்மையை உணர்த்துகிறது. (அதே நேரத்தில் இரண்டாம் வீட்டுக்குரிய பேச்சுத் திறன் புதனின் நீச்ச பங்க ராஜ யோகத்தினாலும், இரண்டாம் வீட்டுக்கு உரிய பணம், லாபஸ்தானமான பதினோராம் வீட்டு அதிபதி*



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



செவ்வாயின் உச்சத்தாலும் பாதிக்கப்படாமல் தப்பித்ததையும் வாசகர்கள் உணரலாம்). புதன், சுக்கிரன் நான்கு, ஐந்தாம் வீட்டு அதிபதிகளாய்ச் சேர்ந்து இருப்பதால் ஏதாவது ஒரு கலையில் தேர்ச்சி பெறும் யோகம் இருப்பதால் அவர் நன்றாக வயலின் வாசிக்கவும் கற்றுக் கொண்டு இருந்தார்.

<u>பில் கேட்ஸ்:</u>

அரசியல், அறிவியல் துறைகளில் மிக உன்னத நிலையை அடைந்தவர்களைப் பார்த்தோம். இனி தொழிலதிபராக இருந்து உலகப் பெரும் பணக்காரராகத் திகழும் பில் கேட்ஸ் ஜாதகம் பார்ப்போம். பில் கேட்ஸ் பிறந்த தேதி 28-10-1955 நேரம் இரவு 10.58

புதன் லக்னத்தில் இருந்து நான்காம் வீட்டில் ஆட்சி/உச்சம் பெற்று இருப்பதால் பத்ர யோகம் உள்ளது.

சந்திரனில் இருந்து ஆறு, ஏழு, எட்டில் குரு, புதன், சுக்ரன் இருப்பதால் அதி யோகம் உள்ளது.

<table>
<tr><td>சந்திரன்</td><td></td><td>கேது</td><td>லக்னம்</td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">ராசி</td><td></td></tr>
<tr><td></td><td>குரு</td></tr>
<tr><td></td><td>ராகு</td><td>சனி<br>சூரியன்<br>சுக்கிரன்</td><td>புதன்<br>செவ்வாய்</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>குரு</td><td>சுக்கிரன்<br>சனி<br>செவ்வாய்</td></tr>
<tr><td>ராகு</td><td colspan="2" rowspan="2">நவாம்சம்</td><td>கேது</td></tr>
<tr><td>சூரியன்</td><td>புதன்</td></tr>
<tr><td>லக்னம்</td><td>சந்திரன்</td><td></td><td></td></tr>
</table>



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



*தனஸ்தானமான இரண்டாம் வீட்டதிபதி சந்திரன் தொழில் ஸ்தானமான பத்தில் அமர்ந்து, நட்புக்கிரகமான செவ்வாய் மற்றும் பத்ரயோக பலமுள்ள புதன் இருவராலும் சந்திரன் பார்க்கப்படுவதும், அதியோகமும் சேர்ந்து அவரைச் செல்வந்தராக ஆக்கி உள்ளது.*

*திரிகோண ஸ்தானமும், பூர்வ புண்ணிய ஸ்தானமும் ஆன ஐந்தாம் வீட்டதிபதி சுக்கிரன் அங்கேயே ஆட்சி பெற்றுள்ளது. பாக்கிய ஸ்தானமான ஒன்பதின் அதிபதி சனி ஐந்தில் உச்சம் அடைவது மேலும் சிறப்பு. அதே வீட்டில் மூன்றாம் வீட்டதிபதி சூரியன் அங்கு நீச்சமாகி அந்த ராசிநாதன் சுக்கிரன் அங்கேயே ஆட்சி செய்வதும் நீசபங்க ராஜ யோகம் தருகிறது.*

*ஆறாம் வீட்டில் ராகு அமர்ந்திருப்பதும், 12 ஆம் வீட்டில் ஞானகாரகனான கேது அமர்ந்திருப்பதும் இரண்டு வீடுகளுக்கும் நல்லது. இதே அமைப்பு இரண்டாம் எலிஸபெத் ஜாதகத்தில் இருப்பதையும் காணலாம்.*

*தர்மஸ்தானாதிபதியான ஒன்பதாம் வீட்டதிபதி சனி உச்சமானது, விரயஸ்தானாதிபதியான பன்னிரண்டாம் வீட்டதிபதி சுக்கிரன் ஆட்சி பெறுவது, அந்த விரயஸ்தானத்தில் ஞானக்காரகனான கேது அமர்ந்திருப்பது மூன்றுமாகச் சேர்ந்து பில் கேட்ஸை தான தர்மங்களில் மனமுவந்து பெருந்தொகைகளைச் செலவு செய்ய வைத்திருக்கிறது. பல நாடுகளிலும் பல கோடி ரூபாய்களைத் தர்மகாரியத்திற்குத் தொடர்ந்து அவர் செலவு செய்து வருகிறார்.*

*இவர் ஜாதகத்தில் குறைகள் என்று சொன்னால் சந்திரன் நவாம்சத்தில் நீச்சம் அடைந்ததையும், ஐந்தில் பகைக் கிரகங்களான சூரியன் சனி சேர்க்கையையும் சொல்லலாம். புத்திர ஸ்தானமாகிய ஐந்தில் இச்சேர்க்கை இருப்பதால் இது குழந்தைகளினால் மனக்கசப்பு ஏற்பட வழிவகுக்கலாம். ஆனால் புத்திர ஸ்தானாதிபதி சுக்கிரன் ஆட்சி பலத்துடன் இருப்பது அந்தத் தீய விளைவுகளைக் குறைக்கும்.*



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சந்திரனில் இருந்து குரு ஆறில் இருப்பது சகட யோகம். ஆனால் சந்திரனில் இருந்து ஆறில் உள்ள குரு அதியோகத்தின் ஒரு பகுதியாகவும் (6ல் குரு, 7ல் புதன், எட்டில் சுக்கிரன்) ஆகி விடுவதால் சகட யோகத்தின் மோசமான பலன்கள் இல்லாமல் போகிறது.

குறைகள் இல்லாத ஜாதகம் இருக்க முடியாது என்பதைக் காட்டவே இந்த மூன்று அதிர்ஷ்ட ஜாதகங்களிலும் இருக்கின்ற குறைகளையும் சுட்டிக் காட்டினேன். மற்றபடி அதிக நிறைகள் இருக்கும் போது ஒருசில குறைகள் இருப்பது பெரிய பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை.

இதுவரை மூன்று அதிர்ஷ்ட ஜாதகங்களைப் பார்த்தோம். இனி துரதிர்ஷ்ட ஜாதகம் சில பார்ப்போம்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# ஒரு துரதிர்ஷ்ட ஜாதக உதாரணம்

ஜாதகத்தில் நிறைகளை விடக் குறைகள் அதிகமாய் இருக்கும்போது, அது துரதிர்ஷ்ட ஜாதகம் ஆகிறது. அரசனின் மகனாகப் பிறந்து அரசனாக ஆட்சி புரிந்தும் கடைசியில் ராஜ்ஜியத்தோடு உயிரையும் இழந்த திப்பு சுல்தானின் ஜாதகத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

திப்பு சுல்தான்:

இவர் பிறந்த நாள் 01-12-1751 நேரம் காலை 8.00

முதலில் இவர் யோகங்களில் உள்ள நல்ல யோகங்களைப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| | சந்திரன் | குரு<br>கேது | |
| செவ்வாய் | ராசி | | |
| | | | |
| லக்னம் | சனி<br>சூரியன்<br>ராகு<br>புதன் | சுக்கிரன் | |

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் | | கேது | குரு |
| சுக்ரன் சனி | நவாம்சம் | | |
| | | | |
| சூரியன்<br>புதன் | சந்திரன்<br>ராகு | | லக்னம் |



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சந்திரனில் இருந்து ஏழில் சுக்கிரன் ஆட்சி புரிவதால் மாலவ்ய யோகம் இருக்கிறது. லக்னத்தில் இருந்து லாபஸ்தானமான 11 ஆம் வீட்டில் சுக்கிரன் ஆட்சி புரிவதும் செல்வச் செழிப்பிற்கு நல்லதே புரிந்திருக்கிறது.

சந்திரனில் இருந்து ஏழில் சுக்கிரனும் எட்டில் புதனும் இருப்பது அதியோகம்.

இனி இவர் ஜாதகத்தில் உள்ள குறைகளைப் பார்ப்போம். லக்னாதிபதி குரு எதிரி வீடான ஆறாம் வீட்டில் போய் பலம் இழந்திருக்கிறது. லக்னத்தை எந்த சுபர்களும் பார்த்து வலுவேற்றவுமில்லை. எதிரி வீடான ஆறாம் வீட்டு அதிபதி சுக்கிரனோ சொந்த வீட்டில் வலுவாக உள்ளான். சுயம் வலுவிழந்து எதிரி வீடு பலம் பெறுவது நல்லதல்ல.

லக்னத்தில் இருந்து ஒன்பதாம் வீட்டு அதிபதி சூரியனும், பத்தாம் வீட்டு அதிபதி புதனும் ஒன்று சேர்ந்தது தர்மகர்மாதிபதி யோகம் என்றாலும் அது நல்ல வீட்டில் ஏற்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். லக்னத்தில் இருந்து விரயஸ்தானமான 12 ஆம் வீட்டிலும், சந்திரனில் இருந்து மறைவு ஸ்தானமான எட்டாம் வீட்டிலும் அமைந்துள்ளது. இரண்டில் இருந்துமே சரியில்லாதது பெரிய குறையே. பாக்கிய ஸ்தான அதிபதியும், தொழில் ஸ்தான அதிபதியும் விரய ஸ்தானத்தில் போனதால் அவருடைய அதிர்ஷ்டம், எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் வீணாகப் போயிற்று. அந்த 12 ஆம் வீட்டிலும் எந்த கிரகமும் ஆட்சி, உச்சம் இல்லை.

அதே போல ஐந்தாம் பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி செவ்வாய் மூன்றில் மறைந்ததும், ஐந்தாம் வீட்டில் எட்டாம் வீட்டதிபதி அமர்ந்ததும் பூர்வ புண்ணியமும் இல்லாமல் போனதைக் குறிக் கிறது.

மேலும் இந்த ஜாதகத்தில் ஒன்பது கிரகங்களில் ஏழு கிரகங்கள் 3, 6, 12 என்ற மறைவு ஸ்தானங்களில் இருப்பதையும் கவனியுங்கள்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மற்ற வீடுகளில் இரண்டு கிரகங்கள் மட்டும் இருக்கின்றன. அந்த இரண்டு கிரகங்களும் கூட 6 மற்றும் 8 என்ற இரண்டு மறைவு ஸ்தான அதிபதிகள் தான்.

இந்த ஜாதகத்தில் உள்ள ஒரு சில நல்ல அம்சங்களை எல்லாம் விழுங்கி விடும் அளவு இத்தனை தீய பலவீன அம்சங்கள் இருக்கின்றன. நவாம்சத்திலும் கூட இதைக் காப்பாற்றும்படியான பெரிய நன்மைகள் இல்லை. அதனால் தான் அவர் ஆங்கிலேயரைத் தோற்கடிக்கச் செய்த பெருமுயற்சிகள் எதுவும் வெற்றி தராமல் அவர் அழிவிற்குக் காரணமாகி விட்டன.

மேலும் ராஜகிரகங்களான சூரியனும் சந்திரனும் ராகு கேது களுடன் சேராமல் இருப்பது தான் அரசியல் அதிகாரம் பெற விரும்புபவர்களுக்குப் பாதுகாப்பு. திப்பு சுல்தான் ஜாதகத்தில் ராசியில் சூரியன் ராகுவுடன் இருப்பதையும், நவாம்சத்தில் சந்திரன் ராகுவுடன் இருப்பதையும் காணலாம்.

இது வரை குறிப்பிட்ட ஜாதகங்களைப் பார்த்து பலன் சொல்வது சுலபம். இரண்டாம் எலிஸபெத்தை ஒரு நாட் டுக்கு மகாராணி என்று சொல்லா விட்டாலும் கூட ஜோதிட ஞானம் உடையவர்கள் அவரை பேரதிர்ஷ்டக்காரர், தீர்க்காயுள், செல்வச் செழிப்பும், பேரும் புகழும் உடையவர், அரசாங்கத்தில் செல்வாக்கு படைத்தவர் என்பதைக் கஷ்டப்படாமல் சொல்லி விட முடியும்.

ஐன்ஸ்டீன் ஜாதகத்தைப் பார்த்து அவர் ஒரு நூற்றாண்டி லேயே சிறந்த விஞ்ஞானி, உலக நடப்பையே மாற்றக் கூடிய கண்டுபிடிப்புகளைத் தந்தவர் என்று சொல்லா விட்டாலும் கூட அவரும் நல்ல அதிர்ஷ்டக்காரர், பெரும் அறிவாளி, சிறப்பான செயல்களைச் செய்பவர், புகழ் அடைபவர் என்று சொல்லி விடலாம்.

பில் கேட்ஸ் ஜாதகம் பார்த்தும் உலகப் பணக்காரர்களில் முதல் இடங்களில் இருப்பவர் என்று சொல்ல முடியா விட்டாலும்



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அறிவாளி, பெரும் பணக்காரார் என்று சொல்லி விடலாம். அதே போல் திப்பு சுல்தான் ஜாதகத்தையும் பார்த்து தோல்வி அடையப் போகும் நஷ்ட ஜாதகம் என்று சுலபமாகச் சொல்லி விடலாம்.

ஏனென்றால் முதல் மூன்று ஜாதகங்களில் அதிர்ஷ்ட யோகங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றன. நான்காவதான திப்பு சுல்தான் ஜாதகத்தில் துரதிர்ஷ்டம் தெளிவாகத் தெரிகிறது. இது போன்ற ஜாதகங்களில் இப்படி கூட்டல், கழித்தல்கள் போட்டு எது அதிகம் மிஞ்சுகிறது என்பதையும் நடப்பு தசா புக்திகளையும் பார்த்து ஒரு முடிவுக்கு வருவது சுலபம்.

ஆனால் ஒரு ஜாதகத்தில் கூட்டல்களும், கழித்தல்களும் ஏறத்தாழ சமமாக இருந்து, நடப்பு தசா புக்திகளும் தெளிவாகப் பலன் செ ால்ல முடியாத நிலையில் இருந்தால் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பலன்கள் சொல்வது தான் கைதேர்ந்த ஜோதிடர்களுக்கும் கஷ்டம். அப்போது மிக ஆழமாக அந்த ஜாதகத்தை மேலும் ஆராய வேண்டி வரும்.

அப்படிப்பட்ட ஜாதகத்திலும் நடந்து முடிந்த விஷயங்களை அறிந்த பின் ஏன் நடந்தது என்று விளக்குவது சுலபம். முடிவுக்குத் தக்கபடி அருமையாக விளக்கங்கள் தரலாம். அந்த மனிதர் வெற்றி பெற்றால் வெற்றியின் அம்சங்கள் பற்றி பெருமையாகச் சொல்லி, தோல்வியின் அம்சங்களை 'அது பெரிய விஷயமில்லை' என ஒதுக்கி விடலாம். அந்த மனிதர் தோல்வி அடைந்தால் தோல்வியின் அம்சங்களைப் பெரிதாகச் சொல்லி வெற்றியின் அம்சங்களை 'அது போதாது' என்று சொல்லி விடலாம். (இந்த வேலையை இன்றைய பல ஜோதிடர்கள் வெகு சாமர்த்தியமாகச் செய்கிறார்கள்.) ஆன்ால் எதிர்காலப் பலன் சொல்ல ஜோதிட அறிவைத் தவிர ஜோதிடரின் வாக்குப் பலிதமும், அனுபவ ஞானமும், இறை அருளும் தேவைப்படும்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# அதிர்ஷ்டமா, துரதிர்ஷ்டமா? – ஒரு வித்தியாச ஜாதகம்

இனி நிறை குறைகள் இரண்டும் ஏறத்தாழ சமமாக இருக்கும் ஒரு விசேஷ ஜாதகத்தைப் பார்ப்போம். இது யார் ஜாதகம் என்பதை முன்பே அறிந்து கொண்டால் அதற்குத் தக்கபடி கணிக்க முற்படும் மனநிலை வந்து விடும். அதனால் அதைப் பின்பு பார்ப்போம். முதலில் நிறைகளைப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| | சூரியன்<br>செவ்வாய்<br>புதன்<br>சுக்கிரன் | | ராகு |
| | ராசி | | சனி |
| | | | |
| சந்திரன்<br>குரு கேது | | லக்னம் | |

| | | | |
|---|---|---|---|
| | | புதன்<br>ராகு | சூரியன் |
| | நவாம்சம் | | |
| சனி | | | சந்திரன் |
| | லக்னம்<br>செவ்வாய்<br>சுக்கிரன்<br>கேது | | குரு |



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



லக்னத்தில் இருந்து ஏழில் செவ்வாய் இருப்பது ருசக யோகம். நவாம்சத்திலும் செவ்வாய் லக்னத்தில் சொந்தவீட்டிலேயே இருப்பது செவ்வாயின் வலிமையை மேலும் கூட்டுகிறது.

சந்திரன் உள்ள ராசியிலேயே குரு சொந்த வீட்டில் இருப்பது ஹம்ச யோகம். நவாம்சத்தில் கூட குரு பலம் இழக்கவில்லை. சூரியனும் புதனும் சேர்ந்திருப்பது புத ஆதித்திய யோகம்.

ராஜகிரகமான சூரியன் லக்னத்தில் இருந்து ஏழில் உச்சம். இன்னொரு ராஜகிரகமான சந்திரனோ குருவுடன் இருக்கிறது. சூரியனும் சந்திரனும் ஒருவருக்கொருவர் திரிகோண ஸ்தானங்களில் நிற்கிறார்கள்.

சந்திரனில் இருந்து ஒன்பதாம் வீட்டுக்கு உரிய சூரியனும், பத்தாம் வீட்டுக்கு உரிய புதனும் சந்திரனில் இருந்து பூர்வ புண்ணிய ஸ்தானமான ஐந்தாம் வீட்டில் இருப்பது சிறப்பான தர்மகர்மாதிபதி யோகம்.

துலா லக்னத்திற்கு யோகக் காரகனான சனி தொழில் ஸ்தானமான பத்தாம் வீட்டில் இருப்பது நல்லது. மேலும் சனி நவாம்சத்தில் சொந்த வீட்டில் இருப்பதால் அதிக வலிமை பெறுகிறது.

இயற்கை சுபனான ஹம்ஸ யோக குரு ஐந்தாம் பார்வையாக சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாயையும், ஏழாம் பார்வையாக ராகுவையும் பார்க்கிறான்.

குறைகளை இனி பார்ப்போம்.
சந்திரனில் இருந்து ஹம்ஸ யோகம் பெற்றிருந்தாலும் குரு, துலா லக்னத்திற்கு 3. 6 என்ற இரண்டு மறைவு ஸ்தானங்களுக்கு அதிபதியாவதால் பாவி ஆகிறான்.

சனி லக்னத்தில் இருந்து நல்ல வீட்டில் இருந்தாலும் சந்திரனில் இருந்து கெட்ட வீடான எட்டில் இருக்கின்றான்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



*லக்னத்தில் இருந்து பத்தாம் வீட்டதிபதியான சந்திரன் லக்னத்திலிருந்து மூன்றாம் வீட்டில் இருக்கிறான். ராஜகிரகமான சந்திரன் கேதுவுடன் சேர்ந்திருப்பதும் ராகுவால் பார்க்கப்படுவதும் நல்லதல்ல.*

*சூரியன் உச்சம் பெற்றிருந்தாலும், செவ்வாய் ஆட்சி பெற்றிருந்தாலும் அவை இரண்டையும் அவர்கள் எதிரியான சனி பத்தாம் பார்வையாகப் பார்க்கிறான். அதே போல் செவ்வாயும் நான்காம் பார்வையாகப் பத்தில் உள்ள சனியைப் பார்க்கிறான்.*

*இப்படி இந்த ஜாதகத்தில் நிறைய நல்ல யோகங்கள் இருந்தாலும் ஒவ்வொன்றையும் பலவீனப்படுத்தும் அம்சங்களும் கூடவே இருக்கின்றன.*

*இந்த ஜாதகம் யாருடையது தெரியுமா? ஹிட்லருடையது. புத்தி மாதுர்ய யோகம் பேரறிவையும், ருசக யோகம் எதிரிகளை வெல்லும் திறமையையும், தர்ம கர்மாதிபதி யோகம் சாதித்துக் காட்டும் வல்லமையையும் அவருக்குத் தந்திருந்தது. அதனால் தான் சாதாரண மனிதராகப் பிறந்த ஹிட்லர் ஜெர்மனியின் சர்வாதிகாரியாக உயர முடிந்தது.*

*அவரது சாதனைகள் கொஞ்சமல்ல. அசாதாரணமான அறிவும், தன்னம்பிக்கையும் கொண்ட ஹிட்லர் நாட்டின் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளும் முன் ஜெர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக இருந்தது. நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமாக இருந்தது. ஆனால் தன்னால் நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை திடமாக அவரிடம் இருந்தது. 1933 ல் ஹிட்லர் தன் நாட்டு மக்களிடம் கூறினார். 'எனக்கு நான்கே நான்கு வருடங்களைக் கொடுங்கள். நம் நாட்டின் விதியை மாற்றிக் காட்டுகிறேன்' சொன்னபடியே ஹிட்லர் நாட்டின் தலைவிதியை மாற்றிக் காட்டினார். எழுபது லட்சம் பேர் வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருந்த ஜெர்மனி நாட்டில் அவர் தொழிற்சாலைகளையும், வாணிப அபிவிருத்தியையும் விரைவில் ஏற்படுத்தி வேலையில்லாத்*



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



திண்டாட்டத்தைப் போக்கினார். நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மிக நல்ல நிலைக்கு உயர்த்திக் காட்டினார்.

ஆனால் அவரது யோகங்களுக்கு எதிரான அம்சங்களும் வேலை செய்ய ஆரம்பிக்கவே அவரது அழிவும் ஆரம்பித்தது. தன்னை மிஞ்ச ஆளில்லை என்ற எண்ணம் அவருக்கு வலுப்பட ஆரம்பித்தவுடன் அவர் எடுத்த முடிவுகள் அவரது நாட்டை மட்டுமல்லாமல் உலகத்திலேயே பேரழிவுகளை ஏற்படுத்தின.

தசாபுக்திகள் அவர் வாழ்வில் எப்படிப் பலன்கள் தந்திருக்கின்றன என்று பார்ப்போம். ஆரம்ப சுக்ர, சூரிய சந்திர தசைகள் அவருக்கு சாதகமாக இல்லை. ஆனால் சில இக்கட்டான நிலைகளில் மாட்டிய அவரை அவற்றில் இருந்து காப்பாற்றின. ருசக யோகம் தந்த செவ்வாய் தசை அவர் உயர்வுக்கு அஸ்திவாரம் போட்டது. ஆனால் அந்தக் காலத்திலும் சனி பார்வையால் சில சிக்கல்களை அவர் சந்திக்க வேண்டி இருந்தாலும் செவ்வாய் அவருக்கு அரசியலில் பாதை போட்டுக் கொடுத்தான்.

ஒன்பதில் உள்ள ராகு தசையில் குரு புக்தியில் ஜெர்மனி அதிபர் ஆனார். ராகு தசையில் அடுத்து வந்த சனி, புதன் புக்திகள் அவர் நாட்டில் மேலே சொன்ன சாதனைகளைச் செய்து காட்ட உதவின. (சனி பத்தில் இருப்பவன். புதன் சந்திரனில் இருந்து பத்திற்கு உடையவன்.) கேது புக்தி வந்த போது அவர் போக்கில் மாறுதல் ஆரம்பித்தது. மனோ காரகனான சந்திரனுடன் கேது சேர்ந்திருந்தது அதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். ஞான மார்க்கத்தில் அவர் இறங்கி இருந்தால் கேது உதவி இருப்பான். கூடவே குருவும் இருப்பதால் அந்த மார்க்கத்திற்குக் குருவின் அனுக்கிரகமும் கிடைத்து இருக்கும்.

அரசு விஷயங்களில் ராஜ கிரகமான சந்திரனுடன் இருக்கும் கேது உதவுவதில்லை. கர்வத்துடனும், பிடிவாதத்துடனும், எந்த நல்ல அறிவுரைகளையும் செவி சாய்த்துக் கேட்காத மனத்துடனும் ஹிட்லர் நடந்து கொள்ள ஆரம்பித்தார். ஆனாலும் ஆரம்ப வெற்றியை அடுத்த சுக்கிர புக்தி கொடுத்தது. பின் சூரிய



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



புக்தியில் வீழ்ச்சி ஆரம்பித்தது. ரஷ்யாவிற்குள் பனிக்காலத்தில் ஜெர்மானியப்படை நுழைந்தது இக்காலத்தில் தான். சந்திர புக்தியில் முழுத் தோல்வி உறுதியாகி அவர் தற்கொலை செய்து கொண்டார். ராஜ கிரகங்கள் ஆன சூரிய சந்திரனுக்கு ராகு கேது கிரகங்கள் பகை என்று சொல்லி இருந்தோம். அதனால் ராகு தசையில் சூரிய புக்தியில் தொடங்கிய அழிவுப் பாதைப் பயணம் சந்திர புக்தியில் முடிவுக்கு வந்தது.

குரு தசை ஆரம்பிக்கும் வரை அவர் அடக்கி வாசித்திருந்தால் ஹம்ச யோக குரு அவர் போக்கை அழிவுப் பாதையில் இருந்து ஆக்கபூர்வமான போக்கிற்கு திசை திருப்பி இருக்கக் கூடும். ஏனென்றால் ராகு தசையில் குரு புக்தியில் அவர் ஜெர்மனிக்கு நல்லதே செய்தார். எத்தனையோ மோசமான நிலைமையில் இருந்து ஜெர்மனியை மீட்டார் என்பதை முன்பு குறிப்பிட்டோம். அதே போல அந்தக் காலக் கட்டத்தில் குரு தசை நடந்து கொண்டு இருந்திருந்தால் அவர் அழிவுப் பாதைக்கே போகாமல் இருந்திருக்கலாம். ஆனால் உலகத்தின் விதியை ஒரு மனிதன் விதியில் நிர்ணயம் செய்திருந்த இயற்கை குரு தசை வரும் வரை அவரைக் காத்திருக்க விடவில்லை என்றே சொல்ல வேண்டும்.

தசா புக்திகள் மனிதனை எந்த அளவு இயக்குகின்றன, அவன் விதியை எப்படித் தீர்மானிக்கின்றன என்று காட்டவே இந்த விளக்கத்தைப் பார்த்தோம்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# ஜாதகம் ஏன், எப்போது பார்க்க வேண்டும்?

ஜாதகம் நம் பூர்வ புண்ணியக் கணக்கு என்பதைப் பார்த்தோம். நம் கணக்கு எப்படி இருக்கிறது என்பதைப் பொதுவாக ஒவ்வொருவரும் பார்த்துக் கொள்வது நல்லது. நம் வங்கிக் கணக்கில் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டால் தானே நம் நிதி நிலைமை என்ன என்று புரிந்து கொண்டு இருப்பதை எப்படி உபயோகிப்பது என்று ஒருவர் திட்டமிட்டுத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள முடியும். அது போலத் தான் இதுவும். எதையும் புரிந்து கொண்டால் மட்டுமே பயன்படுத்த முடியும். விதி மட்டும் இதற்கு விதி விலக்கல்ல.

நடக்கிறபடி தானே நடக்கும், அதில் பார்க்க என்ன இருக்கிறது என்று சிலர் நினைப்பதுண்டு. அது அறிவு சார்ந்த அபிப்பிராயம் அல்ல என்று சொல்லி விட முடியாது. பொதுவாக மனிதனுக்கு எதிர்காலம் குறித்த எண்ணமே அதிகமாக இருக்கிறது. அவன் நேரத்தையும் சக்தியையும் அது அதிகம் எடுத்துக் கொள்கிறது. அதனால் எது நடக்கும் போதும் அவன் அந்த நிகழ்வால் பாதிக்கப்படுவதை விட அதிகமாய் அது பற்றிய எண்ணங்களால் பாதிக்கப்படுகிறான். அந்த நிகழ்வை விட அதனால் என்னவெல்லாம் ஆகி விடுமோ என்ற பயமும், கவலையும் தான் அவனை அதிகமாய் அலைக்கழிக்கிறது. செயல்பட வேண்டிய நேரத்தில் கவலை, பயம், குழப்பம் ஆகியவை அவன் நேரத்தையும், சக்தியையும் அதிகம் திருடிக் கொள்கின்றன.

நம் ஜாதகப்படி நம் வாழ்வின் முக்கிய காலகட்டங்கள் இப்படித் தான் இருக்கும் என்று முன்பே தெரிந்து விட்டால் ஒரு தெளிவு பிறக்கும். அனாவசிய பயங்களிலோ, எண்ணங்களிலோ தங்கி விடாமல் நேரத்திற்குத் தகுந்தது போல் செயல்பட ஆரம்பிக்கலாம். ஜாதகம் என்ற பூர்வ புண்ணியக் கணக்கின் நல்ல பலன்களையும், கெட்ட பலன்களையும் ஜாதகத்தில் அமைந்துள்ள கிரக நிலைப்படி குறிப்பிட்ட காலங்களில் நாம் அனுபவிக்க வேண்டி வரும். அந்தக்



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



காலகட்டங்கள் பற்றி முன்பே தெரிந்திருந்தால் ஒருவர் முன்னமே தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள முடியும்.

குறிப்பாக, புதிதாக ஒரு துறைக்குள் நுழைவது, ஒரு தொழில் ஆரம்பிப்பது போன்ற வாழ்வின் மிக முக்கிய கட்டங்களில் ஜாதகம் பார்த்து கிரகநிலை எப்படி இருக்கிறது என்று பார்த்துக் கொள்வது நல்லது. ஒரு வெளிநாட்டிற்கு முதல் முறையாகப் போகிறோம் என்று வைத்துக் கொள்வோம். நாம் போவதற்கு முன் அந்த நாட்டின் தட்பவெட்ப நிலை பற்றித் தெரிந்து கொண்டால் அதற்கேற்ற உடைகளை எடுத்துக் கொண்டு போகலாம் அல்லவா? தெரியாமல் வழக்கமாக நாம் அணியும் உடைகளையே எடுத்துக் கொண்டு போனால், அந்த சீதோஷ்ண நிலைக்கு நம் உடைகள் பொருத்தம் இல்லாததாக இருந்தால், அங்கு போய் அவதிப்பட வேண்டி வரும் அல்லவா? அதைப் போலத் தான் இதுவும்.

யோக காலம் என்றால் தைரியமாக அதிகப் பணத்தை முதலீடு செய்யலாம். காலம் மோசமாக உள்ளது என்றால் பணத்தை முதலீடு செய்யாமல் தவிர்க்கலாம். காலம் சரியாக அமையும் வரை வேறு வேலை ஏதாவது பார்க்கலாம். சுமாரான காலம் என்றால் அகலக் கால் வைக்காமல் பாதுகாப்பான தொகையை முதலீடு செய்து கவனமாக வியாபாரம் செய்யலாம். இதெல்லாம் ஜாதகம் பார்த்தால் மட்டுமே நம்மால் எடுக்க முடிந்த நிலைகள்.

அதே போல் தொடர்ச்சியாக பிரச்சினைகள், விபத்துகள் எல்லாம் ஏற்பட்டால் கண்டிப்பாக ஒருவர் ஜாதகம் பார்க்க வேண்டும். அப்போதைய தசா புக்திகள் கண்டிப்பாக மோசமானதாக இருக்கும். அந்த மோசமான காலம் எப்போது வரை இருக்கிறது என்று தெரிந்து கொண்டால் அதற்கு எதாவது பரிகாரம் செய்ய வேண்டி வந்தால் செய்யலாம். அந்த மோசமான காலம் முடியும் வரை ஜாக்கிரதையாக இருந்து வரலாம். எல்லாம் விதி வழி என்று வருவதைக் கஷ்டப்பட்டு தாங்கிக் கொண்டே இருக்காமல் ஆக்கபூர்வமாக எதாவது செய்யவும் ஜாதகம் வழி வகுக்கிறது.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# ஜாதகம் எப்போது பார்க்கக் கூடாது?

ஜாதகம் நம் வாழ்க்கைப் பாதைக்கு ஒரு நல்ல வரைபடம் என்று சொல்லலாம். ஆனால் வரைபடத்தையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருப்பது வாழ்க்கைப் பயணத்துக்கு ஒரு தடையாகவே இருக்கும்.

ஒரு முறை பார்த்தால் ஒட்டு மொத்தமான வாழ்க்கையின் போக்கு தெளிவாகத் தெரியும். அதன் படி நம் வாழ்க்கைப் பயணத்தைத் தொடரலாம். பயணத்தின் ஒரு கட்டத்தில் போகிற பாதை சரிதானா, பாதை என்னவோ போல் போகிறதே என்ற சந்தேகம் வந்தால் அந்தக் காலகட்டத்தை மட்டும் மேலும் ஆழமாகப் பார்த்துத் தெளிவு பெறலாம். அதற்கு ஏற்றது போல் நம் போக்கை மாற்றிக் கொள்ளத் தேவைப்பட்டால் மாற்றிக் கொண்டு பயணிக்கலாம்.

அந்த அளவில் மட்டுமே ஜாதகத்தை வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர தினமும் அதைக் கையில் வைத்துக் கொண்டு ஜோதிடர்களைத் தேடி அலையக் கூடாது. வரைபடத்தையே பார்த்துக் கொண்டு இருந்தால் வாழ்வது எப்போது? ஒவ்வொரு செயலையும் ஜாதகம் பார்த்துத் தான் தீர்மானிப்பது என்பது புத்திசாலித்தனம் அல்ல. மேலும் முக்கியமல்லாத சின்னச் சின்ன விஷயங்களுக்கும் ஜாதகத்தின் துணை தேடுவது தன்னம்பிக்கையைக் கெடுத்து வாழ்வின் சுவாரசியத்தையே அழித்து விடும்.

சிலர் தாங்கள் எதிர்பார்க்கும் பலன்களைச் சொல்லும் ஜோதிடர்களைத் தேடிப் போவதுண்டு. நம் கருத்தை அடுத்தவர் வாயால் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்வதில் அவர்களுக்கு ஓர்



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அலாதியான திருப்தி. இது அற்ப திருப்தியாகவே இருக்குமே ஒழிய அறிவார்ந்த அணுகுமுறை அல்ல.

சில சமயங்களில் ஜாதகத்தை இரண்டு ஜோதிடர்களிடம் ஒருவர் கேட்பதுண்டு. அப்போது ஒவ்வொரு ஜோதிடர் ஒவ்வொன்று சொல்வதைக் கேட்க நேரிடலாம். இதில் எது சரி என்று அறிய மூன்றாவது ஜோதிடரை அணுகினால் அவர் இரண்டும் அல்லாது மூன்றாவது விதமான பலன் சொல்ல, கேட்கப் போனவருக்குக் கிட்டத்தட்ட பைத்தியம் பிடிப்பது போல் இருப்பது உண்டு. இது போன்ற சமயங்களில் ஜாதகம் பார்ப்பது வழிகாட்டலாக இல்லாமல் ஒருவரைத் தடம் மாற வைப்பதாகவும் மாறி விடும்.

சிலர் சின்னச் சின்னப் பிரச்சினை வந்தாலும் ஏன் இப்படி ஆகி விட்டது என்று கேட்க ஜோதிடர்களைத் தேடிப் போவது ண்டு. இதெல்லாம் பைத்தியக்காரத்தனம். சின்னப் பிரச்சினை கூட இல்லாமல் எந்த வாழ்க்கையாவது இருக்க முடியுமா?

இப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனங்கள் எல்லாம் நிறைய பேரிடம் இருப்பதால்தான் போலி ஜோதிடர்களும், நேர்மையில்லாத ஜோதிடர்களும் அவர்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்துகிறார்கள். பேராசை, பெரும் பயம், பைத்தியக்காரத்தனம் இருக்கும் வரை இது போன்ற ஜோதிடர்கள் பிழைப்பு அமோகமாகவே நடக்கும்.

எனவே அடிக்கடி ஜாதகம் பார்ப்பதையும், அவசியம் இல்லாமல் ஜாதகம் பார்ப்பதையும் தவிருங்கள்!



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# மதியா? விதியா?

எல்லாமே ஜாதகப்படி தான் நடக்கும் என்றால் மனிதனின் அறிவுக்கும், முயற்சிகளுக்கும் அர்த்தமே இல்லையா என்ற கேள்வி நியாயமான கேள்வி. ஜாதகத்தில் நல்ல காலம், கெட்ட காலம் சொல்லப்பட்டு இருக்கிறது. நம் திறமைகள், நம் பலவீனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நமக்கு இருக்கும் ஏற்றத் தாழ்வுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அது விதி. அதை எதுவும் மாற்ற முடியாது.

ஆனால் அதன் விளைவுகள் துல்லியமாக இன்னது தான் என்று சொல்லப்படவில்லை. அவற்றின் எல்லைக்கோடுகள் தோராயமாக சொல்லப்பட்டிருக்கின்றனவே ஒழிய, உறுதியாக இந்த அளவு தான் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டவை அல்ல. அதனால் நல்லதை அதிகரித்துக் கொள்ளவும், தீமையைக் குறைத்துக் கொள்ளவும் ஒருவரால் முடியும். இதில் தான் ஒருவரின் மதியும், உழைப்பும், உறுதியும் அவருக்கு உதவ முடியும்.

உதாரணத்திற்கு ஒருவர் ஜாதகத்தில் மிக நல்ல காலம் என்று வைத்துக் கொள்வோம். அவர் அதில் சோம்பேறித்தனமாகவும், கவனக்குறைவாகவும் இருந்தால் கூட அந்த நல்ல காலத்தில் அவருக்கு நல்லதே நடக்கும். ஆனால் நடக்கும் நல்லதன் அளவு குறைவாக இருக்கும். அவர் அந்தக் காலத்தில் தன் முழுத் திறமைகளையும் பயன்படுத்தி நன்றாக உழைத்தால் அக்காலத்தில் அந்த நல்லதைப் பல மடங்காகப் பெற்று அனுபவிக்க முடியும்.

இன்னொரு ஜாதகத்தில் ஒரு நபருக்கு சோதனைக் காலம் என்று வைத்துக் கொள்வோம். அவர் எத்தனை திறமைசாலியாக இருந்தாலும் எத்தனை உழைத்தாலும் அந்தக் காலத்தில் அவர் கஷ்டங்களைத் தவிர்க்க முடியாது. கஷ்டங்கள் வந்தே தீரும். ஆனால் அந்தக் கஷ்டங்களின் அளவைத் தன் திறமையாலும், உழைப்பாலும் அவர் குறைத்துக் கொள்ளலாம்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அவர் அலட்சியக்காரராகவும், சோம்பேறியாகவும் இருந்தால் பல மடங்கு கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும். முந்தைய ஜாதகர் அந்தக் காலத்தில் நல்லது அனுபவிப்பதும், பிந்தைய ஜாதகர் அக்காலத்தில் பிரச்சினைகளையும், கஷ்டங்களையும் அனுபவிப்பது விதி. அந்த விதியை நீங்கள் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. நல்லதைக் கெட்டதாக்கவும், கெட்டதை நல்லதாக்கவும் முடியாது என்றாலும் அதன் தாக்கத்தை ஒருவர் தன் அறிவாலும், உழைப்பாலும் அதிகப்படுத்திக் கொள்ளலாம், அல்லது குறைத்துக் கொள்ளலாம். அது மதி.

அரசியலில் நன்றாக முன்னுக்கு வர முடியும் என்று ஜாதகம் சொல்கிறது என்று வைத்துக் கொள்வோம். கவுன்சிலர் பதவி, எம்.எல்.ஏ, எம்.பி, அமைச்சர் எல்லாம் முன்னுக்கு வரும் பதவி நிலைகள் தான். ராஜ யோகத்துடன் பிரமாதமாக முன்னுக்கு வர முடியும் என்றால் மாநில அமைச்சர், மத்திய அமைச்சர், அமைச்சர்களிலும் அதிகாரம் அதிகம் மிக்க துறை அமைச்சர், கட்சித் தலைவர், சபாநாயகர், முதலமைச்சர், பிரதமர் என்று எத்தனையோ பதவி நிலைகள் உள்ளன. இன்ன பதவி என்று ஜாதகம் உறுதியாகச் சொல்வதில்லை. அதைத் தீர்மானிப்பது ஜாதகரின் மதியும், உழைப்பும் தான்.

அதே போல ஒருவர் வறுமையில் உழலும் கால கட்டம் என்று ஜாதகம் சொல்வதாக வைத்துக் கொள்வோம். வறுமையில் எத்தனையோ நிலைகள் உள்ளன. மிகக் குறைந்த வசதிகளுடன் வாழ்வது வறுமை தான். மூன்று நேரம் கஞ்சி மட்டுமே குடித்து வாழ நேர்வதும் வறுமை தான். பிச்சை எடுப்பதும் வறுமை தான். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். ஜாதகர் மதியும், உழைப்பும் வறுமை நிலைகளிலேயே உத்தமமான, கௌரவமான வறுமை நிலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உதவலாம்.

அதே போல எந்த நிலையை விதி நமக்கு ஏற்படுத்திக் கொடுத்தாலும் அந்த நிலையில் அப்படியே தங்கி விட வேண்டும் என்பதில்லை. அதன் பின் அந்த நிலையை எப்படிச் சமாளிக்கிறோம் என்பதை நம் மதியாலேயே நாம் தீர்மானிக்கிறோம்.




https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# முழுமையான நல்ல, கெட்ட காலங்கள் உண்டா?



எந்த ஒரு ஜாதகமும் எல்லா நன்மைகளையும் பெற்றதாக இருந்துவிட முடியாது. 12 வீடுகளில் நல்லவற்றிற்கு மட்டுமல்லாமல் தீயவற்றிற்கும் பொறுப்பேற்கும் வீடுகள் இருக்கின்றன என்பதை ஆரம்பத்தில் பார்த்தோம். தீயதற்கான கிரகங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளைச் செய்யவே செய்யும்.

ஒவ்வொரு தசையிலும் ஒன்பது கிரக புக்திகளும் வரும். ஒவ்வொரு புக்தியிலும் ஒன்பது கிரக அந்தரங்களும் வரும். ஒவ்வொரு அந்தரத்திலும் எல்லா கிரக துணை அந்தரங்களும் வரும். (துணை அந்தரங்கள் பெரும்பாலும் நாள் கணக்கில் மட்டுமே இருக்கும் என்பதால் அவற்றிற்கு நாம் அதிக முக்கியத்துவம் தருவதில்லை.) இப்படிப் பார்த்தால் ஒரு கிரக தசை, ஒரு கிரக புக்தி, ஒரு கிரக அந்தரம், ஒரு கிரக துணை அந்தரம் என்று பல கிரகங்கள் நம்மை ஒவ்வொரு காலத்திலும் ஒரே நேரத்தில் பாதிப்பவையாக இருக்கின்றன. அவற்றில் கண்டிப்பாக நல்லதும் கெட்டதும் மாறி மாறி வந்தே தீரும். அதனால் தான் தொடர்ந்து சில மாதங்கள் மகிழ்ச்சியாகவே இருந்தவர்களும் இல்லை. ஒரே துக்க நிலையிலேயே தொடர்ந்து இருப்பவர்களும் இல்லை. யோக காலமே ஆனாலும் மகிழ்ச்சிக்கு எதிரான சில சில்லறைத் தலைவலிகளும் நடுவே இருக்கவே செய்கின்றன.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அது போல மோசமான காலத்திலும் நடுநடுவே சில ஆசுவா சங்களும் இருக்கவே செய்கின்றன. அந்தப் பலன்களின் அளவுகள் அந்தக் கிரகங்களின் வலிமையின் அளவைப் பொறுத்தே இருக்கும் என்றாலும் ஏதோ ஓர் அளவு இருந்தே தீரும்.

எனவே நல்ல காலங்களிலும் சின்னச் சின்ன தடங்கல்கள், பிரச்சினைகள் வரலாம் என்பதை உணர்ந்திருங்கள். நல்ல காலம் என்றார்களே இப்படி ஆகி விட்டதே என்று வாழ்க்கையில் இயல்பாக வரும் சின்ன அசௌகரியங்களுக்கு எல்லாம் மனம் உடைந்து விடாதீர்கள்.

அதே போல கெட்ட காலங்களிலும் எல்லாமே தீமையாகவே இருந்து விடாது. இடையிடையே ஓரளவாவது ஆசுவாசப்படுத்தும்படியான சம்பவங்கள் கிடைக்கும். கவலைப்படாதீர்கள்.

மேலும் கெட்ட காலம் என்றால் எல்லா விதங்களிலும் அது கெட்டதாக இருந்து விடாது. நடக்கும் தசா புக்திகளின் கிரகங்களின் தன்மைகள், அவை இருக்கும் வீடுகளின் தன்மைகள், அவை எந்த வீடுகளின் அதிபதிகளோ அவற்றின் தன்மைகள் ஆகியவை சம்பந்தப்பட்ட ஓரிரு விஷயங்களிலேயே கெட்டதாக இருக்கும். மற்றவை எல்லாம் சாதாரணமாகவே இருக்கும். அதே போல நல்ல காலமும் எல்லா விஷயங்களிலும் நல்லதாக இருந்து விடாது. சம்பந்தப்பட்ட ஒருசில விஷயங்களிலேயே நல்லதாக இருக்கும்.

உதாரணத்திற்கு ஆரோக்கியம் மோசமாக இருக்கும் ஒரு கெட்ட காலத்தில் ஒருவருக்குப் பணவரவு பாதிக்கப்படாமல் சிறப்பாகவே இருக்கலாம். அதுபோலவே தொழில் ரீதியாக சிறப்பாக இருக்கும் ஒரு யோக காலத்தில் குடும்பப் பிரச்சினைகள் தலை தூக்கலாம்.

இதை எல்லாம் பார்க்கும் போது முழுமையான நல்ல காலமும், முழுமையான கெட்ட காலமும் இல்லை என்றே உறுதியாகச் சொல்லலாம்.




https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# கோசாரம் முக்கியமா? தசா புக்தி முக்கியமா?



கோசாரம் ஜாதகத்தில் சந்திரன் நின்ற ராசியிலிருந்து தற்போது கிரகங்கள் எந்த வீடுகளில் இருக்கின்றன என்பதை வைத்துப் பலன் சொல்லும் முறையாகும். கிரகங்கள் ஒரு வீட்டில் இருந்து இன்னொரு வீட்டிற்குச் செல்லும் போது பலன்கள் மாறுகின்றன. அப்படிப் போவதை அந்தக் கிரகத்தின் பெயர்ச்சி என்று சொல்கிறார்கள். கிரகப் பெயர்ச்சிகளில் முக்கியமானவை குருப்பெயர்ச்சியும் சனிப்பெயர்ச்சியுமே ஆகும்.

குரு ஆண்டுக்கு ஒரு முறை ஒரு ராசியிலிருந்து இன்னொரு ராசிக்கு இடம் பெயர்கிறார். சனி இரண்டரை ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு ராசியில் இருந்து இடம் பெயர்கிறார். சனி சந்திரனுக்கு முந்தைய வீடு, சந்திரன் நிற்கும் வீடு, அதற்கு அடுத்த வீடு என்ற இந்த மூன்று வீடுகளில் இரண்டரை ஆண்டுகள் வீதம் தங்கி இருக்கும் ஏழரை ஆண்டுகளை ஏழரை சனி என்று அழைக்கிறார்கள்.

குருப்பெயர்ச்சிக் காலங்களிலும் சனிப்பெயர்ச்சிக் காலங்களிலும் பல பத்திரிகைகளில் ஒவ்வொரு ராசிக்கும் பலன்கள் சொல்லப்படுவதைப் பார்க்கலாம். பொதுவாக குரு 2,



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



5, 7, 9, 11 வீடுகளில் இருக்கும் போது நல்ல பலன்களும் மற்ற வீடுகளில் இருக்கும் போது கெட்ட பலன்களும் சொல்லப்படுகின்றன. சனி 3, 6, 11 வீடுகளில் மிக நல்ல பலன்களும், ஏழரை சனி மற்றும் எட்டாம் வீட்டில் இருக்கும் போதான அஷ்டம சனி காலத்தில் மிக மோசமான பலன்களும், மற்ற வீடுகளில் இருக்கும் போது நன்மை, தீமை கலந்த கூட்டுப் பலன்களும் தருவதாகச் சொல்லப்படுகின்றன.

நம் தசாபுக்தி காலங்களில் சொல்லப்படும் பலன்கள் முக்கியமா? இப்படி கோசார ரீதியாகச் சொல்லப்படும் பலன்கள் முக்கியமா? என்று கேட்டால் தசாபுக்தி காலமே மிக முக்கியம் என்று சொல்ல வேண்டும். தசாபுக்தி பலன்களின் வலிமையைக் கோசாரப் பலன்கள் ஓரளவு கூட்டலாம்; அல்லது குறைக்கலாமே தவிர அதை விட முக்கியமாகி விடாது.

தசாபுக்தி காலம் நன்றாக இருந்து, கோசார பலன்களும் நன்றாக இருந்தால் மிகச் சிறப்பான நன்மைகளை ஒருவர் அனுபவிக்க முடியும். தசாபுக்தி காலம் மோசமாக இருந்து கோசார பலன்கள் நன்றாக இருந்தால் மோசமான பலன்கள் ஓரளவு குறையும். தசாபுக்தி பலன்கள் நன்றாக இருந்து கோசார பலன்கள் மோசமானால் அந்தக் காலத்தில் தசாபுக்தி பலன்களின் நன்மையில் ஓரளவு குறையும். இரண்டுமே மோசமானால் மிக மோசமான காலம் என்றே சொல்ல வேண்டும்.

எனவே தசாபுக்திப் பலன்கள் நன்றாக இருக்குமானால் கோசாரப் பலன்களைப் பற்றி ஒருவருக்குக் கவலை தேவை இல்லை.

ஒவ்வொரு குரு, சனிப் பெயர்ச்சியின் போதும் அந்தப் பலன்களைப் போடும் சில பத்திரிகைகள் கோசார பலன்களே ஒருவர் வாழ்க்கையை மாற்றிப் போட வல்லது என்ற பிரமையை மக்களிடம் தோற்றுவிக்கின்றன. அது தவறானது.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# நல்ல காலங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும்?

ஜாதகப்படி ஒருவருக்கு நல்ல காலம் என்று இருக்கும் போது பலரும் வர வேண்டிய செல்வமும், சிறப்பும் தானாகத் தங்களிடம் வந்து சேரும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஓரளவு அது நடக்கவும் செய்யும் என்றாலும் சில உண்மைகளை அந்தக் காலத்தில் ஒருவர் மறந்து விடக் கூடாது.

நல்ல காலத்தில் நம் குறைந்த முயற்சிகளுக்கும் நிறைய பலன்கள் கிடைக்கும் என்றாலும் நம் முழுமையான முயற்சிகளுக்கு முழுமையான நல்ல பலன்களை அனுபவிக்கலாம் என்பதை நினைவில் நிறுத்த வேண்டும்.

நல்ல காலம் ஏற்படுத்தும் கிரகங்கள் நமக்கு எந்தெந்த விஷயங்களில் அனுகூலமாக இருக்கிறது என்பதை முதலில் அறிய வேண்டும். அந்த விஷயங்களில் எத்தனையோ கனவுகள் நமக்கு இருந்திருக்கக் கூடும். அதை எல்லாம் நடைமுறைப்படுத்த நல்ல காலம் அருமையான காலம். பல காலமாய் இருந்து வரும் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் சரிப்படுத்தவும் நல்ல காலம் உகந்த காலம். இது போன்ற புது முயற்சிகளை நல்ல காலத்தில் எடுத்துக் கொள்வது புத்திசாலித்தனம்.

எனவே, நல்ல காலத்தில் தைரியமாகச் சில முடிவுகளை எடுக்கலாம். புது முயற்சிகளில் இறங்கலாம். அவை நல்ல பலன்களைத் தரும். ஆனால் அதற்கடுத்த தசா புக்திகள் எப்படி இருக்கின்றன என்பதையும் முதலிலேயே தெரிந்து வைத்துக் கொள்வது முக்கியம். நல்ல காலங்களில் நல்ல பலன்கள் நமக்குக் கிடைக்கும் என்பது உறுதியே ஒழிய, கெட்ட காலத்திற்கான விதைகளை நல்ல காலத்தில் நாம் விதைக்க மாட்டோம் என்பதற்கு உத்தரவாதமில்லை.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தொடரும் காலம் மோசமானதாக இருந்தால் நல்ல காலத்தில் எடுக்கப்படும் பல முட்டாள்தனமான, மோசமான முடிவுகளின் பலனைப் பிறகு அனுபவிக்க வேண்டி வரும். அதனால் எனக்கு நேரம் நன்றாக இருக்கிறது; எதை வேண்டுமானாலும் செய்வேன் என்ற கர்வம் வராமல் ஒருவர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒருவருக்கு ஜாதகத்தில் குரு யோகம் தரும் நல்ல நிலையில் இருக்கிறான் என்றும் சனி கெட்டுப் போயிருக்கிறான் என்றும் வைத்துக் கொள்வோம். குரு தசை ஒரு தேதி வரை இருக்கிறது. அதற்கு மறு நாள் சனி தசை ஆரம்பமாகிறது என்றால் அந்த ஜாதகன் அந்தத் தேதி வரை ராஜா மாதிரி இருந்து, அதற்கு அடுத்த நாளில் இருந்து பிச்சைக்காரன் போல ஆகி விடுவான் என்று அர்த்தமில்லை. அந்த வீழ்ச்சி குரு தசையில் இருந்தே சிறிது சிறிதாக ஆரம்பித்து விடும். அதன் விளைவுகள் நல்ல காலத்தில் பாதிக்காது இருக்குமே ஒழிய இருந்தே தீரும்.

அதனால் நல்ல காலத்தில் கூடக் கவனமாக இருந்து, அறிவுபூர்வமாக நடந்து, கடுமையாக உழைத்தால் பின்னால் தொடர்வது கெட்ட காலமே ஆனாலும் சரிவு இருக்குமே ஒழிய வீழ்ச்சி வந்து விடாது. மாறாக, நல்ல காலத்தில் அலட்சியமாகவும், சோம்பேறியாகவும், கர்வமாகவும் நடந்து கொண்டால் கெட்ட காலத்தில் பெரும் வீழ்ச்சியைச் சந்திக்க வேண்டி வரும்.

தசா புக்திகளின் படி ஒரு மோசமான காலம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதற்கு அடுத்த தசாபுக்தி மோசமும் அல்லாமல், நல்லதும் அல்லாமல் இருக்கும் சமமான கிரகங்களின் காலம் என்றாலும் கூட அது நல்ல காலம் போலத்தான். மோசமான காலம் முடிவதே நன்மை தானே. நம் முயற்சிகளுக்கு அந்தச் சுமாரான காலத்தில் நிதானமாகவாவது பலன் கிடைக்கும். பொதுவாக நல்ல காலங்களில் உற்சாகமாக நிறைய செயல்படுங்கள். அது கெட்ட காலங்களுக்கு உங்களுக்கு உதவ நீங்கள் சேர்த்து வைக்கும் சேமிப்பு என்பது நினைவிருக்கட்டும்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# கெட்ட காலங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும்?

கெட்ட காலம் வரும் போது வந்து விட்டுப் போகட்டும் முன்பே தெரிந்து விட்டால் இப்போது இருக்கிற நிம்மதியையும் இழந்து விடுவோம் என்று சிலர் நினைப்பதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் முன் கூட்டித் தெரிந்து கொள்ளும் போது நாம் நம்மை அதற்காகத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம். நடப்பது நடந்தே அல்லவா தீரும் என்று சிலர் கேட்கலாம். தீமைகள் நடக்கும் காலத்தில் தீமைகள் நடந்தே தான் தீரும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் அதன் அளவுகளை ஒரு புத்திசாலி வெகுவாகக் குறைத்துக் கொள்ள முடியும். பெரிய அளவில் வர இருப்பதைச் சிறிய அளவுக்குள் நிறுத்திக் கொள்ள ஒருவரால் கண்டிப்பாக முடியும்.

கஷ்ட காலம் என்றால் அதை ஏற்படுத்தும் கிரகத்தின் தனித்தன்மை, அது சம்பந்தப்படும் வீட்டின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்த விஷயங்களில் பிரச்சினைகள் இருக்கும். அந்த விஷயங்களில் அந்தக் காலத்தில் ஜாதகர் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

விபத்துகள் ஏற்படக்கூடிய காலமானால் வாகனங்கள் ஓட்டும் போது எச்சரிக்கை தேவை. சண்டை சச்சரவுகள் வரும் காலமாக இருந்தால் வார்த்தைகளில் கவனமாக இருங்கள். பொறுமையை முடிந்தவரை கடைபிடியுங்கள்.

அதே போல மோசமான காலங்களில் புதிய தொழில் கண்டிப்பாகத் துவங்கக் கூடாது. புதிதாகத் தொழில் கூட்டணியும் அந்தக் காலத்தில் நல்லதல்ல. யாராவது ஜாமீன் கையெழுத்து போடச் சொன்னால் போட்டு விடாதீர்கள்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உடல்நலம் பாதிக்கப்படும் காலமாக இருந்தால் அளவான உணவு உண்ணல், தொடர்ந்த உடல் பயிற்சிகள், முதலிலேயே ஏதாவது நோயால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் தொடர்ந்து முறையாக மருந்து உட்கொள்ளல், போன்றவை ஒருவர் கவனத்து டன் பின்பற்ற வேண்டிய வழி முறைகள்.

முக்கியமாக, ஜாதகத்தில் சனி மோசமாக இருந்து அவனுடைய தசையோ, புக்தியோ வருமானால் அந்தக் காலத்தில் வழக்குகளில் சிக்கிக் கொள்ள வேண்டாம். சனி சம்பந்தப்பட்ட காலத்தில் எல்லாமே தாமதப்படும் என்பதால் வழக்கு நீண்டு கொண்டே போகும். மேலும் சனி சம்பந்தப்பட்ட காலத்தில் ஒழுங்கீனம், அலட்சியம் போன்றவற்றிற்கு ஒருவர் அதிக விலை தர வேண்டி வரும். எனவே அது போன்ற காலங்களில் எச்சரிக்கை தேவை.

மோசமான காலங்களில் எது நடப்பதாக இருந்தாலும் உங்கள் ஒத்துழைப்பும் பங்களிப்பும் இல்லாமல் தானாக நடக்கையில் அந்தக் காலங்களின் பாதிப்பு பலவீனமாகவும், காலப் போக்கில் எளிதாகச் சரி செய்து விடக் கூடியதாகவும் இருக்கும். முன்னெச்சரிக்கையாக இருக்கும் போது கவனமாக அடியெடுத்து வைக்கிறோம் என்பதால் விபரீதமான சறுக்கல்கள், பெரிய வீழ்ச்சி போன்றவை இருக்காது. அது போன்ற காலங்களில் கடவுள் நம்பிக்கையும் பிரார்த்தனையும் ஒருவருக்குப் பேருதவியாக இருக்கும்.

மேலும், சோதனைக் காலங்கள் ஒரு விதத்தில் நமக்கு நம் உடன் இருப்பவர்களைச் சரியாக அறிமுகப்படுத்துபவை. நண்பர்கள், உறவினர்கள் எல்லாம் எப்படி என்பதைச் சோதனைக்காலங்கள் வராமல் யாரும் அறிந்து கொள்ள முடியாது. நல்ல யோக காலங்களில் எல்லோரும் நண்பர்களே! எல்லோரும் நல்லவர்களே! மேலும் நம் குறைகளையும், பலவீனங்களையும் சோதனைக் காலங்களே நன்றாக வெளிச்சம் போட்டுக் காட்டும். அதனால் அந்த விதத்திலும் நம்மையும், மற்றவர்களையும் சரியாகப் புரிந்து கொள்ள உதவும் கெட்ட காலங்கள், பின்னால் வரும் நல்ல காலங்களில் சரியாக நடந்து கொள்ள நமக்கு உதவும்.




https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# கற்கள், எண்கள், பூஜைகள் அதிர்ஷ்டம் தருமா?



கஷ்ட காலங்களில் உகந்த அதிர்ஷ்ட ரத்தினம் அணிந்து கொண்டால் கஷ்டம் ஓடோடிப் போய் விடும் என்கிற வகையில் தினமும் தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் வருவதைப் பலரும் அடிக்கடி பார்க்கிறோம். அதே போல பெயரில் ஓர் எழுத்தைக் கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ செய்தாலும் ஓஹோ என்று ஒருவர் இருக்க முடியும் என்று நியூமலராலஜி நிபுணர்கள் சொல்வதையும் காண்கிறோம். அதே போல கிரகங்களால் ஏற்படும் கெட்ட காலங்கள் சில பூஜைகள் செய்தால் முற்றிலும் சரியாகி நன்மையானதாக மாறி விடும் என்று சில ஜோதிடர்கள் சொல்வதையும் கேட்கிறோம்.

இதெல்லாம் உண்மையா? ஓர் அதிர்ஷ்ட ரத்தினம் அணிந்தும், பெயரின் எழுத்துகளை மாற்றியும், பூஜைகள் செய்தும் விதிக்கப்பட்டதை மாற்றிக் கொள்ள முடியுமா? ஜாதகப்படி கெட்ட காலமாக இருந்து இப்படி எல்லாம் செய்வதன் மூலமாகக் கெட்ட காலத்தை நம்மால் நல்ல காலமாக மாற்றிக் கொள்ள முடிந்தால் முன்பு ஜாதக சாஸ்திரம் சொல்லும் கெட்ட காலம் என்ற கணிப்பு பொய் என்றல்லவா ஆகிவிடும்? போன்ற கேள்விகள் இயல்பாக நம் மனதில் எழலாம்.

ஆனால் இந்தக் கேள்விகளுக்கு ஒரே பதில் தான் நேர்மையானதாக இருக்கும். உகந்த அதிர்ஷ்டக்கல்லை அணிந்து கொள்வதாலும், பெயரின் எழுத்துகளை மாற்றிக் கொள்வதாலும்,



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பூஜைகள் செய்வதாலும் விதியை முற்றிலுமாக ஒருவர் மாற்றி விட முடியாது என்பது தான் அந்தப் பதில்.

அப்படி மாற்ற முடிந்தால் பெரும் பணக்காரர்கள் அணிய முடியாத ரத்தினங்களா? அவர்களால் செய்ய முடியாத பூஜைகளா? அரசியல்வாதிகள் பதவி, அதிகாரத்திற்காகப் பத்து விரல்களிலும் அதிர்ஷ்ட ரத்தின மோதிரங்களைப் போட்டுக் கொண்டு கால் விரல்களிலும் கூட அணியத் தயங்க மாட்டார்களே. இன்றும் பல அரசியல்வாதிகள் தோஷ கிரகங்களுக்குச் சாந்தி செய்ய பல ஹோமங்களைப் பல திருத்தலங்களில் செய்வதாக செய்திகள் அடிக்கடி வருகின்றனவே. பெயர் எழுத்துகளை மாற்றி எல்லா பிரச்சினைகளில் இருந்தும் மீளலாம் என்றால் பரம தரித்திரன் கூட அதைச் செய்வானே!

பணக்காரர்களும், அரசியல்வாதிகளும் தங்கள் துரதிர்ஷ்ட நிலையைப் போக்கிக் கொள்ள, அதிர்ஷ்டத்தை அதிகரித்துக் கொள்ளப் பணத்தினால் செய்ய முடிந்த எதையும் செய்யத் துணிந்தும் கூட விதியை அவர்களாலும் கூட மாற்ற முடிவதில்லை என்பதை நாம் பார்க்கிறோம். எனவே இதுபோன்ற விளம்பரங்களை நம்பி ஏமாந்து விட வேண்டாம்.

தொலைக்காட்சி விளம்பரங்களில் ஒருவர், '' நேற்று வரை பிச்சைக்காரராக இருந்தேன்; ஓர் அதிர்ஷ்டக்கல் அணிந்த மறு நாளே கோடீசுவரனாக மாறி விட்டேன்'' என்று சொல்லலாம். கிட்டத்தட்ட நிகழ்ச்சி முழுவதும் இப்படிப்பட்ட அறிவிப்புகள் தான் பலரால் மாறி மாறிச் சொல்லப்படும். இவ்வளவு சுலபமான ஒரு வழி இருந்தால் கல்வி எதற்கு? திறமை எதற்கு? உழைப்பு எதற்கு? எதற்கு ஒருவர் கஷ்டப்பட வேண்டும்?

இப்படி விளம்பரம் செய்யும் நபரே அப்படி ஓர் அதிர்ஷ்டக்கல்லை அணிந்து விட்டால் விளம்பரத்திற்குச் செலவு செய்து பிழைப்பு நடத்தும் நிலையில் இருக்கத் தேவை இல்லையே! அந்தக் கல்லை அணிந்து கொண்டு வரும் பணத்தைச் செலவு செய்து கொண்டு சந்தோஷமாக இருக்கலாமே?



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கிரகங்களுக்கு உகந்த அதிர்ஷ்ட ரத்தினங்கள் பற்றி ஜோதிட நூல்களில் சொல்லப்பட்டு உள்ளது என்பது உண்மையே. அதேபோல் நியூமராலஜியும் பல்லாண்டுகளாகப் பின்பற்றி வரும் ஒன்றாகும். பூஜை, புனஸ்காரங்கள் கூடப் பயனற்றவை என்று சொல்ல முடியாது. அதற்கென்று இருக்கும் சக்திகளாலோ, அவை நம் கஷ்டங்களைக் குறைக்கும் என்ற நமது நம்பிக்கையாலோ நம் கஷ்டங்களின் தாக்கம் குறையலாம், கஷ்டங்களைச் சந்திக்கும் தெம்பு நமக்கு ஏற்படலாம். ஆனால் நிலைமை தலைகீழாகவே மாறி விடும் என்று சொல்வது உண்மையல்ல.

எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருப்பதாலும், அதிர்ஷ்டக்கல், அதிர்ஷ்ட எண், பூஜை ஆகியவற்றின் (நமக்கும் மேலான) சக்தி நமக்கு உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் செயல்படுவதாலும், எல்லாவற்றிற்கும் மேலாகப் பிரார்த்தனையாலும் கஷ்ட காலங்களின் தாக்கம் மிகவும் குறைய வாய்ப்பிருக்கிறது என்று மட்டும் சொல்லலாம்.

பொதுவாக, சம்பந்தப்பட்ட கிரகங்களின் கெட்ட காலத்தில் பரிகாரங்களாக சொல்லப்படுபவற்றைப் பார்க்கலாம்.




https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# கெட்ட காலங்களில் பரிகாரங்கள் என்னென்ன?



கஷ்ட காலங்களைத் தரும் கிரகங்கள் எழுந்தருளியுள்ள கோயில்களுக்குச் செல்வது, அந்தக் கிரகங்களுக்கு உகந்த ரத்தினங்களை அணிவது, அந்த கிரகங்களுக்குப் பிடித்த தானியங்களைத் தானமாகத் தருவது அல்லது அந்த தானியங்களிலான பதார்த்தங்களை இறைவனுக்குப் படைத்து அவற்றைப் பக்தர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் தருவது போன்றவை நன்மை தருவதாக நம்பப்படுகிறது.

இதெல்லாம் முடியாதவர்கள் நவகிரகங்களை ஒன்பது அல்லது அதற்கு அதிகமாகச் சுற்றி வலம் வருவதும் சமமான நன்மை தருவதாகச் சொல்லப்படுகிறது. ராகு கேது தவிர மற்ற ஏழு கிரகங்களை அந்தந்த கிழமைகளில் வணங்குவது விசேஷமாகக் கருதப்படுகிறது. நவகிரகங்களைச் சுற்றும் போது தயவு செய்து ஒன்று, இரண்டு என்று எண்ணிக்கை சொல்லிச் சுற்றாதீர்கள். பள்ளிக் கூடத்தில் ஒன்று இரண்டு சொல்வது போலத் தான் அதுவும். கவனம் எண்ணிக்கையில் இருக்குமே ஒழிய பக்தியில் இருக்காது. ஒன்பது சுற்றுக்குக் குறையாமல் பக்தியுடன்



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சுற்றுங்கள். ஒன்றிரண்டு சுற்று அதிகமாக இருந்தால் தவறில்லை. சிலர் ஒவ்வொரு சுற்றின் போதும் ஒவ்வொரு கிரகத்தின் பெயரைச் சொல்லி மனதில் வணங்கிக் கொண்டு சுற்றுகிறார்கள். அதுவும் நல்லதே.

நம்பிக்கையுடனும், பக்தியுடனும், சிரத்தையுடனும் இதைச் செய்வது பலன் அளிக்கிறது; கஷ்டங்களின் அளவு குறைகின்றது என்பதை நான் அனுபவத்தில் பார்த்தும் இருக்கிறேன்.

நவகிரகங்களுக்குத் தனிக்கோயில்கள் இல்லை. மேலே சொன்ன கோயில்களில் கூட மூலக் கடவுள் சிவபெருமானே. அந்தக் கோயில்களின் பிரகாரங்களில் தான் நவகிரகங்களுக்குத் தனியாகச் சிறப்பு சன்னிதிகள் அமைந்துள்ளன.

இனி ஒவ்வொரு கிரகமாகப் பார்ப்போம்.

சூரியன்: கோயில் - சூரியனார் கோயில் (கும்பகோணத்தில் இருந்து சுமார் 12 கி.மீ. தொலைவில் உள்ளது.)
ரத்தினம்- மாணிக்கம்
தானியம்- கோதுமை

சந்திரன்: கோயில் - திங்களூர். (திருவையாற்றில் இருந்து சுமார் 4 கி.மீ. தொலைவில் உள்ளது.)
ரத்தினம்- முத்து
தானியம்- பச்சரிசி

செவ்வாய்: வைத்தீஸ்வரன் கோயில். (மாயவரத்தில் இருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது.)
ரத்தினம்- பவளம்
தானியம்- துவரை



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



*புதன்:* திருவெண்காடு (சீர்காழியில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது)

ரத்தினம்- மரகதம்

தானியம்- பச்சைப் பயறு

*குரு:* ஆலங்குடி (கும்பகோணத்தில் இருந்து சுமார் 17 கி.மீ. தொலைவில் உள்ளது)

ரத்தினம்- புஷ்பராகம்

தானியம்- கடலை

*சுக்கிரன்:* கஞ்சனூர் (சூரியனார் கோயிலில் இருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது)

ரத்தினம்- வைரம்

தானியம்- மொச்சை

*சனி:* திருநள்ளாறு. (காரைக்காலில் இருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

ரத்தினம்- நீலம்

தானியம்- எள்

*ராகு:* திருநாகேஸ்வரம் (கும்பகோணத்தில் இருந்து சுமார் 6 கி.மீ. தொலைவில் உள்ளது)

ரத்தினம்- கோமேதகம்

தானியம்- உளுந்து.

*கேது:* கீழ்பெரும்பள்ளம் (திருவெண்காட்டில் இருந்து சுமார் ஆறு கி.மீ. தொலைவில் உள்ளது)

ரத்தினம்- வைடூரியம்

தானியம்- கொள்ளு.

ராகு, கேது கிரகங்களுக்குக் காளஹஸ்தியும் சிறப்பான திருத்தலமாகச் சொல்லப்படுகிறது.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# ஒருவர் விதியை இன்னொருவர் விதி மாற்றுமா?



ஒரு குழந்தை பிறந்த நேரம் ஒரு குடும்பத்தில் அதிர்ஷ்டம் அல்லது துரதிர்ஷ்டம் ஆரம்பித்து விட்டது என்றும், ஒரு மருமகள் ஒரு குடும்பத்திற்குள் புகுந்த நேரம் அதிர்ஷ்டம் அல்லது துரதிர்ஷ்டம் ஆரம்பித்து விட்டது என்றும் சொல்லக் கேட்டு இருக்கிறோம். அவர்கள் சொல்லும் படியே அந்த குடும்பத்தில் அந்த வரவுக்குப் பின் சுபிட்சமோ, தரித்திரமோ தாண்டவம் ஆடுவதும் மறுக்க முடியாத உண்மையாக இருக்கக் கூடும்.

அப்படியானால் ஒருவர் விதி மற்றவரின் விதியையோ, ஒரு குடும்பத்தின் விதியையோ மாற்றும் அளவு வல்லமை உடையதா? அப்படியானால் அந்தக் குடும்பத்தின் மற்ற அங்கத்தினர் ஜாதகங்களின் படி உள்ள பலன்கள் என்ன ஆகின்றன? என்பது போன்ற கேள்விகள் எழுகின்றன.

உண்மையில் ஒருவர் விதி இன்னொருவர் விதியை மாற்ற முடியாது. சொல்லப் போனால் இரண்டு விதியே இல்லை. இருப்பது ஒரு விதியே. எல்லார் தலையெழுத்தை எழுதும் கை ஒன்றே. அப்படியானால் எப்படி ஒரு குழந்தையின் பிறப்பும், ஒரு மருமகளின் வரவும் குடும்பத்தில் அது வரை இருந்த நிலைமையைத் தலைகீழாக மாற்றி விடுவது எப்படி?



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உண்மையில் அந்தக் குடும்பத்தின் முக்கிய அங்கத்தினர் ஜாதகங்களும் அப்படி மாறி விடும் காலத்திலேயே அப்படி ஓர் அதிர்ஷ்டம் அல்லது துரதிர்ஷ்ட ஜாதகக் குழந்தையும் பெண்ணும் அந்தக் குடும்பத்தில் நுழைகின்றனர். அவர்களது ஜாதகங்களை ஆராய்ந்தால் அது தெரிய வரும். நல்ல நிலைமைக்கு முன்னேறப் போகும் குடும்பத்தில் அதிர்ஷ்ட ஜாதகத்தோடு குழந்தை பிறந்திருப்பதும், அதிர்ஷ்ட ஜாதகம் உள்ள மருமகள் நுழைந்திருப்பதும் தெரிய வரும். அதே போல மோசமான நிலைமைக்குப் போக இருக்கிற காலத்தில் தான் துரதிர்ஷ்ட ஜாதகத்தோடு குழந்தையும், மருமகளும் வந்திருப்பது தெரிய வரும்.

அதனால் தங்கள் நிலைமையையே மாற்றி விட்டதற்கான பெருமையையும், பழியையும் அடுத்தவர்கள் மீது போடுவது அறிவு சார்ந்த காரியமல்ல.


ஆக, ஒவ்வொருவர் விதியும் இணைந்து செயல்படுகின்றதே ஒழிய, ஒரு விதிக்கு எதிராக இன்னொரு விதி செயல்படுவதில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil





# ஜோதிடர்கள் கூறும் பலன்கள் வேறுபடுவதேன்?

ஒரே ஜாதகத்திற்கு ஒவ்வொரு ஜோதிடர் ஒவ்வொரு விதமான பலன்கள் சொல்வது பல இடங்களில் நிகழ்கின்றது. அது போன்ற நேரங்களில் யார் சொல்வதை எடுத்துக் கொள்வது, எது சரி என்கிற குழப்பம் ஜாதகர்களுக்கு எழுகின்றது. ஜோதிட சாஸ்திரம் ஒன்று தான் என்னும் போது அதைக் கற்ற ஜோதிடர்கள் சொல்லக் கூடிய பலன்கள் எப்படி வேறுபட முடியும்?

ஜோதிட சாஸ்திரம் கடல் போன்றது. அதை முழுவதும் கற்றுத் தேர்வது அத்தனை சுலபமல்ல. நிறைய நூல்களைப் படித்தும் அனுபவத்தில் நிறையப் படித்தும் தேர்ச்சி அடைந்தால் மட்டுமே பலன்களைச் சுமாராகவாவது சரியாகச் சொல்ல முடியும். அதேபோல ஜோதிட விதிகள் மட்டும் அறிந்தால் போதாது. ஒவ்வொரு விதிக்கும் சொல்லப்பட்டிருக்கும் விதிவிலக்குகள் பற்றியும் ஒருவர் அறிந்திருக்க வேண்டும். யோகங்களை அறிந்தால் மட்டும் போதாது. யோகம் இருந்தாலும் அதை வீணாக்க முடிந்த யோக பங்கங்களைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.

இதெல்லாம் அறியாமல் சில நூல்கள், சில நுணுக்கங்கள் மட்டுமே அறிந்து கொண்டு தங்களை ஜோதிடர்களாக அறிவித்துக் கொண்டு ஜாதகம் பார்க்கும் ஆட்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் சொல்லும் பலன்களில் சில சரியாக இருக்கலாம். சில பலன்கள் சரியில்லாமலும் போகலாம். சில ஜோதிடர்கள் தங்களிடம்



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உள்ள சில குறிப்பு நூல்களை மட்டுமே பயன்படுத்துபவர்களாக இருப்பதுண்டு. பொதுவாக அவர்கள் சரியாகப் பலன்கள் சொல்பவர்களாக இருந்தாலும், அந்தக் குறிப்பு நூல்களில் இல்லாத கிரக அமைப்புகள் இருந்தால் அவர்கள் அது பற்றிச் சொல்லும் பலன்கள் சரியாக இருக்காது. சில ஜோதிடர்கள் ஜாதக சாஸ்திரத்தில் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் தருபவர்களாக இருப்பார்கள். மற்றவற்றிற்கு முக்கியத்துவம் தராதவர்களாக இருப்பார்கள். அப்போதும் அவர்கள் பலன்கள் சரியாக அமையாது.

ஒரு ஜாதகத்தை அலசக் குறைந்த பட்ச காலமாவது ஒரு ஜோதிடருக்குத் தேவைப்படும். அந்த ஜோதிடர் எல்லாமே அறிந்திருந்தாலும் கூட அந்தக் குறைந்த பட்ச நேரத்தைக் கூட எடுத்துக் கொள்ளாமல் மேலோட்டமாய் ஜாதகத்தைப் பார்த்துப் பலன் சொல்லப் போனால் பலன்கள் அரைகுறையாகவே இருக்கும். இன்றைய அவசர யுகத்தில் ஒரு ஜாதகத்தை முழுவதுமாக பொறுமையாகப் பார்க்கப் பல ஜோதிடர்களுக்கு நேரம் இருப்பதில்லை ; மனதும் இருப்பதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு ஜோதிடருக்கு வாக்குப் பலிதம் வேண்டும். அதில்லா விட்டாலும் சொல்கின்ற பலன்கள் முழுமையாக இருக்காது.

சாதாரணமாகப் பார்க்கையில் சில நேரங்களில் ஜாதகங்களில் நல்லதும் கெட்டதும் சரிசமமாக உள்ளதாக இருக்கலாம். அது போன்ற சமயங்களில் மேலும் ஆழமாக ஆராய்ந்தாலே சரியான முடிவுக்கு ஒருவர் வர முடியும். இந்த ராசிகளில் இந்தக் கிரகங்கள் இருக்கின்றன என்பதை வைத்துப் பலன்களைப் பார்க்கப் போகும் போது கிரக அமைப்பு, பார்வைகள் முதலான பல விதங்களிலும் சரிசமமாக நன்மை தீமைகள் இருந்தால் அடுத்த கட்டத்திற்குச் சென்று பார்க்க வேண்டும்.

ஒரு வீட்டில் இருக்கும் கிரகம் எந்த நட்சத்திரத்தில் இருக்கிறது என்று அறிந்து அந்த நட்சத்திரத்திற்கு உரிய கிரகம் என்ன என்பதையும் பார்த்துக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு மேஷ ராசியில் ஒரு கிரகம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அந்தக் கிரகம் அஸ்வினி நட்சத்திரத்தில் இருக்குமானால் அந்த வீட்டிற்கு கேதுவின் ஆதிக்கம் உள்ளது என்றும், பரணியில் இருந்தால் அந்த வீட்டிற்கு சுக்கிரனின் ஆதிக்கம் உள்ளது என்றும், கார்த்திகை முதல் பாதத்தில் இருந்தால் அந்த வீட்டிற்கு சூரியனின் ஆதிக்கம் உள்ளது என்றும் புரிந்து கொள்ள வேண்டும். அந்த ராசியின் அஷ்டவர்க்கப் பரல்களையும் பார்க்க வேண்டும். சில சமயங்களில் கிரகங்களின் டிகிரியும் நமக்கு அதிகத் தகவல் சொல்வதாய் இருக்கக் கூடும். இப்படிக் கூடுதல் விவரங்களைப் பார்த்துப் பின் முடிவை எட்டினால் மட்டுமே தெளிவாய்ச் சொல்ல முடியும். பலர் அந்த சிரமங்களை மேற்கொள்வதில்லை என்பதே குறைபாடான பலன்களுக்கு இன்னொரு முக்கியக் காரணம்.

பலர் சொல்லும் பலன்கள் பலவிதமாக இருந்தால் அவற்றில் ஒன்று சரியாகவும், மற்றவை மேலே குறிப்பிட்ட காரணங்களுக்காகத் தவறாகவும் இருக்கலாம்.




https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# ஏமாற்று ஜோதிடர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்!



எல்லாத் துறைகளிலும் ஏமாற்றுப் பேர்வழிகள் இருக்கும் இக்காலத்தில் ஜோதிடத் துறை மட்டும் விதிவிலக்காக இருக்க முடியாது. தங்களுக்குத் தாங்களே பல பட்டங்களைச் சூட்டிக் கொண்டு எல்லாம் தெரிந்த ஏகாம்பரங்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் இந்த ஜோதிடர்களுக்கு ஜாதகத்தை விட அதிகமாக ஜாதகரின் மனநிலையை அறிந்து கொள்ளும் சாமர்த்தியம் உண்டு.

ஏமாற்றுப் பேர்வழிகள் ஜாதகம் கொண்டு செல்பவர்களிடம் குறி வைக்கும் விஷயங்கள் இரண்டு. ஒன்று பயம், இன்னொன்று பேராசை. பயமும், பேராசையும் மனிதனை எது செய்யவும் தயார்ப்படுத்தி விடுவதால் அவை இருக்கும் ஜாதகர்களை அவர்கள் சொல்லும் பூஜைகளோ, பரிகாரங்களோ செய்யாவிட்டால் படாத பாடு படுத்தி விடும் என்பது போலப் பயமுறுத்தியோ, அவர்கள் சொல்லும் பூஜைகளையும், பரிகாரங்களையும் செய்தால் உச்சாணிக் கொம்பில் கொண்டு போய் இருத்தி விடும் என்று ஆசை காட்டியோ சம்மதிக்க வைத்து விடுகிறார்கள். அந்த பூஜை அல்லது பரிகாரங்களை இவர்களே செய்வார்கள் அல்லது இவர்களின் ஆட்கள் செய்வார்கள். செலவு மட்டும் எக்கச்சக்கமாக ஆகும்.

சில ஜோதிடர்கள் அதிர்ஷ்ட ரத்தின வியாபாரிகளாகவும் இருப்பார்கள். இருபது ரூபாய்க்கு வாங்கிய ஓர் அதிர்ஷ்டக் கல்லை ஐந்தாயிரம் ரூபாய்க்கு விற்கக் கூட இவர்கள் தயங்க மாட்டார்கள். நமக்குப் புரியாத சில 'டெக்னிகல்' வார்த்தைகளை உபயோகித்து அந்தக் கல்லை வர்ணிப்பார்கள். அந்தக் கல்லை



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



விலை உயர்ந்த பெட்டகங்களில் இருந்து பயபக்தியுடன் நம் கண் முன்னே எடுப்பார்கள். அது அவ்வளவு எளிதில் கிடைக்காது என்பார்கள். இப்படி எத்தனையோ வியாபார உத்திகள். அத்தனை சொல்லியும் அவர்கள் விற்கும் கல் பெரும்பாலும் போலியாகத் தான் இருக்கும்.

சிலர் உங்களுக்கு அப்பாயின்மெண்டே சுலபமாகத் தந்து விட மாட்டார்கள். அவரைத் தேடிப் போனால் பார்வைக்கே கிடைக்க மாட்டார்கள். அவர்கள் வீட்டாரோ, உதவியாளோ பெரிய பிரபலங்கள் வந்து கூட்டிப் போனதாகவோ, பெரிய பிரபலங்களுக்கு அவர் பலன் பார்க்கப் போனதாகவோ கூடச் சொல்லலாம். கடைசியில் ஒரு நாள் எப்படியும் அவர் தரிசனம் உங்களுக்குக் கிடைத்து விடக் கூடும். அதுவே பெரிய பாக்கியம் என்று அவர் அதற்குள் உங்களை நம்ப வைத்து விட்டிருக்கவும் கூடும். சொல்லும் பலன்களுக்கு அவர் பெருந்தொகை வசூல் செய்து விடுவார்.

பொதுவாக, ஏமாற்று ஜோதிடர்கள் எப்படிப்பட்ட விதியையும் மாற்றிக் காட்டும் வித்தைகள் தங்களிடம் இருப்பதாகக் காட்டிக் கொள்வார்கள். அப்படி விதியை மாற்றிக் காட்டும் சக்தி இருக்குமானால் இறைவன் அதை அவரவரிடமே தந்திருப்பாரே ஒழிய, இப்படி அடுத்தவரிடம் தந்திருக்க மாட்டார் என்பது மட்டும் நிச்சயம். எனவே இப்படிப்பட்ட ஏமாற்று ஜோதிடர்களிடம் ஏமாறாமல் எச்சரிக்கையாக இருங்கள்.




https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# அரைகுறை ஜோதிட அறிவு அபாயமே!




ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்ற பழமொழி உண்டு. அது அரைகுறை வைத்தியத்திற்கு மட்டுமல்லாமல் அரைகுறை ஜோதிடத்திற்கும் பொருந்தும்.

அரைகுறை ஜோதிடமும், சில ஜோதிட விதிகளையும் மட்டும் தெரிந்து வைத்துக் கொண்டு முழுமையாக ஜோதிடம் தெரிந்தது போலச் சிலர் பாவித்துச் செய்து விடும் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

மூலம் நட்சத்திரமும், ஆயில்யம் நட்சத்திரமும் கொண்ட பெண்கள் திருமணத்திற்கு இந்த அரைகுறை அபிப்பிராயங்கள் பெரும் தடைகளாய் இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த நட்சத்திரம் மாமனாருக்கு ஆகாது; அந்த நட்சத்திரம் மாமியாருக்கு ஆகாது; இன்னொரு நட்சத்திரம் வீட்டின் பெரியவர்களுக்கு ஆகாது என்றெல்லாம் சொல்வது ஜோதிட அறிவு சார்ந்ததல்ல.

முன்பே சொன்னபடி ஒருவர் விதியை மற்றவர் விதி மாற்ற முடியாது. அப்படி மாற்ற முடிந்தால் ஜாதக சாஸ்திரமே பொய்த்துப் போய் விடும். உதாரணத்திற்குப் பூரண ஆயுசு உள்ள ஒருவர் வீட்டுக்கு மூலம் அல்லது ஆயில்யம் நட்சத்திரத்துப் பெண் மருமகளாக வந்து அவர் அற்பாயுசில் இறந்து போனால் அவர் ஜாதகப்படி உள்ள பூர்ணாயுசு என்பது பொய்யாகி விடுகிறதல்லவா? அப்படியானால் ஜாதகத்தை எப்படி நம்ப முடியும்...?



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஜோதிடம் சார்ந்த சில பழமொழிகள் எதுகை மோனையாக எப்போதோ, யாராலோ சொல்லப்பட்டு இருப்பவை. அவை எல்லாமே உண்மை சார்ந்தவை அல்ல. '' ஆண் மூலம் அரசாளும், பெண் மூலம் நிர்மூலம்'' என்பார்கள். எத்தனை மூல நட்சத்திரத்து ஆண்கள் அரசாண்டு வருகிறார்கள்? எத்தனை மூல நட்சத்திரத்துப் பெண்கள் நிர்மூலமாகப் போயிருக்கிறார்கள்? என்று ஆராய்ந்தால் இது வடிகட்டின பொய் என்று புரியும். அதேபோல் இன்னொரு பழமொழி 'பரணி தரணி ஆளும்' என்கிறது. எத்தனையோ பரணி நட்சத்திரத்து ஆட்கள் படாத பாடு பட்டு வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருக்கலாம்.

வெறும் நட்சத்திரத்தை வைத்துப் பலன் சொல்வது வடிகட்டின முட்டாள்தனம். ஏனென்றால், பொதுவாக நமது நட்சத்திரமாகச் சொல்வது சந்திரன் எந்த நட்சத்திரத்தில் இருக்கிறானோ அந்த நட்சத்திரத்தைத் தான். சந்திரனைப் போல மற்ற கிரகங்களும் ஒவ்வொரு நட்சத்திரத்தில் இருப்பார்கள். அந்த நட்சத்திரங்கள், ஒன்பது கிரகங்கள், பன்னிரண்டு வீடுகள், யோகங்கள், தோஷங்கள் என்று எத்தனையோ அம்சங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டும் பலன் சொல்ல ஜோதிட அறிஞர்களே திண்டாடும் போது ஓரிரண்டு வாக்கியங்களை வைத்து எல்லாம் அறிந்தது போல சிலர் நினைத்து நடப்பது பெரிய வேடிக்கையே அல்லவா?

நட்சத்திரத்தை மட்டுமல்லாமல் கிரகங்களை வைத்தும் தவறாகப் புரிந்து கொள்ளும் தன்மை நம்மிடையே பலருக்கும் இருக்கிறது. உதாரணத்திற்குச் சுக்கிரனையும் சனியையும் சொல்லலாம்.

சுக்கிர தசை என்றால் பலரும் மிக அதிர்ஷ்டமான காலம் என்று நினைத்துக் கொள்வதுண்டு. சுக்கிரன் நலமளிக்கும் கிரகமாக இருந்து அவன் மிக நல்லபடியாக இருந்தால் மட்டுமே சுக்கிரதசை அதிர்ஷ்டமளிக்கும். மகரம் மற்றும் கும்ப லக்ன ஜாதகர்களுக்கு சுக்கிரன் ஆட்சியோ, உச்சமோ அடைந்து பாவ கிரகங்களின் பார்வையோ சேர்க்கையோ இல்லாமல் இருந்தால் தான் சுக்ர தசை அதிர்ஷ்ட காலமாகும். ஆனால் மீன லக்ன ஜாதகத்திற்கு 3,



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



8 அதிபதியாக உள்ள சுக்கிரன் கெட்டுப் போனால் ஒழிய சுக்கிர தசையில் நல்லது நடக்க வாய்ப்பில்லை. மற்ற லக்னங்களுக்குச் சுக்கிரன் ஒரு நல்ல வீட்டுக்கு அதிபதி ஆனால் இன்னொரு கெட்ட வீட்டுக்கு அதிபதியாக மாறி விடுகிறார். அதனால் சுக்ரன் மத்திம பலன்களே கிடைக்கும்.

அதே போல் சனி தசை என்றாலே கெட்ட காலம் என்று சிலர் அர்த்தம் எடுத்துக் கொள்கிறோம். சனி ஆழமாகச் சிந்திக்க வைக்கக் கூடிய கிரகம். விடாமுயற்சிக்கும் சனிக்கு இணையான கிரகம் இல்லை. அதனால் ஆராய்ச்சிக்கும், விடாமுயற்சி கொண்ட உழைப்பிற்கும் சனியின் தயவு வேண்டும். அதுபோல இரும்பு சம்பந்தப்பட்ட தொழிலிற்கும் சனி நன்றாக இருத்தல் அவசியம். அவன் நன்றாக இருந்து அவன் தசை நடந்தால் இந்த விஷயங்களில் சிறப்பாக இருக்கும். மேலும் ரிஷப லக்னத்திற்கும், துலாம் லக்னத்திற்கும் சனியே யோகக்காரகன். அந்த லக்ன ஜாதகர்களுக்கு அவன் நல்ல இடத்தில் வலிமையாக இருந்தால் சனி தசை அதிர்ஷ்டமாகவே இருக்கும்.

கோசார ரீதியாக மட்டும் கிரகப் பெயர்ச்சிகளைக் கணக்கில் வைத்து நல்லது, கெட்டதை எதிர்பார்ப்பதும் அரைகுறை ஜோதிடமே. குருப் பெயர்ச்சி, சனிப் பெயர்ச்சி காலங்களில் அந்தப் பெயர்ச்சிகளைக் கொண்டே ஒவ்வொரு ராசிக் காரர்களின் வாழ்க்கையும் மாறி விடும் என்பது போன்ற பிரமையைப் பத்திரிகை ஜோதிடர்கள் ஏற்படுத்தினாலும் நான் முன்பு சொன்னது போல அது ஒரு சிறு பகுதியே.

ஜாதகத்திலேயே ஒரு கிரகத்தின் அமைப்பைப் பார்த்து மட்டுமே பலன் கூறும் பழக்கம் சிலரிடம் உள்ளது. ஒரு கிரகம் அல்லது ஒரு வீடு கெட்டுப் போனால் யாரும் பயப்பட வேண்டியதில்லை. அதைச் சரிப்படுத்த முடிந்த வேறு அமைப்புகள் அந்த ஜாதகத்தில் இருக்கலாம். ஜாதகத்தை முழுமையாக ஒட்டு மொத்தமாக ஆராய்ந்து பார்த்தால் மட்டுமே எதையுமே உறுதியாகச் சொல்ல முடியும். ஜாதக அம்சங்களைத் தனித்தனியாக மட்டுமே பார்ப்பதால் குழப்பம் மட்டுமே மிஞ்சும்.




https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# விதி வழிப் பயணத்தில் மறக்கக் கூடாத உண்மைகள்!



ஜாதக சாஸ்திரம் ஒரு கடல். பலன்கள் சரியாகச் சொல்வதோ ஒரு கலை. எத்தனை தான் கற்றிருந்தாலும், எத்தனை தான் அறிந்திருந்தாலும் ஒரு ஜோதிடர் எல்லாவற்றையும் எல்லா நேரங்களிலும் சரியாகக் கணித்து பலன் சொல்லி விட முடியாது. கேட்பவர் நேரத்தையும், சொல்பவரின் சூழ்நிலையையும் பொறுத்துப் பலன் சொல்வதில் சில தவறுகள் நேர்ந்து விடக்கூடும். ஜாதகத்திலேயே தவறு இருந்தாலும், ஜோதிடரின் ஜாதக ஞானத்தில் தவறிருந்தாலும் கூடச் சொல்லும் பலன்களில் தவறுகள் இருந்து விடக் கூடும். இதை ஜாதகர்கள் எப்போதும் மறந்து விடக் கூடாது. அதனால் ஜாதகர்கள் தங்களுக்குச் சொல்லப்படும் ஜாதகப் பலன்களை கண்மூடித்தனமாக அப்படியே நம்பி விடக் கூடாது. உங்கள் வாழ்க்கை போகின்ற போக்குக்கு ஜோதிடர் சொல்கின்ற பலன்கள் ஒத்துவருகிறதா என்று சிந்தித்த பின்னரே எதையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஜாதகம் முன்பு நாம் சேர்த்து வைத்திருக்கும் விதி என்பதைப் பார்த்தோம்.

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை."

என்றார் திருவள்ளுவர். அறத்தின் பயனை இது என்று அதிகம் விளக்க வேண்டியதில்லை. பல்லக்கைச் சுமப்பவனையும், பல்லக்கில் அமர்ந்திருப்பவனையும் பார்த்தாலே தெரிந்து



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கொள்ளலாம் என்று அவர் சொல்கிறார். நம் ஜாதகத்தைப் பார்த்தும், அதன் பலன்கள் நம் வாழ்வில் ஏற்படுவதைப் பார்த்தும் கூட அந்த உண்மையை நாம் உணர்ந்து கொண்டு விடலாம்.

நம்முடைய முந்தைய கர்மவினைப் பயன் தான் நம் விதியாக அமைந்திருக்கிறது. இப்பொழுதில்லா விட்டாலும் எப்போழுதோ நாம் எழுதிக் கொண்ட விதி அது. அதன் பலன்களை நாம் அனுபவித்தே ஆக வேண்டும்.

அந்த நல்ல பலன்களை அதிகரித்துக் கொள்ளவும், கெட்ட பலன்களைக் குறைத்துக் கொள்ளவும் வழியை நாம் அதே விதியின் வழியில் தான் தேட வேண்டி இருக்கிறது.

என்றோ செய்த நல்லதன் பலனை இன்று அனுபவிக்கிறோம் என்றால், இன்று நல்லது செய்தால் மட்டுமே நாளை நல்லதை நம் வாழ்க்கையில் எதிர்பார்க்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மாறாக ஜாதகம் நன்றாக இருக்கிறது, இன்று நாம் நன்றாக இருக்கிறோம், எல்லாம் நம் சாமர்த்தியம், நம்மை மிஞ்ச ஆளில்லை என்கிற வகையில் நம் செயல்கள் கர்வத்துடன் அமைந்தால், நல்லதல்லாதவற்றை நாம் செய்யத் துணிந்தால் நாளைய மோசமான விதியை நாம் எழுதுகிறோம் என்பதை ஒருவர் மறந்து விடக் கூடாது.

கெட்டதை அனுபவிக்க நேர்கிற போதும் என்றோ தவறு செய்ததன் பலனை நாம் இன்று அனுபவிக்கிறோம், பழைய கணக்கைத் தீர்த்துக் கொண்டு இருக்கிறோம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. முடிந்த வரை நல்லதை அந்த மோசமான காலத்திலும் செய்தால், நல்ல எண்ணங்கள், நல்ல முயற்சிகள், கவனமான நடவடிக்கைகள் என்றிருந்தால், பழைய விதியின் தீய தன்மையை இன்றைய விதியின் நல்ல தன்மையால் பெருமளவு குறைத்துக் கொள்ளலாம். இன்றில்லா விட்டாலும் நாளை இன்றைய நற்செயல்களின் நல்ல பலன்கள் நமக்குக் கிடைக்கவே செய்யும். அதை மறந்து விட்டு நம் கெட்ட காலத்தில் தீயதைச் செய்து மேலும் நம் விதியை மோசமாக்கிக் கொள்ளக் கூடாது.



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நற்செயல்களுக்கும், தீய செயல்களுக்கும் பலன்கள் உடனடியாகக் கிடைத்து விடாமல் இருக்கலாம். ஆனால் உறுதியாகக் கிடைத்து விடும் என்பதை என்றும் நினைவில் நிறுத்த வேண்டும். எல்லா காலங்களிலும் முடிந்த வரை எல்லோருக்கும் நல்லதே நினையுங்கள்; நல்லதே செய்யுங்கள். உங்கள் எதிர்கால விதியை நீங்கள் இப்போது எழுதிக் கொண்டிருக்கிறீர்கள் என்கிற உணர்விருக்கும் வரை நீங்கள் தவறிழைக்க மாட்டீர்கள்.

கடவுள் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் பரவாயில்லை. முடிந்த தான தர்மங்களைச் செய்யுங்கள். பணத்தாலோ, பொருளாலோ முடியாவிட்டாலும் முடிந்த மற்ற வகைகளிலாவது மற்றவர்க்கு உதவியாக இருங்கள். யாருக்கும் நீங்கள் தீங்கு இழைக்காதீர்கள். வார்த்தைகளால் கூட அடுத்தவரை இம்சிக்காதீர்கள். நன்மைகள் பெருகும். தீமைகள் குறையும்.

ஜாதகம் நம் ஆரம்ப இருப்புக்கணக்கு தானே ஒழிய, முடிவு இருப்புக்கணக்கு அல்ல. ஆரம்ப இருப்புக்கணக்கில் எதைக்கூட்டிக் கொண்டிருக்கிறோம்? எதை குறைத்துக் கொண்டிருக்கிறோம்? என்பதை வைத்துத் தான் முடிவுக் கணக்கு தெரிய வரும். அந்த வகையில் நாள் தோறும் நம் விதியை நாம் எழுதிக் கொண்டு தான் இருக்கிறோம். என்றோ நாம் எழுதி விட்டிருப்பதை அழிக்க முடியா விட்டாலும், இன்று நாம் எழுதுவதை நம்மால் தீர்மானிக்க முடியும். நம் ஆரம்ப இருப்பு மோசமாக இருந்தாலும் நற்செயல்கள், ஆக்கப்பூர்வ உழைப்பு, பிரார்த்தனை போன்ற நன்மைகளைக் கூட்டிக் கொண்டே சென்றால் நேற்றைய விதியை இன்றைய விதி முந்தி விடுதல் சாத்தியமே!

இந்த நம்பிக்கை ஊட்டும் சிந்தனையை உங்கள் கவனத்தில் இருத்தி விட்டு விடைபெறுகிறேன்.





https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

ஏன் ஜாதகம் பார்க்க வேண்டும்? எப்போது ஜாதகம் பார்க்க வேண்டும்? எப்போதெல்லாம் பார்க்க வேண்டியதில்லை, ஜாதகத்தைப் பயன்படுத்துவது எப்படி? நேர்மையற்ற ஜோதிடர்களிடம் ஏமாறாமல் இருப்பது எப்படி? பெயரை மாற்றினால் விதி மாறுமா? அதிர்ஷ்டக் கற்களை அணிந்து கொண்டால் கஷ்டங்கள் விலகி விடுமா? கிரகங்களின் நன்மை, தீமைகளைப் பூஜை புனஸ்காரங்களால் மாற்றி விட முடியுமா? கோசாரம் முக்கியமா, ஜாதகம் முக்கியமா? எல்லாமே ஜாதக விதிப்படி தான் என்றால் மனிதனின் அறிவுக்கும், முயற்சிகளுக்கும் மதிப்பே இல்லையா? ஜோதிட சாஸ்திரத்தில் எதை, எந்த அளவு நம்பலாம்? என்பதையெல்லாம் நேர்மையாகச் சொல்லக் கூடிய நூல் இது.



என். கணேசன்

ஆழ்மனசக்தி, ஆன்மீகம், சுயமுன்னேற்றம், வாழ்வியல், சிறுகதைகள், நாவல்கள் போன்றவை இவரது படைப்புகளில் முக்கியத்துவம் பெற்றவை. இணையதளத்தில் வெளியாகும் இவரது படைப்புகளுக்கு, ஏராளமான ரசிகர்கள் உலகளவில் உள்ளனர்.

ஜோதிடத்திலும் இவருக்கு மிகுந்த ஈடுபாடும், அனுபவமும் உண்டு. இவரது படைப்புகள் இலக்கியச் சிந்தனை உட்பட பல பரிசுகள் பெற்றுள்ளன. இவரது ஆழ்மனதின் அற்புத சக்திகள், பிரமிடுகள் தேசத்தில் ஞானத் தேடல், வாழ்ந்து படிக்கும் பாடங்கள் போன்ற நூல்கள் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றவை.

ISBN 9789381098202

9 789381 098202

₹ 90/-

www.blackholemedia.in

BLACKHOLE

https://lankathamilnews.blogspot.com